இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 62 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 24 – புதன்கிழமை 11 அக்டோபர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 62 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 24 - Wednesday 11 October 2023 - Chennai 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக

# சிறுவணிகர் ‘வரி நிலுவை சமாதானத் திட்டம்’!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 110 விதியின்கீழ் அறிவித்து திட்டம் குறித்து விளக்கம்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.10.2023) சட்டமன்றப் பேரவையில், புதிய வணிக வரி சமாதானத் திட்டம் குறித்து சட்டப்பேரவை விதி 110ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

**சென்னை, அக். 11-**

**தமிழ்நாட்டில் 95,502 சிறு வணிகர்களின் நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்படுவது உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கக்கூடிய, ‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டத்தை’ முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.**

**இதுதவிர, வணிகர்களுக்கு மேலும் பல சலுகை அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்.**

சட்டமன்றப் பேரவையில், வணிக வரி சமாதானத் திட்டம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விதி 110ன்கீழ் அளித்த அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், வணிகவரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகவும், சிறு வணிகர்களின் நலன் காத்திடுவதற்கான மேலும் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும், இந்த அரசு செயல்படுத்த உள்ள ‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’ பற்றிய அறிவிப்பை 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகின்றேன்.

தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் சம்பந்தப்பட்ட வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிகவரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

### வணிகர்கள் கோரிக்கை!

இவற்றில் பெரும்பான்மையான வழக்குகள் தமிழ்நாடு வணிக வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள். மேற்கூறிய இரு முக்கிய சட்டங்கள் மற்றும் பல இதர சட்டங்களையும் உள்ளடக்கி, கடந்த 1.7.2017 முதல் நாடு முழுமைக்கும் ஜி.எஸ்.டி (GST) சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இருந்தாலும், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச்சட்டங்களின் கீழ் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்த நிலுவைத் தொகையை திருப்பி செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் நீண்ட நாட்களாக முன்வைத்து வருகிறார்கள். இந்தக்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

> **தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசின் இந்த முடிவால் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.**

---

சிறைவாசிகள் விடுதலை: ஆட்சியில் இருந்த போது துளியும் நடவடிக்கை எடுக்காத அ.தி.மு.க.வுக்கு இப்போது

# இஸ்லாமியர் மீது என்ன திடீர் பாசம்?

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமான கேள்வி!

**சென்னை, அக். 11 -**

**“இஸ்லாமிய சிறைவாசிகள் விடுதலை குறித்து ஆட்சியில் இருந்த போது நடவடிக்கை எடுக்காத அ.தி.மு.க.வுக்கு இப்போது இஸ்லாமியர் மீது என்ன திடீர் பாசம்?” என சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமாக கேள்வி எழுப்பினார்.**

சட்டமன்றப் பேரவையில், இசுலாமிய சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பான சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு :-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் சிறைவாசிகளாக சிறையிலே அடைபட்டிருக்கக்கூடிய கைதிகளை விரைவில் விடுதலை செய்திட வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தோடு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உறுப்பினர்கள் எம்.எச். ஜவாகிருல்லா, கு. செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், சின்னத்துரை, ராமச்சந்திரன், ஜி.கே. மணி, ஜெகன் மூர்த்தி, பூமிநாதன் ஆகிய 9 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துகளுக்கு எந்த வித மாறுபாடுகளை, வேறுபாடுகளை நாங்கள் எடுத்துச் சொல்ல தயாராக இல்லை. அவை அனைத்தையும் நாங்கள் முழுமனதோடு, இந்த அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்; (மேசையைத் தட்டும் ஒலி) காத்திருக்கிறோம்.

### நீதியரசர் தலைமையில் 6 பேர் அடங்கிய குழு!

ஆயுள் சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக உரிய விளக்கங்களை இந்த மாமன்றத்துக்கு நான் முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டுச் சிறைவாசிகளில் பத்து ஆண்டுகள் மற்றும் இருபது ஆண்டுகள் தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள், மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோரின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு ஆராய வேண்டுமென்பதற்காகத்தான், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு 22.12.2021ல் இந்த அரசால் அமைக்கப்பட்டது.

உச்சநீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் இதுதொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில், இவர்களின் வழக்குகளை ஆராய்ந்தும், அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாகவும் இக்குழு அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு தன்னுடைய அறிக்கையினை 28.10.2022 அன்று அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கையில் 264 ஆயுள்தண்டனை சிறைவாசிகள் மட்டுமே குழுவால் முன்விடுதலைக்கு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளினை முன்னிட்டு, “ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்கு

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

# இஸ்ரேல் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்!

## 1,600 பேர் பலி!

*ஜெருசலேம், அக். 11 -*

*போர் வலுத்து வரும் வேளையில் இஸ்ரேலில் கூடுதல் ராணுவ வீரர்களை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 3 ஆயிரம் பேர் வரை சேர்க்கப்படலாம் என தெரிகிறது.*

*இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது தொடர்பாக ஹமாஸ் அமைப்பினர் வீடியோ வெளியிட்டுள்ளனர்.*

*எல்லையோர கண்காணிப்பு கோபுரங்கள் மீது ராக்கெட் வீசி ஹமாஸ் அமைப்பினர் தாக்கிய வீடியோ வெளியாகியுள்ளது*

*ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த காசா பகுதியை சுற்றி வளைத்து இஸ்ரேல் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது*

*பயங்கரவாத அமைப்புகளான ஐஎஸ்ஐஎஸ், அல் கொய்தா போன்றது ஹமாஸ் அமைப்பு. இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். என ஐ.நா.,வுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் தெரிவித்துள்ளார்.*

*இஸ்ரேல் ஹமாஸ் போர் எதிரொலியாக சர்வதேச சந்தையில், கச்சா எண்ணெய் விலை 5 சதவீதம் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் 84.58 டாலராக இருந்த கச்சா எண்ணெய் விலை நேற்று 89 டாலராக உயர்ந்துள்ளது.*

*இஸ்ரேல் பாலஸ்தீன் நாடுகளுக்கு இடையிலான போர் எதிரொலியால் சென்செக்ஸ் கடும் வீழ்ச்சியடைந்தது.*

*இதன்மூலம் முதலீட்டாளர்களுக்கு 4 லட்சம் கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஹமாஸ் தாக்குதலில் உயிரிழந்த இஸ்ரேலியர்களின் எண்ணிக்கை 1600ஐ தாண்டியது, 2,500க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.*

---


# கேரளாவில் நிபா வைரஸை தொடர்ந்து ‘புருசெல்லோசிஸ்’ புதிய வைரஸ்! – மருத்துவர்கள் எச்சரிக்கை!

திருவனந்தபுரம், அக். 11 –

கேரளாவில் நிபா வைரஸை தொடர்ந்து புருசெல்லோசிஸ் என்ற புதிய வைரஸ் பரவி வருவது அம்மாநில மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கேரளாவில் மீண்டும் நிபா வைரஸ் பரவ தொடங்கியது. மொத்தமாக 6 பேருக்கு நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில், இதில் இரண்டு பேர் உயிரிழந்தனர். கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் இந்த வைரஸ் வேகமாக பரவிய நிலையில், அங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், கேரள மாநிலத்தில் புருசெல்லோசிஸ் என்ற புதிய வைரஸ் பரவி வருவது அம்மாநில மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் நிபா வைரஸை தொடர்ந்து புருசெல்லோசிஸ் நோயால் பாதிக்கப்பட்ட தந்தை, மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய புருசெல்லோசிஸ் நோய் மரணத்தை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 11-10-2023

# காஷ்மீரும் வழிமொழிகிறது!

பா.ஜ.க. ஆட்சிக்கு அகில இந்திய அளவில் முற்றுப்புள்ளி வைப்பதற்கான அறிகுறி அனைத்து மாநிலங்களில் இருந்தும் வரத் தொடங்கி இருக்கிறது. இதோ காஷ்மீரும் வழிமொழியத் தொடங்கி இருக்கிறது.

கடந்த செப்டம்பர் மாதம் நடந்த பல்வேறு இடைத் தேர்தல்களில் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் வெற்றி பெற்றன. 6 மாநிலங்களில் உள்ள 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அது. உத்தரப்பிரதேச மாநிலம் கோசி தொகுதியை சமாஜ்வாதி கட்சியும், கேரள மாநிலத்தில் உள்ள புதுப்பள்ளி தொகுதியை காங்கிரஸ் கட்சியும், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள துப்குரி தொகுதியை திரிணாமூல் காங்கிரஸ் கட்சியும், ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள தும்ரி தொகுதியை ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும் கைப்பற்றியது. காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமூல் காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகியவை ‘இந்தியா’ கூட்டணியில் இடம் பெற்றுள்ள முக்கிய கட்சிகள் ஆகும்.

**கடந்த மே மாதம் நடந்த கர்நாடக மாநிலத் தேர்தலில் பா.ஜ.க. தோற்றது. கடந்த ஏழு ஆண்டு காலத்தில் பல்வேறு மாநில சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வியை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் தோல்வி, கேரளாவில் தோல்வி, பீகாரில் தோல்வி, மேற்கு வங்கத்தில் தோல்வி, ஜார்கண்ட் மாநிலத்தில் தோல்வி, ஒடிசாவில் தோல்வி, சட்டீஸ்கரிலும் தோல்வி, தெலுங்கானாவில் தோல்வி, ஆந்திராவில் தோல்வி, பஞ்சாப் மாநிலத்தில் இரண்டு முறை தோல்வி, டெல்லியில் இரண்டு முறை தோல்வி, ராஜஸ்தானில் தோல்வி - என சட்டமன்றத் தேர்தல்களில் தோற்ற கட்சிதான் பா.ஜ.க. இப்படி தோற்றுக் கொண்டே வரும் கட்சியான பா.ஜ.க. கடந்த வாரம் காஷ்மீரிலும் தோற்றுள்ளது.**

லடாக் கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுக்கு நடைபெற்ற தேர்தலில், ‘இந்தியா’ கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. 1 இடத்தை மட்டும் வெற்றி பெற்று பா.ஜ.க. படுதோல்வியடைந்துள்ளது.

**லடாக் கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுக்கு கடந்த 4ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. அதன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 30 இடங்களில் 26 இடங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில், காங்கிரஸ் 10, தேசிய மாநாட்டு கட்சி 12 இடங்களிலும் வெற்றி வாகை சூடியுள்ளன. அதாவது, ‘இந்தியா’ கூட்டணியானது 22 இடங்களைக் கைப்பற்றி உள்ளது.**

17 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க. ஒரே ஒரு இடத்தை மட்டுமே பெற்று 16 இடங்களில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது. ஜம்மு-காஷ்மீரில் சட்டமன்றத் தேர்தலை நடத்த தாமதம் செய்து வருவதாக இந்தியா கூட்டணி புகார் தெரிவித்து வரும் நிலையில், இந்த லடாக் தன்னாட்சி மலைமேம்பாட்டு கவுன்சில் தேர்தல் முடிவுகள் முக்கியமாக கருதப்படுகிறது. இந்த வெற்றியை காஷ்மீர் மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370, கடந்த 2019ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி நாடாளுமன்றத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது. இரண்டு யூனியன் பிரதேசங்களாக அதனை பிரித்தார்கள். இவை துணை நிலை ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஜம்மு-காஷ்மீர் தேர்தலை இதுவரை நடத்தவில்லை. 370 ஆவது பிரிவு நீக்கத்தை ஒட்டுமொத்த இந்தியாவும் குறிப்பாக காஷ்மீர் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு விட்டதாக பா.ஜ.க. ஒரு பிம்பத்தை கட்டமைத்தது. உண்மையாக இருந்தால் அந்த மாநிலத்தில் தைரியமாக தேர்தலை நடத்த வேண்டும். அதைச் செய்ய தைரியம் இல்லை.

**ஜம்மு காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி அளித்த பிறகு நடைபெறும் தேர்தல் இது. இதில் காங்கிரசும் தேசிய மாநாட்டுக் கட்சியும் இணைந்து வெற்றியைப் பெற்றுள்ளது. ‘லடாக் மற்றும் கார்கிலில் புதிய ஜனநாயக விடியல் ஏற்பட்டுள்ளது’ என்று ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார்.**

370 ஆவது பிரிவை நீக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கையை எதிர்த்து பல்வேறு தரப்பினர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

**இந்த வழக்குகளை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது. அப்போது மனு தாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், “இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்சநீதிமன்றம் 5 ஆண்டுகளை எடுத்துக் கொண்டதால் இது ஒரு வரலாற்றுத் தருணம். இந்த 5 ஆண்டுகளில் ஜம்மு-காஷ்மீரில் மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி கிடையாது. அம்மாநிலத்தில் சட்டப்பிரிவு 356ஐ பயன்படுத்துவதற்கு முன் அம்மாநில சட்டமன்றம் முடக்கப்பட்டது. இதற்கான அதிகாரம் ஆளுநருக்கு உள்ளதா என்பதை உச்சநீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும்.சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதை எதிர்க்கும் அதேவேளையில், ஜம்மு-காஷ்மீர் இந்தியா வின் ஒருங்கிணைந்த பகுதி என்பதில் மனுதாரர் உறுதியாக இருக்கிறார். அது நேற்றும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது; இன்றும் அது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது; நாளையும் அது அவ்வாறே இருக்கும் என்பதே மனு தாரரின் நிலைப்பாடு” என்று வாதிட்டார். விசாரணை நடைபெற்று வருகிறது.**

இப்படி 370ஆவது பிரிவு நீக்கப்பட்ட பிறகு காஷ்மீர் அமைதியாக இருக்கிறதா என்றால் இல்லை என்பதே உண்மை. அப்படியானால் எதற்காக 370 ஆவது பிரிவை நீக்கினார்கள்? தங்களது மதவாத எண்ணத்தை திருப்திப்படுத்து வதற்காக!

**அரசியல் தலைவர்கள் அனைவரையும் வீட்டுக் காவலில் வைத்து விட்டு இதனைச் செய்தார்கள். அரசியல் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்ததைப் போல மக்களை வைக்க முடியாது அல்லவா? மக்கள் வெளியில் வந்து வாக்களித்து விட்டார்கள். பா.ஜ.க.வுக்கு படுதோல்வியை தந்துவிட்டார்கள். இதோ பா.ஜ.க.வை தோல்வியுறச் செய்யும் முடிவில் காஷ்மீரும் சேர்ந்துவிட்டது. ‘இந்தியா’ கூட்டணியை காஷ்மீரும் வழிமொழிந்துவிட்டது.**

## உலக கோப்பை கிரிக்கெட் இந்தியா-ஆப்கானிஸ்தான் இன்று மோதல்

புதுடெல்லி: அக். 11-

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்திய அணி 2வது போட்டியில் ஆப்கானிஸ்தானை இன்று எதிர்கொள்கிறது. புதுடெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந்த ஆட்டம் நடக்கிறது. ஆப்கானிஸ்தானை வீழ்த்தி 2வது வெற்றியை பெற இந்தியாவுக்கு வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது. பிற்பகல் 2 மணிக்கு தொடங்கும் இப்போட்டியை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்கள் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.10.2023) முகாம் அலுவலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே போர் நடைபெற்று வரும் நிலையில்

# இஸ்ரேலில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

**சென்னை, அக். 11 -**

**இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே போர் நடைபெற்று வரும் நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே தற்போது போர் நடைபெற்று வரும் நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்தோருக்கு பின்வரும் நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அயலகத் தமிழர் நலத்துறையால் உடனடியாக உதவி எண்கள் வெளியிடப்பட்டு, அங்கு பாதிக்கப்பட்டுள்ளோர் அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர் தமிழ்நாடு அரசை உதவி எண்கள் 8760248625, 9940256444, 9600023645 மூலமாகவும், மின்னஞ்சல் nrtchennai@tn.gov.in, nrtchennai@gmail.com மூலமாகவும் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் அங்குள்ள தமிழர்களிடம் தற்போது தொடர்பு கொண்டு, சுமார் எண்பத்து நான்கு (84) நபர்களின் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் அங்கு மேற்படிப்புக்காகவும், திட்டப் பணிகளுக்காகவும் சென்றவர்கள். இதில் சில சுற்றுலா பயணிகளும் அடங்குவர். இவர்கள் பெர்சிபா (Beersheba), எருகாம் (Yeruham), பென் குரியான் (Ben Gurion), கிழக்கு ஜெருசேலம் (East Jerusalem), ஜெருசேலம் பல்கலைக்கழகம் (University of Jerusalem) மற்றும் டெல் அவிவ் பல்கலைக்கழகம் (Tel Aviv University) போன்ற இடங்களில் தங்கி உள்ளனர்.

இத்தகவல்கள் உடனடியாக ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு, அவர்களை உடனடியாக மீட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அங்குள்ள தமிழர்கள் தாங்கள் தற்போது நலமாக இருப்பதாகவும், தங்குமிடம் மற்றும் உணவுத் தேவைகளுக்கான சிரமங்கள் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளதோடு, தங்களுடன் தொடர்பில் இருக்கும் தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்து காணொளி மூலமாக தகவல் அனுப்பியுள்ளனர்.

மேலும், அயலகத் தமிழர் நலத் துறை மூலம் இஸ்ரேலில் உள்ள தமிழர்களின் இங்குள்ள குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு, நிலைமை குறித்து தொடர் தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு அங்குள்ள தமிழர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதுடன், அங்குள்ள சூழ்நிலை மற்றும் ஒன்றிய அரசின் ஆலோசனையின் அடிப்படையில் அவர்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புதிய கல்விக் கொள்கையை எதிர்த்து டெல்லியில் நடைபெறும் பேரணியில் பங்கேற்பு!

# மாணவர் அணியினர் கருத்தியல் தெளிவு பெற 4 இடங்களில் பயிலரங்கம்!

## கழக மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, அக். 11 -*

*தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (09.10.2023 திங்கட்கிழமை) மாலை, சென்னை, “அண்ணா அறிவாலயத்தில்” உள்ள கழக அலுவலகத்தில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இக்கலந்தாலோசனை கூட்டத்தில், அணியின் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், பூர்ண சங்கீதா சின்னமுத்து, ஜெ. வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு: -*

*கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மாணவர் அணி சார்பில் மாவட்டந்தோறும் பள்ளி மற்றும் கல்லூரி அளவில் “மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்” எனும் தலைப்பில் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதென 9.9.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, பள்ளி அளவில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் பங்கேற்கக்கூடிய அளவிலும், அனைத்து வகை கல்லூரி மாணவர்களும் பங்கேற்கலாம் என முடிவெடுக்கப்பட்டு, மாவட்ட அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு முதல் மூன்று இடங்களை பிடிப்பவர்களுக்கு பரிசுத் தொகையினை மாவட்ட மாணவர் அணி வழங்குவதென்றும், மாவட்ட அளவில் முதல் இடம் பெறுபவர்கள் மட்டும் மாநில அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி உடையவர்களாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு மாநில அளவிலான போட்டிகளை நவம்பர் முதல் வாரத்தில் நடத்துவதெனதீர்மானிக்கப்பட்டது.*

*09.09.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தவாறு, மாணவர் அணியில் பணியாற்றக்கூடிய மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் இயக்கத்தை முழுவதுமாக அறிந்தவர்களாகவும், கருத்தியலில் தெளிவு பெற்றவர்களாகவும், அடுத்த தலைமுறையினருக்கு திராவிட இயக்க கொள்கை, லட்சியம், கருத்துக்கள், இயக்க வரலாற்றையும், இயக்க தலைவர்களைப் பற்றிய புரிதலையும், கழக ஆட்சியில் இயற்றப்பட்ட திட்டங்கள், மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையிலும், வருகிற காலங்களில் கொள்கை, லட்சியம், கருத்தியலில் வலிமைமிக்கவர்களாக அரசியலில் களமாடக் கூடியவர்களாக மாணவர் அணியினர் விளங்க வேண்டுமென்ற கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, கழக மாணவர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு “பயிலரங்கம்” நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, நான்கு இடங்களில் நடத்துவதென்றும் முதல் கட்டமான அக்டோபர் 27 முதல் 29 வரை மூன்று நாட்கள் திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் முதல் பயிலரங்கம் பின்வரும் மாவட்டங்களுக்கு (சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு) நடைபெற உள்ளது. பிற மாவட்டங்களுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.*

*கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக மாணவர் அணியில் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் நடத்திட கடந்த 09.09.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, நேர்காணலை விரைந்து நடத்தி, பட்டியலை அணிச் செயலாளரிடம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய “தமிழ்நாடு மாணவர் மன்றம்”த்தை அவரது நூற்றாண்டில், மீண்டும் உருவாக்கிடும் பொன்னான வாய்ப்பினை நமது கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் நமக்கு அளித்துள்ளார். அதன்படி “தமிழ்நாடு மாணவர் மன்றம்”தின் இலட்சினை பற்றி இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. மாதிரி இலட்சினைகள் தயாரிக்கப்பட்டு கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பவும், ஒப்புதல் பெறப்பட்டப் பின்னர் உறுப்பினர் சேர்க்கைக்கான படிவங்களை வழங்கி, கல்லூரிகளில் அமைப்பினை ஏற்படுத்துவது சம்பந்தமாக முடிவெடுக்கப்பட்டது.*

*மாணவர் விரோத தேசிய கல்விக் கொள்கையை திணிக்கின்ற பாசிச பா.ஜ.க. அரசின் கொள்கையை எதிர்க்கும் ஜனநாயக, முற்போக்கு, மதச்சார்பற்ற கொள்கைக் கொண்ட மாணவர் அமைப்புகள், இந்திய அளவில் ஓர் இயக்கத்தை ஏற்படுத்த முதற்கட்ட கலந்துரையாடல் கூட்டம் டெல்லியில் கடந்த (12.05.2023) நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், மாநில உரிமை, இடஒதுக்கீடு, பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை பறிப்பு, பள்ளிகள் தொடங்கி கல்லூரி மற்றும் பல்கலைக் கழகம் வரையிலான கல்விக் கொள்கையை மாற்றி வரலாற்று திரிபுகளை செய்யும் தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்து, இந்திய அளவிலான மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் டெல்லியில் நடைபெறும் பேரணியில், கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.*




தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொழில்துறை சார்பில் சென்னை லீலா பேலஸில் நேற்று (10.10.2023) நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் (Industry Engagement Meet) தொழில் நிறுவனங்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் விளையாட்டு அமைப்புகள், பொது மக்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு HDFC வங்கியுடன் இணைந்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள QR code ஐ இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில் அறிமுகப்படுத்தினார்.



திருவெண்ணெய்நல்லூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் குடியிருப்பு கட்டிடத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், வருவாய் கோட்டாட்சியர் பிரவீணா குமாரி, தாசில்தார் இராஜ்குமார், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர்கள் பி.வி.ஆர்.விசுவநாதன், தே.முருகவேல், பேரூர்ச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், துணைத் தலைவர்கள் கோமதி நிர்மல்ராஜ், ஜோதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமான கேள்வி...

முதல் பக்கத் தொடர்ச்சி

பரிசீலனை செய்யும் பொருட்டு” 11.8.2023 அன்று முதற்கட்டமாக தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.8.2023 அன்று ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவர்களில் 20 சிறைவாசிகள் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அனைத்து சிறைவாசிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்துக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத்தட்டும்ஒலி)

ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதி ஆதிநாதன் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மீதமுள்ள ஆயுள் தண்டனை சிறைக் கைதிகள் விடுதலை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிறைக் கைதிகளின் முன்விடுதலை தொடர்பாக அரசின் சார்பாக மேலும் சில கருத்துக்களை இந்த அவையில் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

**பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளையொட்டி முன் விடுதலை!**

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரது வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், நான் 13.9.2021ல் அறிவித்தவாறு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 113வது பிறந்த நாளை முன்னிட்டு சிறையில் நீண்ட கால சிறைவாசம் அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையைக் குறைத்து நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் குறைத்து முன் விடுதலை செய்ய உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**335 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலை!**

அதேபோல், அறிவுரைக் கழக (Advisory Board) திட்டத்தின்கீழ் 14 ஆயுள் தண்டனை சிறைவாசிகளும், மருத்துவக் காரணங்கள் மற்றும் நீதிமன்ற ஆணைகளின் படி 15 ஆயுள்தண்டனை சிறைவாசிகளும்ஏற்கனவேமுன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அந்த வகையில், 566 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் பரிசீலனை செய்யப்பட்டு, 8.10.2023 வரை 335 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களில் 9 பேர் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். “இசுலாமிய கைதிகள் யாருமே விடுதலை செய்யப்படவில்லை; அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை” என்ற தோற்றத்தைச் சிலர் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். இந்த விஷயத்தில் சட்டரீதியான முறைப்படி தமிழ்நாடு அரசு உரிய வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த அவைக்கு நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ.தி.மு.க. ஆட்சியில் கண்மூடிக் கொண்டிருந்தது ஏன்?**

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு இந்தப் பிரச்சினை குறித்து எடுத்துப் பேசினார். இன்றைக்கு இஸ்லாமிய சிறைவாசிகள் முன்விடுதலை பற்றி அ.தி.மு.க. பேசுவதால், நான் அவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தபோது இந்த விஷயத்தில் கண்ணை மூடிக் கொண்டு இருந்ததற்கு என்ன காரணம்? (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் இப்போது அறிய விரும்புகிறேன்.

தர்மபுரியில் பேருந்தில் பயணித்த மாணவிகளை உயிரோடு பட்டப்பகலில் எரித்தவர்களை எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்விடுதலை செய்த உங்களுடைய ஆட்சியில், ஏன் இஸ்லாமிய சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) ஆணவத்தோடு அல்ல; அடக்கத்தோடு நான் கேட்க விரும்புகிற கேள்வி. ஆட்சியில் இருந்த போது இசுலாமிய சிறைவாசிகளின் விடுதலை பற்றி துளியும் நடவடிக்கை எடுக்காமல், அதுமட்டுமல்ல; குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு எல்லாவற்றையும் கண்மூடி ஆதரித்த அ.தி.மு.க., இப்போது இசுலாமிய சிறைவாசிகள் மீது காட்டக்கூடிய திடீர் பாசம் ஏன் என்று இங்கு இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும். அதைவிட சிறுபான்மை சகோதர, சகோதரிகளுக்கு மிக நன்றாகவே தெரியும் என்பதை மாத்திரம் இங்கே பதிவு செய்து, இந்த விளக்கத்தோடு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ஆளுநரின் ஒப்புதலுக்குப் பிறகு விடுதலை!

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளினை முன்னிட்டு, “ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்கு பரிசீலனை செய்யும் பொருட்டு” 11.8.2023 அன்று முதற்கட்டமாக தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.8.2023 அன்று ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவர்களில் 20 சிறைவாசிகள் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அனைத்து சிறைவாசிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்துக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

# பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு ...

முதல் பக்கத் தொடர்ச்சி

கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலித்து, இத்தகைய பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் ஒரு சமாதானத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகைகள் குறித்து பல சமாதானத் திட்டங்கள்செயல்படுத்தப்பட்டுஇருந்தாலும், புதியதோர் அணுகுமுறையோடும் கூடுதல் சலுகைகளோடும் இந்தத் திட்டம் இப்போது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முழு விலக்கு அளிக்கப்படும்!**

இந்தத் திட்டத்தின் கீழ், வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவாக வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு இந்நிலுவைத் தொகையானது முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும். ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசின் இந்த முடிவால் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட வணிகர்கள் தவிர இதர வணிகர்கள் மற்றும் நிறுவனங்கள் அனைவரும்,

ரூபாய் ஐம்பதாயிரம் முதல் பத்து இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள்,

ரூபாய் பத்து இலட்சம் முதல் ஒரு கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள்,

ரூபாய் ஒரு கோடி முதல் பத்து கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள்,

ரூபாய் பத்து கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின் கீழ் கொண்டு வரப்படுவர்.

மேற்கூறிய நான்கு வரம்புகளில் முதல் வரம்பில் உள்ளவர்கள் மொத்த நிலுவைத் தொகையில் 20 விழுக்காட்டைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம். அல்லது நிலுவையில் உள்ள வணிகவரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுத் தொகையைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம்.

இதர மூன்று வரம்புகளில் உள்ள வணிகப் பெருமக்களும், நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் குறிப்பிட்ட விழுக்காட்டைக் கட்டினால்நிலுவைவழக்குகளில்இருந்து வெளிவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுள், வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும், வரி விதிப்பை ஏற்றுக் கொள்ளாமல் மேல் முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் எனத் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**திரண்ட வட்டி முழுவதும் தள்ளுபடி!**

இந்தத் திட்டத்தின் மேலும் ஒரு முக்கியச் சலுகையாக, நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் ஏற்றப்பட ஏதுவான திரண்ட வட்டி தொகையும் (Accrued Interest) முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வணிகப் பெருமக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டம் வரும் 16.10.2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் நடைமுறையில் இருக்கும். அதாவது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி வரை இந்த சமாதானத் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

அரசின் இத்தகைய முன்னோடி முயற்சியை முழுமையாக வணிகர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காண்பதோடு, தமிழ்நாடு அரசுக்கு சேர வேண்டிய வருவாயையும் அளித்து, வணிகப் பெருமக்கள் மென்மேலும் தொழில் வளர்த்து வளம் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

## சென்னையில் 14 ஆம் தேதி மகளிர் உரிமை மாநாடு!

# நாமக்கல் மேற்கு மாவட்டத்திலிருந்து திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட மகளிர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.எம்.மதுராசெந்தில் சிறப்புரை!

நாமக்கல், அக். 11 -

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டிற்கு செல்வதற்காக நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஞாயிற்றுக் கிழமை - 08.10.2023 அன்று காலை 10:30 மணியளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் அரங்கத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அவர்கள் தலைமையில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி மற்றும் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ராதிகா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் மற்றும் மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச்செயலாளர் மருத்துவர் மகேந்திரன் மற்றும் மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருமதி.அ.ரியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், தங்கவேல், பழனிவேல், இளங்கோவன், நாச்சிமுத்து, செல்வம் நகர செயலாளர்கள் கார்த்திகேயன், செல்வம், ஞானசேகரன் பேரூர் செயலாளர்கள் கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, சமூக வலைதள பொறுப்பாளர்கள் சார்ந்த துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவே ற்றப்பட்ட தீர்மானங்கள்

அக்டோபர் 14ம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் சென்னை நந்தனம், ஒய்.எம்.சி.ஏ திடலில் மகளிர் உரிமை மாநாடு நடைபெற உள்ளது பெண்ணுரிமை போற்றும் இந்த மாநாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் இருந்து 1000க்கும் மேற்பட்ட கழகத்தின் மகளிர் அணி சார்ந்த அனைவரும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் அனைத்து மகளிர் சகோதரிகளையும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது எனவும், கழக மகளிர் அணியால் உருவாக்கப்பட்ட வினாடி வினா செயலியை அதிக பேர் பயன்படுத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், ஒன்றிய, நகர, பேரூர்களில் மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கையை தீவிர படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் மாவட்டக் கழகச் செயலாளர் பேசுகையில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்றிட கழக ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் இலவசப் பேருந்து பயணம், காலை உணவுத் திட்டம், மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி, புதுமை பெண் திட்டம், கொரோனா காலத்தில் குடும்ப தலைவிகளுக்கு நான்காயிரம் ரூபாய் வழங்கி இது போன்ற எண்ணற்ற பல சாதனைகளை செய்துள்ள கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டு கின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி, மாவட்ட சமூக வலைதள பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.



மன்னார்குடியில் நடைபெற்ற மாபெரும் வேலை வாய்ப்பு முகாமில் பணி ஆணைகளை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கி வாழ்த்தினார்.

## இந்துக்கள் வழிபடும் கோயில்களை எல்லாம் மேம்படுத்தித் தருகிறோம்! ஆனாலும்

# நாங்கள் ஒருபோதும் சனாதனத்தை ஏற்பவர்கள் அல்ல!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!

**சென்னை, அக்.11–**

**சட்டப்பேரவையில் நேற்று, முதல் துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் பேசுகையில் குறுக்கிட்டு விளக்கமளித்த, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ‘‘நாங்கள் இந்துக்கள் வழிபடும் கோயில்களை எல்லாம் மேம்படுத்தித் தருகிறோம். ஆனாலும், நாங்கள் ஒருபோதும் சனாதனத்தை ஏற்பவர்கள் அல்ல!’’ என்று தெளிவுறக் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**திருமதி வானதி சீனிவாசன்:** கோவை தெற்குத் தொகுதியிலே காந்திபுரம் மேம்பாலம் பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கண்ணனூர் மாரியம்மன் கோயிலை மேம்பாலத்திற்காக அந்த மக்கள் விட்டுக்கொடுத்தார்கள்,



இடித்தார்கள். இதுவரைக்கும் அந்தக் கோயில் அங்கு கட்டப்படவில்லை. இதுதொடர்பாக நான், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தகவல் கொடுத்திருக்கிறேன்.

60 ஆண்டு காலம் பூர்த்தி செய்து, நல்ல நிறைவாக ஒரு திருமணத்தை திருக்கடையூரில் அமைச்சர் அவர்கள் நடத்தினார்கள். கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்த சனாதன தர்மத்தின்படி 100வது ஆண்டும் அவர் அதேமாதிரி கோயிலில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென பிரார்த்தனை செய்து, எங்கள் தொகுதி கோயிலை உடனடியாக அவர் அங்கு அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** ஒரு மனிதனுக்கு சஷ்டியப்த பூர்த்தி பூஜை என்பது அறுபது ஆண்டுகள் நிறைந்து, மத நம்பிக்கை இருப்பவர்கள், தெய்வ நம்பிக்கை இருப்பவர்கள் வழிபடுவது அவர்கள் தனிப்பட்ட உரிமை. அதற்காக நீங்கள் சொல்கின்ற சனாதனத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்பது அல்ல.

நாங்கள் இந்துக்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்துக் கடவுள்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்துக்கள் வழிபடுகின்ற ஆலயங்களை மேம்படுத்தித் தருகின்றோம். ஆகவே, நாங்கள் சஷ்டியப்த பூர்த்தி பூஜை செய்ததாலும், நீங்கள், பெண் கல்வி உரிமையை எதிர்ப்பதை நாங்கள் எந்நாளும் எதிர்ப்போம். நீங்கள் ஏற்றுக்கொள்கின்ற உடன்கட்டை ஏறுதலை எந்நாளும் எதிர்ப்போம். நீங்கள் ஏற்றுக்கொள்கின்ற குலக் கல்வியை எந்நாளும் எதிர்ப்போம். ஆனால், இந்துக்களை நாங்கள் முழுவதுமாக ஏற்றுக்கொள்வோம் என்று இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை - காந்திபுரம் மேம்பாலம் பகுதியிலே எடுக்கப்பட்ட திருக்கோயில் என்பது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பகுதியிலே அமைந்திருந்தது. உங்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. தகுந்த இடம் கிடைத்தவுடன், அந்தத் திருக்கோயிலை மீண்டும் கட்டித் தருவதற்குண்டான நடவடிக்கையை நிச்சயம் இந்து சமய அறநிலையத் துறை எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### இந்தியாவிற்கு விடியல் - எங்கள் தலைவர் முன்னெடுத்துள்ள 'இண்டியா' கூட்டணியால் ஏற்படும்!

# நாடே திரும்பிப் பார்க்கும் தலைவராக - முதல்வர் மு.க.ஸ்டாலின் விளங்குகிறார்!

## சட்டப்பேரவையில் - எழும்பூர் இ.பரந்தாமன் பேச்சு!



சென்னை, அக். 11 -

சட்டப்பேரவையில் நேற்று, முதல் துணை மதிப்பீடுகள்மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசிய எழும்பூர் தொகுதி கழக உறுப்பினர் இ.பரந்தாமன், "இந்தியாவிற்கு விடியல்; எங்கள் தலைவர் முன்னெடுத்துள்ள 'இண்டியா' கூட்டணியால் ஏற்படும்" என்றும், "இந்தியாவே திரும்பிப் பார்க்கும் தலைவராக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார்" என்றும் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :-

கடுமையான நிதி நெருக்கடி இருக்கிற காரணத்தால், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையை தாக்கல் செய்திருக்கிறார். அதே போன்று, நேர நெருக்கடியில் உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். எனக்கு இடையூறு இல்லாமல் 5 நிமிடங்கள் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்கள் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மார்ச் 20 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையை ஒட்டி, ரூ.2,893.15 கோடி அளவிலான கூடுதல் நிதி தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு நிதியமைச்சர் அவர்கள் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய 6, 7 முக்கியமான செலவினங்கள் என்பது இந்த அரசு எந்தளவுக்கு ஒவ்வொரு திட்டத்தையும் ஆராய்ந்து, நிதி நிலை அறிக்கையில் அறிவித்தாலும்கூட, அவை தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத்தான் வருகிற பருவமழை காலத்தில், மழை வெள்ளத்தில் சென்னை, கடலூர் போன்ற பகுதிகளெல்லாம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக சுமார், 305 கோடி ரூபாயை கூடுதலாகக் கேட்டு வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்கிறபோது, இந்த அரசைவிட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் எடுத் திருக்கிற நடவடிக்கையைப்போல் வேறு எந்த அரசும் எடுக்கவில்லை என்பதை இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் தலைவராக முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். அவர்கள் பாணியில் சொல்ல வேண்டுமென்றால் I.N.D.I.Aவே திரும்பிப் பார்க்க வைக்கக்கூடிய தலைவராகவும், எங்கள் இதயம் நிறைந்த தலைவர் இருக்கிறார். தமிழ்நாட்டில் 10 ஆண்டுக்கால இருளை விரட்டி விடியலைத் தந்த உதயசூரியன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அந்த வெளிச்சம் அடுத்தடுத்த மாநிலங்களுக்கும் தற்போது பரவிக் கொண்டிருக்கிறது.

மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்தை கர்நாடகம் பின்பற்றுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டத்தை தெலங்கானா பின்பற்றுகிறது. திராவிட மாடல் ஆட்சியின் மருத்துவக் கட்டமைப்பை, ஏன், குஜராத் மாடல் ஆட்சி நடக்கும் மாநிலத்தவர்கூட இங்கு வந்து பாராட்டுகிறார்கள். அடுத்த மாதம் நடக்கவிருக்கும் 5 மாநில சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதிகளும்கூட திராவிட மாடல் ஆட்சியின் நகல்களாக இருந்தால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழ்போல், இந்தியாவின் எல்லாத் திசைகளுக்கும் வழிகாட்டும் ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி விளங்கிக்கொண்டிருக்கிறது, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான அரசு. தமிழ்நாட்டிற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பே விடியல் ஏற்பட்டுவிட்டது. இந்தியாவிற்கு அடுத்தாண்டு விடியல் ஏற்படும். அதுவும் எங்கள் தலைவர் பங்கெடுத்துள்ள INDIA கூட்டணியினால் ஏற்படும் என்பதை இந்தநேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பா.ஜ.க. கட்சியைச் சார்ந்த அன்புச் சகோதரி திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் நேற்றைக்கு ஒரு கருத்தைத் தெரிவித்தார். இன்றைக்கும் ஒரு கருத்தைத் தெரிவித்தார். ஆனால், அவர்களுக்கு பதிலைக் கேட்பதற்கு பொறுமையில்லை; அவையை விட்டு வெளியேறுகிறார்கள்.

'காவிரி விவகாரத்தில் தி.மு.க. அரசின் இயலாமையைக் காட்டுகிறது' என்று அம்மையார் அவர்கள் பேசினார்கள். இந்த அவையில் இல்லையென்றாலும்கூட அவையினுடைய நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டிருப்பார் என்று நம்புகிறேன்.

'காவிரி விவகாரத்தில் தி.மு.க. அரசினுடைய இயலாமையைக் காட்டுகிறது' என்று பேசிய அம்மையாருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

2019 பாரதிய ஜனதா கட்சியினுடைய தேர்தல் அறிக்கை பக்கம் 21 point number 10ல் Linking of Rivers என்று தலைப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகாலம் நிறைவு பெறுகிறது. இன்னும் நதிகளை இணைக்கவில்லை என்று சொன்னால், இயலாமை யாருக்கு? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கா அல்லது ஒன்றியத்தில் ஆட்சி செய்கிற பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

அதையும் தாண்டி, இன்றைக்கு அந்த அம்மையார் அவர்கள் பேசுகிறபோது, 'மகளிர் உரிமைத் தொகை திட்டம் எல்லா பெண்களுக்கும் கிடைக்கவில்லை. நீங்கள் விதிகளை வைத்திருக்கிறீர்கள்; கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறீர்கள்; எல்லோருக்குமான பெண்க ளுக்கான, எல்லா மகளிருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் செய்திருந்தால் நன்றாக இருக்கும்' என்று சொல்கிறார். நல்ல விஷயம்தான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவர்களிடம் நான் இந்த அவையின் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கெல்லாம் ரூ.15 இலட்சம் தருகிறேன் என்று சொன்னாரே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், எங்கள் அக்கவுண்டில் 15 இலட்சம் ரூபாயை கொடுத்துவிட்டு, பிறகு இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருந்தால், அது நியாயமாக இருந்திருக்குமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே நேற்றைக்குப் பேசினார்கள். துணிச்சல்; யாருக்கு துணிச்சல்? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துணிச்சலைப் பற்றி நம்முடைய முதலமைச் சரைப் பார்த்து கேட்டிருக்கிறார். (குறுக்கீடு)

துணிச்சல் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) கொள்கையில் துணிச்சலாக, (குறுக்கீடு) சற்று பொறுங்கள். நான் பேசிவிடுகிறேன். நான் பேசுவதில் தவறு இருந்தால், நீங்கள் திருத்துங்கள். கொள்கையில் துணிச்சலாக நின்று, முத்தமிழறிஞர் கலைஞரின் மகன் நெருக்கடி நிலை காலத்தில் 'மிசா' சிறைவாசத்தைத் துணிச்சலோடு எதிர்கொண்டவர், நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு வகையான குற்றச்சாட்டுகள், வழக்குகள் மூலமாக அரசியலுக்குள் நுழைந்தவர்களில் சிலர், இன்றளவிலும் அதே போன்ற குற்றச்சாட்டுகள், வழக்குகளில் சிக்கியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் ஏன் அழுத்தம் தரவில்லையென்று கேட்டார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு 2018ல் வந்தது. அதே 2018 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள்மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை திரு. சந்திரபாபு நாயுடு அவர்களின் கட்சி கொண்டு வந்தது. அப்பொழுது, அந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதற்கு முடியாத அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் நாடாளுமன்றத்தை முடக்குகின்ற கபட நாடகத்தை ஆடி, இன்றைக்கு துணிச்சலைப் பற்றி, . . .

இவ்வாறு அவர் பேசினார்.



திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர், மறைந்த அ.ராசேந்திரன் அவர்களின், உடலுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், வ.அன்பழகன், இரா.ஸ்ரீதரன், கே.வி.சேகரன், க.லோகநாதன், சேத்துப்பட் முருகன் உட்பட ஏராளமானோர் உடன் அஞ்சலி செலுத்தினர்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்ட

# அவைத்தலைவர் போளூர் அ.ராசேந்திரன் மறைவு!

## அமைச்சர் எ.வ.வேலு - கழக முன்னோடிகள் அஞ்சலி!



போளூர், அக். 11-

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான போளூர் அ.ராசேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் தகவலறிந்து பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கழக முன்னோடிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான போளூர் அ.ராசேந்திரன் அவர்கள் இயற்கை எய்தினார்.

இறுதி அஞ்சலிக்காக இவருடைய உடல் போளூர் அடுத்த தச்சாம்பாடி கிராமத்தில் வைக்கப்பட்டிருந்தது.

செய்தியை கேள்விப்பட்டவுடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவைத்துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர், விரைந்து வந்து அவரது உடலுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி னர்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், வேலூர் தி.அ.முகமது சகி, கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், வ.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், கே.வி.ராஜ்குமார் மாவட்ட துணைச்செயலா ளர் க.லோகநாதன், நகர செயலாளர்கள் கோ.தனசேகரன், சேத்பட் முருகன், மாவட்ட அமைப்பாளர்கள் எவரஸ்ட் நரேஷ்குமார், என்.கே.பாபு உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

மறைந்த வழக்கறிஞர் அ.ராசேந்திரன் அவர்களுக்கு வயது 85. இவர் தி.மு.கழகத்தில் சேத்துப்பட்டு ஒன்றிய செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் என பல பொறுப்புகளில் பணியாற்றியவர். நான்கு முறை சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, 1989, 1996 ஆகிய சட்டமன்ற தேர்தல்களில் வெற்றிபெற்றார். போளூர் அடுத்த தச்சாம்பாடி கிராத்தில் இருந்து புறப்பட்ட இறுதி ஊர்வலகம், மயானத்தை சென்றடைந்தது. அங்கு அவருக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாலை அணிவித்து இரங்கல் உரை நிகழ்த்தினார்.

அவரது இரங்கல் உரையில் தச்சாம்படி கிராமத்தில் பிறந்து, ஊராட்சிமன்ற தலைவர், பால் கூட்டுறவு சங்கத்தலைவர், கூட்டுறவு வங்கித்தலைவர், சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகளை வகித்தவர் அ.ராசேந்திரன், திறமையான மூத்த வழக்கறிஞர். இவர் கழகத்திற்காக அரும்பாடு பட்டவர். இவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தின ருக்கும், கழக தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

இறுதி ஊர்வலத்தில் கழக தோழர்களும், நிர்வாகிகளும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் செயல்படும் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் திறனோடு, பன்முகத் திறன்களை வெளிக்கொணர்வதற்காக 33 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேயர் திருமதி ஆர். பிரியா முன்னிலையில் நேற்று (10.10.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மற்றும் அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### காவிரி விவகாரம்: சட்டப் பேரவையிலிருந்து வம்பு செய்து வெளிநடப்பு!

# தமிழ்நாட்டின் நலனுக்கும், விவசாயிகளுக்கும் பா.ஜ.க. செய்துள்ள அப்பட்டமான துரோகம்!


## "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 11 -

காவிரி விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையிலிருந்து பா.ஜ.க. வம்பு செய்து வெளிநடப்பு செய்துள்ளது தமிழ்நாட்டின் நலனுக்கும், விவசாயிகளுக்கும் செய்துள்ள அப்பட்டமான துரோகம் என "தீக்கதிர்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டுமென்றும், இதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டு மென்றும் வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த



தீக்கதிர்

2023 அக்டோபர் 10 செவ்வாய்க்கிழமை

பாஜகவின் இரட்டை வேடம்

தமிழ்நாடு சட்டமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டுமென்றும், இதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டு மென்றும் வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் சட்டப் பேரவையிலிருந்து வெளி நடப்பு செய்திருப்பதன்மூலம் பாஜகவினர் தங்கள் இரட்டை வேட நாடகத்தை மீண்டும் அரங்கேற்றியுள்ளனர். கர்நாடகத்தில் பாஜகவி

தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் சட்டப் பேரவையிலிருந்து வெளி நடப்பு செய்திருப்பதன்மூலம் பாஜகவினர் தங்கள் இரட்டை வேட நாடகத்தை மீண்டும் அரங்கேற்றியுள்ளனர். கர்நாடகத்தில் பா.ஜ.க.வினர் தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடக்கூடாது என்று தொடர்ந்து அடம்பிடித்து வருகின்றனர். இரண்டு முறை அந்த மாநிலத்தில் நடைபெற்ற பந்த் போராட்டத்திற்கு பா.ஜ.க.வினர் முழு ஆதரவு தெரிவித்துள்ளனர். காவிரி மேலாண்மை வாரியம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு கூறிய போதும் ஒரு சொட்டு நீர் கூட தரக்கூடாது என கர்நாடக மாநில பா.ஜ.க.வினர் கூறுகின்றனர்.

காவிரி மேலாண்மை வாரியம் கூறியுள்ள குறைந்தபட்ச அளவு கூட தமிழகத்திற்கு தண்ணீர் கிடைக்காத நிலையில் காவிரி டெல்டா பகுதியில் பயிரிடப்பட்ட பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதிர்ச்சியில் ஒரு விவசாயி உயிரிழக்கும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த பின்னணியில் தமிழ்நாட்டின் குரலை ஒருமனதாக கர்நாடகத்திற்கும், ஒன்றிய அரசுக்கும் எடுத்துச் சொல்லும் வகையில்தான் முதல்வர் கொண்டு வந்த தனித் தீர்மானம் அமைந்துள்ளது. தமிழகத்தின் நியாயத்தையும், விவசாயிகளுக்கும், உணவு உற்பத்திக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் முதல்வர் எடுத்துரைத்துள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றி யுள்ளன.

ஆனால் தமிழக பா.ஜ.க.வின் நிலை கர்நாடக பா.ஜ.க.வின் நிலையை ஆதரிப்பதாக அமைந்துள்ளது. தமிழக முதல்வரின் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்து தி.மு.க. அரசு இரட்டை நிலைப்பாடு எடுப்பதாக பொய்யுரைக்கிறார் வானதி சீனிவாசன். நதிகள் தேசியமயம் எனும் உடனடி சாத்தியமில்லாத விசயத்தையும், மாநில அரசுகளின் உரிமையை பறிக்கும் ஒன்றிய அரசின் அணைகள் பாதுகாப்பு சட்டத்தையும் தீர்மானத்தில் இணைக்க வேண்டுமென பா.ஜ.க. வம்பு செய்து வெளிநடப்பு செய்துள்ளது. இது தமிழ்நாட்டின் நலனுக்கும், விவசாயிகளுக்கும் செய்துள்ள அப்பட்டமான துரோகமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நடிகர் நாசர் தந்தை பாஷா மறைவு!

## தொலைபேசி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல்!

சென்னை, அக். 11 –

மூத்த நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவருமான நாசரின் தந்தை பாஷா வயது மூப்பின் காரணமாக நேற்று மறைவெய்தினார்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

மூத்த நடிகரும் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவருமான நாசர் அவர்களின் தந்தை பாஷா அவர்கள் வயது மூப்பு காரணமாக மறைவெய்தினார் என்றறிந்து வருந்துகிறேன். தந்தையின் மறைவால் வாடும் நாசர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்..

மேலும் முதல்வர் அவர்கள் நாசர் அவர்களை தொலைப் பேசி வாயிலாக தொடர்பு கொண்டு அவரது தந்தை மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து ஆறுதல் கூறினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கெ. பழனிசாமி
### அக்டோபர் 11 (2016)



தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் பி.குப்புசாமி
### அக்டோபர் 11 (2002)



இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மகத்தான இந்த மனித நேயத் திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவோம்! உயரிய எண்ணத்தோடு நாம் ஒருங்கிணைந்து செயல்படுவோம்!

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி ; தமிழ்நாட்டு மகளிரின் வெற்றி!

## சட்டப்பேரவை விளக்க உரையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக்.11-

**சட்டப்பேரவையில் நேற்று, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடர்பான சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மகத்தான இந்த மனித நேயத்திட்டத்தின் வெற்றியை உறுதிப் படுத்துவோம்! உயரிய எண்ணத்தோடு நாம் ஒருங்கிணைந்து செயல்படுவோம்! என்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி; தமிழ்நாட்டு மகளிரின் வெற்றி! என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று, இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பதிலுரை வருமாறு:

முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்திய ஒன்றியமே பாராட்டி, பின்பற்றிக் கொண்டிருக்கக்கூடிய, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பற்றி (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்களான, தோழர் அண்ணன் நாகைமாலி அவர்களும், காங்கிரஸ்பேரியக்கத்தைச்சார்ந்த அண்ணன் ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் உதயகுமார் அவர்களும் அளித்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பிற்குப் பதில் அளிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அண்ணன் நாகைமாலி அவர்கள் நாகை மாவட்டத்தைச் சார்ந்தவர். இன்னும் சொல்லப்போனால், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளை கிராமமே அண்ணனுடைய கீழ்வேளூர் சட்டப்பேரவைத் தொகுதியில்தான் வருகிறது. அந்தவகையில், அவர் எங்கள் அத்தனை பேருக்கும் சட்டமன்ற உறுப்பினர். விவசாயக் கூலி வேலைகளைச் செய்யும் மகளிர் நிறைந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்,

அதேபோல, மீனவப் பெண்கள் நிறைந்த குளச்சல் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

### தமிழ்நாடு வரலாற்றிலேயே முதல்முறை!

ஆகவேதான், தகுதியுள்ள உழைக்கும் மகளிர் அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயன்கள் சென்றடைய வேண்டுமென்ற அக்கறையுடன் இந்தக் கவன ஈர்ப்பை அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

'சொன்னதைச் செய்வோம், செய்வதை மட்டுமே சொல்வோம்' என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 115 வது பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி அன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைக் காஞ்சிபுரத்தில் துவங்கி வைத்தார்கள். 1 கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரத்து 198 மகளிருடைய வங்கிக் கணக்கில் ஒரே நேரத்தில் தலா ஆயிரம் ரூபாய் வீதம், ஆயிரத்து அறுபத்து ஐந்து கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டது. இது தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இது முதல் முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைத் தந்த முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு மகளிர் ஒவ்வொருவரும் கொண்டாடி வருகின்றனர், பாராட்டி வருகின்றனர். இந்தத் திராவிட மாடல் சாதனையை இந்தியாவின் பல மாநிலங்கள் இப்போது பின்பற்றி வருகின்றன. முதலமைச்சர் அவர்களுக்கு கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டில் துவங்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று கலைஞருடைய பெயரில் அனுமதி அளித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்தும் வாய்ப்பை நம்முடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்குத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இரவு பகல் பாராமல் உழைத்த நம்முடைய தலைமைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அமைச்சர்கள், அதிகாரிகள், தன்னார்வலர்கள் என அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏனென்றால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய ப்ராசஸ் மிகவும் பெரியது; இன்னும் சொல்லப்போனால் புதியது.

### வெளிப்படைத் தன்மை

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று விண்ணப்பங்களை வழங்கியதில் ஆரம்பித்து, மகளிரை விண்ணப்பப் பதிவு நடைபெறுகின்ற முகாம்களுக்கு வரவைத்து அவர்களுடைய விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவு செய்தோம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ஒரு கோடியே 62 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் எந்த ஒரு அழுத்தமோ, குறுக்கீடோ இல்லாமல் முழுக்க முழுக்க தகுதி வாய்ந்த 1,06,52,198 மகளிர் இந்தத் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டார்கள்.

குடும்பத்திற்காக தங்கள் வாழ்நாளெல்லாம் எந்தவித பிரதிபலனும் பாராமல், எதிர்பார்க்காமல், ஓயாமல் உழைக்கும் மகளிருடைய உழைப்பை அங்கீகரிக்கும் விதமாகத்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது தமிழ்நாடு மகளிர் உழைப்பிற்கு அங்கீகாரம் மட்டுமின்றி, மகளிர் சமூகத்தில் சுயமரியாதையோடு வாழவும், சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் வகையிலும் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் என்கின்ற வீதம் ஆண்டுக்கு ரூபாய் 12 ஆயிரம் இந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. இந்தத் தொகையானது உண்மையிலேயே யாருக்குப் பயனுள்ளதாக இருக்குமென்பதை தீர்மானிக்க, கழக அரசு மிகக் கவனமுடன் ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வுகளின்படிதான் பயனாளிகள் வகைப்படுத்தப்பட்டனர்.

### சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க உதவி மையம்!

வருமான வரி செலுத்துபவர்கள், அரசு ஊழியர்கள், அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், பெரும் தொழில் நிறுவனம் நடத்துபவர்கள், சொந்தப் பயன்பாட்டிற்கு car கள் வைத்திருப்பவர்கள், 10 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருப்பவர்கள், ஆண்டிற்கு இரண்டரை இலட்சத்திற்குமேல் அதிகமான வருமானம் ஈட்டுகின்ற பிரிவினர் மட்டுமே இந்தத் திட்டத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டனர்.

விண்ணப்பம் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரணங்களை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் செல்போன் எண்ணிற்கே அரசு சார்பில் அனுப்பிவைக்கப்பட்டது. அந்த வகையில் விண்ணப்பித்த ஒரு கோடியே 63 இலட்சம் பேரில், 54 இலட்சம் பேர் திட்டநிபந்தனையைப் பூர்த்தி செய்யாதவர்களாயினர். மேலும் இந்தத் திட்டம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 1,400 உதவி மையங்களும் ஏற்படுத்தப்பட்டன.

யார் யாருக்கெல்லாம் இந்த ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமோ அவர்களைக் கண்டறிந்து அரசின் நிதியை கவனமுடன் கையாண்டு, மிகச் சரியான பயனாளிகளுக்கு வழங்க கழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்துச் செயல்படுத்தி வருகிறார்கள். முதலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டதும் களத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற feedbacks அடிப்படையில் ஒவ்வொரு விஷயத்தையும் சரிசெய்தார்கள். அந்த வகையில்தான் மாற்றுத்திறனாளிகள் குடும்பத்தினர், திருநங்கையர், முதியோர் உதவித்தொகை பெறுவோர் கொண்ட குடும்பத்தினரும் பயனடையும் வகையில் இந்தத் திட்டத்தின் விதிகள் மாற்றியமைக்கப்பட்டன.

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான தகவலை பதிவு செய்ய விரும்புகின்றேன். முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின்படி நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக 2,06,000 மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களும், 4,72,000 முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து என்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்ட போது, மகளிர்மட்டுமன்றி திருநங்கைகளும், திருநம்பிகளும் கட்டணமின்றி பயணிக்கின்ற நிலைமையை ஏற்படுத்தினார்கள்.

### திருநங்கையருக்கு மகளிர் உரிமைத் தொகை!

அதேபோலவே, இன்றைக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழும் திருநங்கையர் பயனடையலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். திருநங்கையர்களுடைய விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவர்கள் இந்த விதிமுறைகளுக்கு ஏற்றவர்களாக இருக்கின்ற பட்சத்தில் அவர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப் பட்டுள்ளது.

குடும்ப அட்டையில் பாலினத்தை மாற்றாத காரணத்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் பயனடையும் வாய்ப்பை இழந்த 890 திருநங்கையர் அடையாளம் காணப்பட்டு அவர்களும் இந்தத் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி, மாநில அரசு வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத் தொகையை மினிமம் பேலன்ஸ் வைத்திருக்கவில்லை, ஏற்கெனவே எடுத்த லோனுக்கு EMI செலுத்தவில்லை எனப் பிடித்தம் செய்வதாக சில புகார்கள் வந்தன. அதனைத் தடுக்கும் வகையில் உடனடியாக வங்கியாளர்கள் குழுமக் கூட்டத்தை நடத்தி, அதில் வங்கிகள் தங்களது நிர்வாகச் செலவினங்களுக்கோ அல்லது பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற கடன்களுக்கோ பிடித்தம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. இது குறித்து, வங்கிகளுடன் மாநில அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் (MoU) செய்துள்ளது. இந்தத் தகவலை அந்தந்த வங்கிகளுக்குத் தெரிவித்து, பிடித்தம் செய்யப்பட்ட தொகையை மீண்டும் பயனாளிகளுடைய வங்கிக் கணக்குகளுக்குத் திரும்பச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மேல்முறையீடு

மாநில அரசினுடைய நிதியை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகள் பிடித்தம் செய்யக் கூடாது என்பதை ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளோம். பொதுவாக, எந்தத் திட்டத்திலும் திட்டப் பயனாளிகள் தேர்வு குறித்து மேல்முறையீடு செய்வதற்கு வழிவகை இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், மேல்முறையீடு செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எந்தவொரு தகுதியான மகளிரும் உரிமைத்தொகையைப் பெறுவதிலிருந்து விடுபட்டுவிடக் கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு மேல்முறையீடு செய்து, இத்திட்டத்தின் பயனைப் பெறலாம் என்ற நிலையை நம்முடைய அரசு ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் தாங்கள் இத்திட்டத்தில் பயனாளியாகத் தகுதியானவர்கள் என்று எண்ணுகின்ற பட்சத்தில் அவர்கள் 'இ'-சேவை மையங்கள் மூலம் மேல்முறையீடு செய்யலாம். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து இதுவரை, 9,24,000 மேல்முறையீட்டு மனுக்கள் வந்துள்ளன. இந்த மனுக்களை சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர்கள் ஆய்வு செய்து நவம்பர் 30 ஆம் தேதிக்குள் உரிய தீர்வினை அளிப்பார்கள் என்பதை இங்கு கூற விரும்புகிறேன்.

இந்த மேல்முறையீட்டுப் பணிகளை மேற்கொள்ள வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு 12-10-2023 நாளை மறுநாள் வியாழக்கிழமை அன்று சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே விண்ணப்பிக்காத பயனாளிகளும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கலாம். அதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும்.

### கவனமாகச் செயல்படும் கழக அரசு

எந்தவொரு தகுதியான பயனாளிகளின் பெயரும் விடுபட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு நம்முடைய கழக அரசு மிகக் கவனமாகச் செயல்பட்டு வருகின்றது. அந்தந்தத் தொகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்கின்ற மகளிரை இத்திட்டத்தின்கீழ் பயனடையச் செய்வது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுடைய பொறுப்பு, கடமை, உரிமை ஆகும். ஆகவே, உங்களுடைய சட்டமன்றத் தொகுதியில் எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தும், மகளிர் யாரேனும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்திலிருந்து விடுபட்டிருந்தால் உடனடியாக அது தொடர்பான தகவல்களை நம்முடைய சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளரிடம் அளிக்கலாம்.

எந்தத் தொகுதியிலிருந்து எத்தனை மனுக்கள் வந்தாலும் அதனைக் கள ஆய்வு செய்து இந்தத் திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிருக்கு நிச்சயம் கலைஞர் உரிமைத்தொகைத் திட்டத்தின்கீழ் உரிமைத்தொகை சென்றடையும் என்ற உறுதிமொழியை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தற்போது, இந்தநேரத்தில் மீண்டும் நானும் உறுதியளிக்கின்றேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி என்பது தமிழ்நாட்டு மகளிருடைய வெற்றியாகும். இதனை உறுதிப்படுத்த வேண்டுமென்ற உயரிய எண்ணத்தோடு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று இம்மாமன்றத்தின் வாயிலாக அழைப்பு விடுக்கின்றேன்.

இத்திட்டத்தின் பயனாளியாகக் கூடியவர்கள் யார், யார் என்பதை அரசு எடுத்துக் கூறியது, தமிழ்நாட்டில் மொத்தம் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களில் 64 இலட்சம் அட்டைதாரர்கள் தாங்களாகவே புரிந்துகொண்டு இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பம் ஏதும் அளிக்கவில்லை. அவர்களுக்கு இந்தநேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கத் தகுதியைப் பெறுகின்ற அனைத்து மகளிரும் பயனடையும் வகையில் இந்த அரசு செயல்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள், அண்ணன் நாகை மாலி, அண்ணன் பிரின்ஸ் மற்றும் அண்ணன் உதயகுமார் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், நிதித் துறைச் செயலாளர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளக்கவுரையாற்றினார்.

**'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்' விதிகளைப் பூர்த்தி செய்கிற அத்தனை மகளிருக்கும் உரிமைத் தொகை பெற்றுத் தருவது ; ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் கடமை! பொறுப்பு! உரிமை!**

**விண்ணப்பிக்காத மகளிர் புதிய விண்ணப்பங்களைத் தரலாம்! விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாதவர்கள் மேல்முறையீடு செய்யலாம்!**

எந்தத் தொகுதியிலிருந்து எத்தனை மனுக்கள் வந்தாலும் அதனைக் கள ஆய்வு செய்து இந்தத் திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிருக்கு நிச்சயம் கலைஞர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ் உரிமைத்தொகை சென்றடையும் என்ற உறுதிமொழியை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தற்போது, இந்தநேரத்தில் மீண்டும் நானும் உறுதியளிக்கின்றேன்.

### விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலை தீ விபத்தில் - சிகிச்சை பலனின்றி

# உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.11-

விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்கூறி நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கங்கர்செவல் கிராமத்திலுள்ள தனியாருக்குசொந்தமான பட்டாசு ஆலையில் 3.10.2023 அன்று ஏற்பட்ட தீவிபத்தில் மூன்று தொழிலாளர்களுக்கு கொடுங்காயம் ஏற்பட்டு மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் கங்கர்செவல், க.லட்சுமியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த கணேசன், த/பெ. பிலாவடியான் (வயது 42) மற்றும் ராஜா, த/பெ.வர்கீஸ் (வயது 38) ஆகியோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி கணேசன், த/பெ. பிலாவடியான் 7.10.2023 அன்றும், ராஜா, த/பெ. வர்கீஸ் இன்றும் (10.10.2023) உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் திருமதி.முத்தம்மாள், க/பெ. மாரிமுத்து என்பவருக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் பெண் ஓதுவார்கள் நியமனம்!

## பூசாரிகள் சங்கம் வரவேற்பு!

சேலம், அக்.11-

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம் செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு பூசாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை திங்கள்கிழமை 9ம் தேதி காலை 8 மணி அளவில் நேரில் அவரது இல்லத்தில் சந்தித்து பொன்னாடை அணிவித்து பி.வாசு பூசாரி வாழ்த்து தெரிவித்தார்.

கோவில் பூசாரிகள் நலச் சங்க பொருளாளர் கே.சுந்தரம், பூசாரியின் குரல் ஆசிரியர் த.புருஷோத்தமன் உடன் இருந்தனர்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் பெண் ஓதுவார்களை நியமித்து ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்திவரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாகச் செயல்பட்டு வரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

கிராமக் கோவில் பூசாரிகள் நலவாரியத்தை விரைந்து செயல்படுத்தக்கோரி அமைச்சரிடம் அவர் கோரிக்கை மனு அளித்தார். நலவாரியத்தைச் செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# 51 ஊராட்சிகளில் வாக்குச்சாவடி பாக முகவர்களுக்காக (BLC) இரண்டாம்கட்ட ஆய்வுக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் வீதம் மாவட்டத்திலுள்ள 9 ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட 51 ஊராட்சிகளில் வாக்குச் சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆய்வு கூட்டமானது கீழ்கண்ட அட்டவணை படி நடத்தப்பட உள்ளது.

| வ. எண் | நாள் | நேரம் | ஊராட்சி | இடம் |
|---|---|---|---|---|
| அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | | | | |
| 1 | 18.10.2023 புதன் | மாலை 4 மணி | தேரேகால்புதூர், இராமபுரம், நல்லூர் | விஸ்வா திருமண மண்டபம், நல்லூர் |
| 2 | 18.10.2023 புதன் | மாலை 6 மணி | இரவிபுதூர், குலசேகரபுரம் | விஸ்வா திருமண மண்டபம், நல்லூர் |
| 3 | 22.10.2023 ஞாயிறு | மாலை 4 மணி | லீபுரம் | திரு. குமாரதங்கம் ஆசிரியர் அவர்களின் இல்ல வளாகம், ஆமணக்கன்விளை |
| அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | | | | |
| 4 | 19.10.2023 வியாழன் | மாலை 4 மணி | வடக்கு தாமரைகுளம், சாமிதோப்பு, கடும்பாட்டூர் | திரு. பொன் சின்னத்துரை அவர்களின் இல்ல வளாகம், சாமித்தோப்பு |
| 5 | 19.10.2023 வியாழன் | மாலை 6 மணி | மகாராஜபுரம், பஞ்சலிங்கபுரம் | திரு. டி.கே. சுந்தரம் அவர்களின் இல்ல வளாகம், பஞ்சலிங்கபுரம் |
| 6 | 22.10.2023 ஞாயிறு | மாலை 6 மணி | கோவளம் | திரு. ஜோசப் முத்தழகன் அவர்களின் இல்ல வளாகம், கோவளம் |
| குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | | | | |
| 7 | 20.10.2023 வெள்ளி | மாலை 4 மணி | தலக்குளம், கக்கோட்டுதலை, நெட்டாங்கோடு, கட்டிமாங்கோடு | எஸ்.ஆர். சுவாமி மண்டபம், மடவிளாகம், கண்டன்விளை |
| 8 | 21.10.2023 சனி | மாலை 4 மணி | சைமன் காலனி | புனித மிக்கேல் திருமண மண்டபம், கோடிமுனை |
| குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | | | | |
| 9 | 21.10.2023 சனி | மாலை 6 மணி | முட்டம் | ஜார்ஜியார் தெரு, குருசடி வளாகம், முட்டம் |
| 10 | 29.10.2023 ஞாயிறு | காலை 11 மணி | குருந்தன்கோடு, வெள்ளி சந்தை | பத்மனாபா கல்யாண மண்டபம், வெள்ளி சந்தை |
| இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் | | | | |
| 11 | 22.10.2023 ஞாயிறு | காலை 10 மணி | கேசவன்புத்தன்துறை, மணக்குடி, பள்ளம் | கிராண்ட் லாட்ஜ் ஆஃப் இந்தியா, பள்ளம் |
| 12 | 27.10.2023 வெள்ளி | மாலை 4 மணி | ஆத்திக்காட்டுவிளை, மேல கிருஷ்ணன்புதூர், பறக்கை | கிரேஸ் கார்டன், சீயோன்புரம் |
| 13 | 27.10.2023 வெள்ளி | மாலை 6 மணி | தர்மபுரம் | ராமநாயகி மண்டபம், ஈத்தாமொழி |
| தக்கலை தெற்கு ஒன்றியம் | | | | |
| 14 | 25.10.2023 புதன் | மாலை 4 மணி | நுள்ளிவிளை | ஜெ.ஜெ. மண்டபம், கண்டன்விளை |
| 15 | 25.10.2023 புதன் | மாலை 5.30 மணி | ஆத்திவிளை | சி.எஸ்.ஐ. கம்யூனிட்டி ஹால், நெய்யூர் |
| 16 | 25.10.2023 புதன் | மாலை 7 மணி | மருதூர்குறிச்சி | மருதூர்குறிச்சி, திரு. பிரேம் அவர்களின் இல்ல வளாகம் |
| இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் | | | | |
| 17 | 26.10.2023 வியாழன் | மாலை 4 மணி | எள்ளுவிளை, மேல சங்கரன்குழி, இராஜாக்கமங்கலம் | சமூதாய நலக்கூடம், அம்மச்சியார்விளை, ஈத்தாமொழி |
| 18 | 29.10.2023 ஞாயிறு | மாலை 4 மணி | கனியான்குளம், புத்தேரி | யோகீஸ்வரர் திருமண மண்டபம், புத்தேரி |
| தோவாளை கிழக்கு ஒன்றியம் | | | | |
| 19 | 28.10.2023 சனி | மாலை 4 மணி | ஈசாந்திமங்கலம், இறச்சகுளம், திருப்பதிசாரம், பீம நகரி | ஆர்.கே. மஹால், இறச்சகுளம் |
| 20 | 28.10.2023 சனி | மாலை 6 மணி | தோவாளை, செண்பகராமன்புதூர், சகாய நகர், மாதவலாயம் | கிராண்ட் திருமண மண்டபம், சண்முகபுரம் |
| தோவாளை வடக்கு ஒன்றியம் | | | | |
| 21 | 30.10.2023 திங்கள் | மாலை 4 மணி | தடிக்காரன்கோணம், காட்டுபுதூர், கடுக்கரை, திடல் | சமூக நலக்கூடம், தெரிசனங்கோப்பு |
| 22 | 30.10.2023 திங்கள் | மாலை 6 மணி | தெரிசனங்கோப்பு, தெள்ளாந்தி, ஞாலம், அருமநல்லூர் | சமூக நலக்கூடம், தெரிசனங்கோப்பு |

**மேயர் ரெ. மகேஷ்**
செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

### ஓய்வூதியதாரர்களின் இன்ஸுரன்ஸ் பிரீமியத்தை நிர்வாகமே செலுத்த வேண்டும்

# ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி அமர்த்துவதை தடை செய்ய வேண்டும்!

## பாரத ஸ்டேட் வங்கி முன்னாள் தொழில் சங்கத் தலைவர்கள் வலியுறுத்தல்

திருச்சி, அக்.11-

பாரத ஸ்டேட் பேங்க் மேனாள் தொழிற் சங்க தலைவர்கள்கூட்டமைப்பின் ஏழாவது பொதுக்குழு கூட்டம் ஹோட்டல் அஜந்தாவில் நடந்தது. அமைப்பின் தலைவர் எஸ்.பி.இராமன் தலைமையில் நடந்த கூட்டத்துக்கு பொருளாளர் திருச்சி என்.சுப்பிரமணியன், துணைத்தலைவர் டி.வி.சந்திரசேகரன், துணைச் செயலாளர் மதுரை எம்.முருகையா, பாரத ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் மேனாள் பொதுச்செயலாளர் டி.சிங்காரவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுக்குழு கூட்டத்தில் நீண்ட விவாதங்களுக்கு பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனையில் இருக்கும் குற்றவியல் நீதி சட்ட திருத்தங்களை நாடு தழுவிய அளவில் பொது விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும்.

மணிப்பூர் மாநிலத்தில் இந்திய ராணுவத்தின் விசேச சட்டத்தை நடைமுறைப்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த ஒன்றிய அரசு முன் வர வேண்டும்.

பாரத ஸ்டேட் பேங்க் உள்ளிட்ட பொதுத்துறை வங்கிகளில் தொழிலாளர் நல சட்டங்களுக்கு எதிராக 'அவுட் சோர்சிங்' மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதை ஒன்றிய அரசு தடை செய்ய வேண்டும்.

பாரத ஸ்டேட் வங்கியின் நிகர இலாபம் கடந்த ஆண்டை காட்டிலும் 59 சதவிகிதம் உயர்ந்து, 2023 ஆம் நிதியாண்டின் இறுதியில் 50232 கோடியாக உயர்ந்துள்ளது.

ஓய்வூதியர்களும், அர்ப்பணித்துக் கொண்டு உழைக்கும் அதிகாரிகளும், வங்கியையே உயிர்மூச்சாக கருதி உழைக்கும் ஊழியர்களும் தான் என்பதை நாடு நன்கறியும். வங்கியின் வளர்ச்சிக்காக வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டு உழைத்த ஓய்வூதியர்களை வங்கி நிர்வாகம் சமூக கழிவாக [Social waste] கருதி விடக்கூடாது. நாடு முழுமையும் ஓய்வு பெற்ற பின்னரும் செயல்பட்டு பாரத ஸ்டேட் வங்கியின் டெபாசிட்டை உயர்த்தவும் வராத கடன்களை திரும்ப பெறவும் துணை நிற்கும் ஓய்வூதியர்களுக்கான ஹெல்த் இன்சூரன்ஸ் பாலிசி(பி) இன்சூரன்ஸ் பிரீமியத்தை முழுமையாக பாரத ஸ்டேட் வங்கி நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள 38 மாவட்ட தலைநகரங்களில் பலவற்றில் வங்கி மருந்தகங்கள் நிறுவப்படாததால், வங்கி ஓய்வூதியர்கள் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நிலை மாற, வங்கி மருந்தகங்களை நிறுவும் முயற்சிகளை துரிதப் படுத்த வேண்டும்.

அனைத்து வங்கி மருந்தகங்களிலும் தகுதியான மருத்துவரால்பரிந்துரைக்கப்படும் தரமான மருந்துகள், மாத்திரைகள், பென் இன்சுலின் ஆகியவற்றை வங்கியின் வேலை நாட்கள் அனைத்திலும் ஓய்வூதியர்களுக்கு வழங்க பாரத ஸ்டேட் வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். பாண்டிச்சேரி போன்ற யூனியன் பிரதேச தலைநகர்களில் வாழும் வங்கி ஓய்வூதியர்களின் எண்ணிக்கையை கவனமாக கருத்தில் கொண்டு, அவர்கள் அனைவருக்கும் தரமான மருந்துகள் மற்றும் பென் இன்சுலின் உரிய நேரத்தில் வழங்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டால் உடல் நலக்குறைவுகளும், உயிரிழப்புகளும் தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை உணர்ந்து, கருத்தோடும் கவனத்தோடும் நிர்வாக முடிவுகளை பாரத ஸ்டேட் வங்கி எடுக்க வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**பங்கேற்றோர்**

இந்தஅமைப்பில்ஏழாவது பொதுக்குழுவில் துணை பொருளாளர் பூமிநாதன், திருச்சி சந்திரா கில்பர்ட், திருவாரூர் பாண்டுரெங்கன், பாண்டிச்சேரி எஸ்.கருணாகரன், கோவை எம். ரகுநாதன், வேலூர் லோகநாதன், மதுரை பரவை பாலசுப்பிரமணியன், நாகர்கோயில் அஹமது ஹுசைன் மற்றும். அமைப்பின்செயலாளர் எம்.கே.மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் அறிவிப்பிற்கு பின் 10 நாட்களில் மட்டும் உடல் உறுப்பு தானம் செய்தோர் 1,616 பேர்!

# சமூக ஆர்வலர்கள் - பொதுமக்கள் மத்தியில் பாராட்டு குவிகிறது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக்.11-

உடல் உறுப்புத்தானம் குறித்த முதல்வரின் அறிவிப்பிற்கு பின் 10 நாட்களில் மட்டும் உடல் உறுப்பேபுத் தானம் செய்தோர் எண்ணிக்கை 1,616 பேராக உயர்ந்துள்ளது. இதனால் தமிழ் நாடு அரசின் அறிவிப்புக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பாராட்டு குவிகிறது என "தினகரன்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்
அக்டோபர் 10, 2023 செவ்வாய்க்கிழமை

பாராட்டு குவிகிறது

மூளைச்சாவு அடைந்த பிறகு உடல் உறுப்புகளை தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது பெரும் வரவேற்புக்குரியது.

உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது தமிழ்நாடு. தமிழ்நாடு அரசு உடல் உறுப்பு தானத்துக்காக தனி நாளாக செப்டம்பர் 23ஐ அறிவித்து, முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறது. மூளைச்சாவு அடைந்திருந்தால் மட்டுமே இதயம், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகளை தானம் செய்ய முடியும். அரசின் புதிய அறிவிப்பு உறுப்பு தானத்தை மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

தமிழ்நாட்டில் 6,179 பேர் மாற்று சிறுநீரகக்கக்

அது வருமாறு:

மூளைச்சாவு அடைந்த பிறகு உடல் உறுப்புகளை தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது பெரும் வரவேற்புக்குரியது. உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது தமிழ்நாடு. தமிழ்நாடு அரசு உடல் உறுப்பு தானத்துக்காக தனி நாளாக செப்டம்பர் 23ஐ அறிவித்து, முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறது. மூளைச்சாவு அடைந்திருந்தால் மட்டுமே இதயம், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகளை தானம் செய்ய முடியும். அரசின் புதிய அறிவிப்பு உறுப்பு தானத்தை மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

தமிழ்நாட்டில் 6,179 பேர் மாற்று சிறுநீரகத்துக்காகவும், 449 பேர் கல்லீரலுக்காகவும் 72 பேர் இதயத்துக்காகவும், 24 பேர் நுரையீரலுக்காகவும் காத்திருக்கின்றனர். நாட்டில் அதிகமாக உடல் உறுப்பு தேவை இருக்கிறது. நாடு முழுவதும் சுமார் 3 லட்சம் பேர் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர். நாளொன்றுக்கு 20 பேர் வரை உடல்உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை கிடைக்காததால் இறக்க நேரிடுகிறது.

ஆனால், சர்வதேசப் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் உடல் உறுப்பு தானம் மிகக் குறைவு.

மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்பு தானம் 2014ல் 6,916 பேரிலிருந்து 2022ல் 16,041 பேராக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால், கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் 10 லட்சத்தில் ஒருவர் தான் உறுப்பு தானம் செய்கிறார் என்னும் நிலை தொடர்கிறது.

இந்தியாவில் 600க்கு மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஆண்டுக்கு ஒன்று என்னும் வீதத்தில் உறுப்பு தானம் கிடைத்தால் இந்தியாவின் மருத்துவத் துறைக்குப் பெரிய வரமாக இருக்கும். ஆனால், உடல் உறுப்புக்காக காத்திருப்போரில் 10% பேர் மட்டுமே இப்போது பயனடைய முடிகிறது.

இந்த பின்னணியில் உறுப்பு தானம் செய்வதை ஊக்குவிக்க, உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மருத்துவர்களையும் செவிலியர்களையும் தமிழ்நாடு அரசு ஏற்கனவே அறிவுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. உடல் உறுப்புகளை தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழக அரசு அறிவிப்பு வெளியான பிறகு தேனி மாவட்டம் சின்னமனூரில் சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்து, உடல் உறுப்புகளை தானம் செய்த வடிவேலுவின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடந்தது. அதை தொடர்ந்து உறுப்பு தானம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, உறுப்பு செயல் இழந்தோரின் எதிர்கால வாழ்க்கைக்கான வாய்ப்பை வழங்குகிறது. ஆனாலும் உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் பல சவால்கள் உள்ளன. காத்திருப்போருக்கு வரிசைப்படியும் சரியாகவும் உறுப்புகள் சென்று சேர்வதில் பிரச்னைகள் நிலவுகின்றன. என்றாலும் இப்போது காத்திருப்போர் பட்டியலில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பலன் அளித்து வருகின்றன.

இதையடுத்து இறந்தவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் தானாகவே முன் வந்து உறவினர்களின் உடல் உறுப்புகளை தானமாக வழங்கி வருகின்றனர். உடல் உறுப்புகளைத் தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்த 10 நாட்களில் மட்டும் 1,616 பேர் உறுப்புகள் தானம் செய்ய உறுதியெடுத்து பதிவு செய்துள்ளனர். இதனால் தமிழ்நாடு அரசின் அறிவிப்புக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பாராட்டு குவிகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# காளையார்கோவிலில் பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

## ஆ.ராசா.எம்.பி. சிறப்புரை! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் பங்கேற்பு

சிவகங்கை. அக். 11-

காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வருகிற 17ஆம் தேதி காளையார் கோவில் தெப்பக்குளம் கீழ்கரையில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் 7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஒன்றியச் செயலாளர்கள் யோக.கிருஷ்ணகுமார்,ஆர்.எம்.கென்னடி ஆகியோர் வரவேற்றுப் பேசுகிறார்கள்.

கிழக்கு ஒன்றியச் செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமை வகிக்கிறார். கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா. எம்.பி.சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுகிறார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

கூட்டத்தில் பாகமுகவர்களுக்கு கைபேசிகள், நலிவுற்ற ஏழை,எளிய மாணவ, மாணவிகளுக்கு கல்விநிதி உதவி,தொண்டு நிறுவனங்களுக்கு அரிசி முட்டைகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், கழக துணைப்பொதுச் செயலாளர் ஆ.ராசாஎம்.பி. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் வழங்குகிறார்கள்.



சிவகங்கையில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல வலியுறுத்தி நடைபெற்ற ரயில் மறியல் போராட்டத்தை தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையாக சிவகங்கை நகர மன்ற தலைவர் சிஎம். துரைஆனந்த் தலைமையில் அனைத்துக் கட்சி பொதுநல அமைப்புகள் பத்திரிகையாளர்கள் அனைத்து சங்கங்கள் சார்பில் டெல்லி சென்று ஒன்றிய ரயில்வே துறை இணை அமைச்சர் ராவ் சஹீப் பட்டீல் தானேவ்வை நேரில் சந்தித்து மனு அளித்து கோரிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது அந்தக் கோரிக்கைகளில் முதலில் ஐந்து கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி தருவதாக ரயில்வே துறை இணை அமைச்சர் உறுதியளித்தார். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் மாநில பொதுக்குழு உறுப்பினர் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஜெய்சிம்மன், நகர மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், அயூப்கான், துபாய் காந்தி, மகேஷ், விஜயகுமார், ராமதாஸ், ஆறு.சரவணன் லயன்ஸ் சங்கம்மாவட்ட தலைவர் முத்துக்கண்ணன், ஒப்பந்ததாரர் சங்கம் கண்ணன் உள்ளிட்டோர் அனைத்துக் கட்சிகள், அனைத்து சங்கங்கள், பொதுநல அமைப்புகள் சார்பில் பிரதிநிதிகளாக பங்கேற்றனர்.

ஆயுள் தண்டனைக் கோப்புகளை விரைந்து பரிசீலித்து - நெடுநாள் சிறைவாசம் அனுபவித்து வரும்

# சிறைவாசிகளை முன் விடுதலை செய்ய - மனிதாபிமான அடிப்படையில் ஒப்புதல் வழங்கிடுவீர்!

## தமிழ்நாடு ஆளுநருக்கு - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கடிதம்!



**சென்னை, அக்.11**

**முன்விடுதலை தொடர்பான ஆயுள் தண்டனை சிறைவாசிகள் கோப்புகளை விரைந்து பரிசீலித்து அவர்களை முன்விடுதலை செய்ய ஒப்புதல் வழங்க வலியுறுத்தி ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கடிதம் எழுதியுள்ளார்.**

நேற்று (10.10.2023) தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவை விவாதத்தின்போது, உறுப்பினர்கள் சிலர் இஸ்லாமிய சிறைவாசிகள் உள்ளிட்ட நெடுநாள் சிறைவாசத்தில் உள்ள சிறைவாசிகளை விடுதலை செய்வது குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவர்கள் அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், உறுப்பினர்களின் கோரிக்கைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஆளுநரிடம் நிலுவையில் உள்ள முன் விடுதலை தொடர்பான ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் கோப்புகளை விரைவாகப் பரிசீலித்து, அவர்களை முன் விடுதலை செய்ய ஒப்புதல் வழங்குமாறு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு : -

சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய 113 வது பிறந்தநாளினை முன்னிட்டு நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்து வரும் 700 ஆயுள் தண்டனை சிறைவாசி களின் தண்டனையை, நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில், முன்விடுதலை செய்ய இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும், இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும், என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார்கள். அதற்கேற்ப உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு 556 ஆயுள் தண்டனை சிறைவாசி களின் நேர்வுகள் பரிசீலனை செய்யப்பட்டு 08.10.2023 வரை 335 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 8 நேர்வுகள், தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட தால், அரசால் நிராகரிக்க ப்பட்டுள்ளன. மீதமுள்ள 223 சிறைவாசிகளின் நேர்வுகள் ஆளுநர் அவர்களின் ஒப்புதலின்றி திருப்பி அனுப்பப்பட்டு, அரசின் மறுபரிசீலனையில் இருந்து வருகின்றன.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சிறைவாசிகளில் 10/20 ஆண்டுகள் தண்டனை முடித்தும் பயன்பெற முடியாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணைநோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் மற்றும் மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோரின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் என்.ஆதிநாதன் அவர்களின் தலைமையின் கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு, அரசாணை (நிலை) எண்.589, உள் (சிறை4) துறை நாள் 22.12.2021ல் அரசால், அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 28.10.2022 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், 264 ஆயுள் தண்டனை சிறைவாசி கள் குழுவால் முன்விடுதலைக்கு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, தற்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளினை முன்னிட்டு, ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்கு, அரசாணை எண்.430, உள்துறை, நாள் 11.08.2023ன்படி வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, முதற்கட்டமாக, தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலைக்காக அரசால் பரிந்துரை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.8.2023 அன்று ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், மேற்கண்ட சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்படுவார்கள்.

இன்று தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவை விவாதத்தின்போது, உறுப்பினர்கள் சிலர் இஸ்லாமிய சிறைவாசிகள் உள்ளிட்ட நெடுநாள் சிறைவாசத்தில் உள்ள சிறைவாசிகளை விடுதலை செய்வது குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவர்கள் அனைவரையும் சட்ட விதிகளுக்குட்பட்டு விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினர்.

முதலமைச்சர் அவர்களும், உறுப்பினர்களின் கோரிக்கைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

நெடுநாள் சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைவாசிகளை, மனிதாபிமான அடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு, முன்விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பிலிருந்தும், அரசுக்கு தொடர்ந்து பெறப்பட்டு வருகிறது.

எனவே, தங்களுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் கோப்புகளை விரைவாகப் பரிசீலித்து, இந்திய அரசமைப்பின் உறுப்பு 161 இன் கீழ் முன் விடுதலை செய்ய ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் –

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூட்டத்தில் பெருமளவில் இளைஞர்கள் பங்கேற்பு!

## சிவகங்கை தெற்கு ஒன்றியக் கூட்டத்தில் முடிவு!

சிவகங்கை, அக். 11 -

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய துணை செயலாளர் பஞ்ச வண்ணம் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்கள் திலகவதிகண்ணன், செல்வராணிஅய்யப்பன், மாவட்ட மகளிரணி துணை அணிப்பாளர் மார்க்ரெட் கமலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய நிர்வாகிகள் இளைஞர் அணி தங்கச் செல்வம், சு.மனோகரன், தியாகராஜன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன், தவச்செல்வம், அழகு சுந்தரம், தங்கச் சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் ரமேஷ், வேல்முருகன், ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இம்மாதம் 27ஆம் தேதி வரை கூட்டுறவு சங்க உறுப்பினர்களை தெற்கு ஒன்றியத்தில் அதிக அளவில் சேர்ப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

இந்த மாதம் சிவகங்கை மாவட்டத்திற்கு இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும் இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் தெற்கு ஒன்றியத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர்களை பங்கேற்க செய்வது. வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர் சேர்ப்பதில் தீவிரமாக பணிபுரிய தீர்மா னிக்கப் பட்டது .

முடிவில் தங்க செல்வம் நன்றி கூறினார்.

ரூ.9.97 கோடியில் தேனாம்பேட்டை மண்டலம்

# நொச்சிக்குப்பம் பகுதியில் மீன் அங்காடி கட்டும் பணி!

## ஆணையர் டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வு

சென்னை, அக். 11 -

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட நொச்சிக்குப்பம், லூப் சாலை அருகில் மூலதன நிதியின் கீழ் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மீன் அங்காடி கட்டுமானப் பணிகளை ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு125க்குட்பட்ட நொச்சிக்குப்பம், லூப் சாலை அருகில் மூலதன நிதியின் கீழ் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மீன் அங்காடி கட்டுமானப் பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மீன் அங்காடியானது, 8,093 ச.மீ. பரப்பளவிலான இடத்தில் 4,645 ச.மீ. பரப்பளவில் 366 கடைகளுடன் கட்டப்பட்டு வருகிறது. மேலும், 1,544 ச.மீ. பரப்பளவிலான இடத்தில் 155 இருசக்கர வாகனங்கள் மற்றும் 62 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, இரண்டு இடங்களில் மழைநீர் சேமிப்பு, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறை, மீன் வெட்டுவதற்கு தனி இடம் மற்றும் 5 வருட பராமரிப்புடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. இவற்றில் 80% கட்டுமானப் பணி நிறைவடைந்துள்ளது. இந்த மீன் அங்காடி கட்டுமானப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அடையாறு மண்டலம், திருவான்மியூர், முத்து லட்சுமி சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்து, மையம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பராமரிக்க அறிவுறுத்தினார்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை!

நாமக்கல் அக். 11 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி. எஸ்.சீனிவாசன், சி.ஆனந்த குமார், எஸ்.ஜோயால், இன்பா ஏ.என்.ரகு நா. இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நேர்காணல் நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான .ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் உள்ளிட்ட 3 தொகுதிகள் அடங்கிய 11 பேரூராட்சிகளுக்கு நபர்களும் , 10 ஒன்றியங்களுக்கு, 4 நகரங்களுக்கு 24 நபர்களும் இந்த நேர்காணலானது நடைபெறுகிறது.

நகராட்சிக்கு 1 அமைப்பாளர் மற்றும் 5 துணை அமைப்பாளர்கள் என 24 நபர்களும், ஒன்றியத்திற்கு 1 அமைப்பாளர் 5 துணை அமைப்பாளர்கள் என 61 நபர்களும், பேரூராட்சிக்கு 1 அமைப்பாளர் 4 துணை அமைப்பாளர்கள் என 44 நபர்கள் என 129 பேர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

இந்த நேர்காணலில் மொத்தம் 454 பேர் பங்கு பெற்றுள்ளனர். கலந்து கொண்ட இளைஞர்களிடம் கழக மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் 3 குழுக்களாக பிரிந்து 3 தொகுதிகளுக்கு இந்த நேர்காணலை நடத்தினர்.

முன்னதாக நாமக்கல் என்.கொசவம்பட்டியில் இல்லந்தோறும் புதிய இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான .ஆர்.என். இராஜேஸ்குமார், கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், எஸ்.ஜோயால், இன்பா ஏ.என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா, நாமக்கல் நகர கழக செயலாளர்கள் எஸ். பூபதி (கிழக்கு, ராணா ஆனந்த் (தெற்கு), நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் துணை அமைப்பாளர்கள் எம்பரார் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், ம.ரமேஷ்குமார், ரா. கலைவாணன், இரா.பிரபாகரன், கிழக்கு நகர இளைஞர் அணி அமைப்பாளர் சிலம்பரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நேர்காணல் நிகழ்ச்சிகளை நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் துணை அமைப்பாளர்கள் எம்பரார் வ.இளம்பரிதி, எம். கார்த்திக், ம.ரமேஷ்குமார், ரா.கலைவாணன், இரா.பிரபாகரன் ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

'வணிக வரித்துறை சமாதானத் திட்டம்' -1 லட்சம் ஏழை வணிகர்களின் நிலுவைத் தொகை முழுவதும் தள்ளுபடி!

# வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்ட - 1002 சொத்துகள் திரும்ப ஒப்படைப்பு!

## தலைமைச் செயலகத்தில் - வணிக வரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேட்டி!



சென்னை, அக்.11

வணிகவரித்துறை சமாதானத் திட்டம் குறித்து, நேற்று தலைமைச் செயலகத்தில் பேட்டியளித்த வணிகவரித்துறை மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாக திரும்ப ஒப்படைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

பேட்டியின் போது, அமைச்சர் பி.மூர்த்தி குறிப்பிட்டதாவது:-

தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டமானது 2006-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இதனுடன் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரிச்) சட்டம் உள்ளிட்ட மேலும் பத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. சமாதானத் திட்டம் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாகும். சமாதானத் திட்டம் முதன் முதலாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 1999-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. அதற்கு பின்னர் 2002, 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதானத் திட்டம் செயல்படுத்தப் பட்டு, அதன் மூலம் வணிகர்களின் நீண்ட கால வரி நிலுவைகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளன.

தற்போது மாநிலம் முழுமைக்கும் 31.08.2022 அன்றைய தேதியில் பல்வேறு முந்தைய சட்டங்களின் கீழ் 2,11,607 இனங்களில் ஏறக்குறைய ரூபாய் 25,000 கோடி வரி நிலுவையாக உள்ளது. வணிகர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது அரசினை பிற மாநிலங்கள் வியக்கும் வகையில் வழிநடத்திக் கொண்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு பல புதிய சலுகைகளோடு பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்காக புதிய அணுகுமுறையிலான அறிவித்திருக்கிறார்கள்.

திட்டத்தினை சமாதான இந்தத் திட்டத்தின் கீழ் வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்படுகி றார்கள். முதலாவதாக, ஒரு வரி விதிப்பு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவான வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டியவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு வணிகம் செய்யும் எளிய வணிகர்களாகவே இருப்பார்கள். இந்த வணிகர்கள் வரிவிதிப்பு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரம் அல்லது அதற்கு குறைவாக வரி, அபராதம் மற்றும் நிலுவைத் தொகை உள்ள எளிய வணிகர்கள் அனைவருக்கும் வரி, அபராதம் மற்றும் வட்டி முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும் என்பதும், ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டிற்கும் இந்த தள்ளுபடி வழங்கப்படும் என்பதும், திரண்ட வட்டித் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படுவதும் இந்த சமாதான திட்டத்தின் கீழ் முதன்முறையாக வழங்கப்படும் சிறப்பு சலுகைகள் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இதன் காரணமாக ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாக திரும்ப ஒப்படைக்கப்படும். 47,000 வணிகர்கள் சிறப்பு சலுகைகள் பெற்று வரி நிலுவைச் சுமையில் இருந்து வெளிவர இருக்கிறார்கள். இத்திட்டம் எதிர்வரும் 16.10.2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் அதாவது 2024ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி குறிப்பிட்டார்.

ஜெ.காணிக்கைநாதன் – டி.மதன்ராஜ் பங்கேற்பு!

# சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணிக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா பங்கேற்பு!

சென்னை, அக். 11 -

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. வழிகாட்டுதலின் படியும், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காணிக்கைநாதன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வழக்கறிஞர் டி.மதன்ராஜ் தலைமை தாங்கினார், மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா முன்னிலை வகித்தார், துணைத் தலைவர் சி. சேனாபதி நன்றி கூறினார்.

துணை அமைப்பாளர்கள் எஸ்.சரவணக்குமார் ரவிச்சந்திரன், எஸ்.சசிதரன், ஆர்.இராஜன், சி.பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணியின் உறுப்பினர்கள் சேர்க்கை, 28-10-2023 மற்றும் 29-10-2023 ஆகிய தேதிகளில் கழக சட்டத்துறை சார்பில் நடைபெறவிருக்கும் பேச்சுப்போட்டி, 2024 பாராளுமன்ற தேர்தல் ஆக்கப்பணிகள், டிசம்பர் மாதம் சேலம் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் கழக இளைஞர் அணி மாநாடு மற்றும் சென்னை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்கறிஞர்களை ஒன்றிணைத்து சிறப்புக் கூட்டம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் – இன்று

# திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து மறியல் போராட்டம்!

திருவாரூர், அக்11.

திருவாரூர் மாவட்டத்தில் காவேரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் காவிரியில் நீர்தர மறுக்கும் கர்நாடக அரசையும், ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து இன்று (11.10.2023) மாபெரும் மறியல் போராட்டம் நடைபெறுகிறது. இந்த போராட்டத்திற்கு அரசியல் இயக்கங்களும், வர்த்தகர்களும், சமூக அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் விவசாயத்தில் பெரும்பங்கு வகிக்கும் காவிரி நீரை வைத்து அரசியல் இயக்கங்கள் தங்களின் நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் நிலையில், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் அண்டை மாநிலங்களுடன் கொண்டிருந்த நட்புறவால் காவிரி பெற்று தமிழ்நாட்டின் விவசாயத்தை செழிப்பாக்கினார். அதேபோல திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது நிலைப்பாட்டில் உறுதியாய் இருந்து, சட்ட முறைப்படி நமக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை பெற முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டுகொண்டிருக்கிறார். இந்த நிலையில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் கர்நாடக அரசு தமிழ் நாட்டை வஞ்சித்து வருகிறது. ஒன்றிய பி.ஜே.பி. அரசும் மவுனம் காத்துவருகிறது.

தமிழ்நாட்டின் விவசாயத்தை காக்க காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டு இயக்கம் சார்பில் இன்று (11.10.2023 - புதன்கிழமை) ஒன்றிய அரசின் அலுவலகங்களை முற்றுகையிட்டு நடைபெறும் போராட்டம் குறித்து நடைபெற்ற கூட்டத்தில் போராட்டத்தை முழு வெற்றிபெற ஆதரவளிப்பது என எடுக்கப்பட்ட முடிவின்படி இன்று போராட்டம் முழு வீச்சில் நடைபெறுகிறது. இந்த போராட்டத்தில் அரசியல் இயக்கங்களும், வர்த்தகர் சங்கம் மற்றும் சமூக அமைப்புகளும் ஆதரவு அளித்துள்ளது குறிப்பிடத் தக்கது.



தேனி வடக்கு மாவட்டம் நகரச் செயலாளர், கவுன்சிலர், திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டியன் ஏற்பட்டில் தேனி நகரப் பகுதிகளில் 33 வார்டுகளில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்தார். உடன் வடக்குமாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அஜிப்கான், பொதுக்குழு உறுப்பினர் முருகேசன், மாவட்டப் பிரதிநிதி பண்ணை ரவி பவுன், துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பரணீஸ்வரன், ஜெயக்குமார், செல்லத்துரை, நகர இளைஞரணி சதீஷ் குமார், நகர மன்ற தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் சுகன்யா, இளைஞர் அணிஅரவிந்த் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு125க்குட்பட்ட நொச்சிக்குப்பம், லூப் சாலை அருகில் மூலதன நிதியின் கீழ் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மீன் அங்காடி கட்டுமானப் பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (10.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (09.10.2023) அன்று சென்னை, கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஏழு தளங்களுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு மருத்துவ ஆராய்ச்சி மையம் கட்டிடத்திற்கான இடத்தினை தேர்வு செய்யும் பணிக்கான ஆய்வை மேற்கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக துணை வேந்தர் பேர.மரு.கே.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், பதிவாளர் மரு.அஸ்வத் நாராயணன், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஆயத்தரசு ராஜசேகரன், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### எஸ்.முரளி தலைமை! மா.பா.அன்பு முன்னிலை!

# 124 அ வட்ட மாணவரணி: வாசுதேவன் இல்லத் திருமணவிழா!

### மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஜெ.கருணாநிதி பங்கேற்பு!

சென்னை, அக். 11-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி 124 அ வட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கே.வாசு தேவன் இல்ல திருமண விழா ஆர்.ஜெயராஜ் (என்கிற) அப்புன், எஸ்.வைஷ்னவிக்கு இன்று (11.10.2023) புதன்கிழமை மாலை 6 மணியளவில் சென்னை-600004, எண்.39, சித்திரை குளம் வடக்கு தெருவில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

124 அ வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு, விமலா




கிருஷ்ணமூர்த்தி எம்.சி., எஸ். சரவணன், ஸ்டோன் வீ. அருண்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.சதீஷ், ம.மஞ்சு, செ.அருண் ராஜ், ஏ.கே.முகம்மது காசிம், எஸ்.டி.புவியரசன், மூ.பால குரு மயிலை கிழக்கு பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.தயாளன், ஏ.கோகுல் வரவேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, கே.ஏழுமலை எம்.சி., எஸ். மோகன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மாவட்ட கழக நிர்வாகி கள் நந்தனம் நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன், டாக்டர் ஜெ.அருண், டாக்டர் கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், கோ.சு.மணி, யோகேஸ் ரவி, என்.அன்பழகன், செல்வி சௌந்தரராஜன், மந்தைவெளி அ.பாபு, வேலுசம்பந்தன் ஜெ.ஞானகிராமன், எம்.ஆறுமுகம், ஜி.டி.அம்பேத்கர், அ.வாசுதேவன், எஸ்.முனுசாமி, ஏ.குமாரி, எல்.உதயகுமார், பி.எல்.தாஸ், ஏ.தாஸ், அ.தவநேசன், வெ.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, துரைபார்த்திபன், மூ.உதயசூரியன், ராஜா அன்பழகன், த.விக்னேஸ்வரன், என்.வடிவேல், எஸ்.பானுசலீம், விஜய் வெங்கடேசன், ஆர்.கதிரவன், ஆர்.பாலு, மோனிஷா, சி.கணேஷ் பாண்டியன், ம.ஆனந்தன், புரீபூர் டி.மேசஸ் ச.சண்முகநாதன், சாதோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன்ராஜ், ஆர்.குமரன், ஏ.சந்தியமூர்த்தி கோ.சக்திவிக்னேஷ், என்.எஸ்.பாலசுப்பிரமணி, இரா.சக்கரவர்த்தி, கே.வெங்கட் ராமன், பி.கே.ராஜேஷ்கண்ணா, கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.



கழக மாநில விவசாய அணி துணைச் செயலாளர் எம்.அரியப்பன் – திருமதி சாந்தி அரியப்பன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. மணமக்களை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மேயர் எஸ்.ஏ.சத்யா, எல்.பி.தர்மலிங்கம், கள்ளிப்பட்டி மணி, ஆதிகேசவன், புருஷோத்தமன், சுப்பிரமணி, பனைமரத்துப்பட்டி ஆர்.ராஜேந்திரன், எம்.எல்.ஏ., தடங்கம் சுப்பிரமணி, முனைவர் பி.பழனியப்பன், டி.செங்குட்டுவன், ஈ.ஜி.சுகவனம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.






### தமிழ்நாட்டில் பட்டாசுத் தொழிலில் - வருங்காலத்தில்

# விபத்து ஏதும் நிகழாத சூழ்நிலையை கழக அரசு ஏற்படுத்தும்!

### சட்டப்பேரவையில் - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் உறுதி!

சென்னை, அக்.11-

சட்டப் பேரவையில், நேற்று, பட்டாசு விபத்துகள் குறித்து கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசிய, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், "தமிழ்நாட்டில் பட்டாசு தொழிலில், இனிமேல் விபத்து ஏதும் நிகழாத சூழ்நிலையை கழக அரசு ஏற்படுத்தும்!" என உறுதியளித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று, இதுகுறித்து விவாதத்திற்குப் பதிலளித்து வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் குறிப்பிட்டதாவது :-

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அரசின் கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாமல், நடந்த சோகச் சம்பவத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தகுந்த உத்தரவிட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்தது மட்டுமல்லாமல், இறந்தவர்கள் தவிர, மீதி காயப்பட்டவர்களுக்கெல்லாம் சிறந்த மருத்துவ வசதி அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது மட்டுமல்லாமல், இறந்தவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும், சிறு காயப்பட்டவர்களுக்கும் உடனடியாக நிதி வழங்கச் சொல்லி, சம்பந்தப்பட்ட அந்தந்த பகுதிகளுக்கு அமைச்சர்களை அனுப்பி, அந்த காரியங்களை உடனடியாக முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

பொதுவாக நம்முடைய மாநிலத்தில் பார்த்தோம் என்றால், மொத்தம் 1,482 பட்டாசு ஆலைகள் இருக்கின்றன. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 1,085 இருக்கிறது. மொத்தம் 1482 இருக்கிறது. பட்டாசு சில்லறை விற்பனைக் கடைகள் மொத்தம் 6,639 கடைகள் இருக்கிறது. இது இன்றைக்கு இருக்கிற நம்முடைய நிலவரம். இதற்கு முன்பு பார்த்தோம் என்றால், சிவகாசியில் மட்டும் தான் பட்டாசு செய்தார்கள். இப்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற 38 மாவட்டங்களில், எல்லா மாவட்டங்களிலும் பட்டாசு ஆலைகளுக்கு உரிமை வாங்கியிருக்கிறார்கள்.



பட்டாசு ஆலையில் வேலை செய்வதற்குஅங்கே நடந்த 2 சம்பவங்களையும் பார்த்தால், விருதுநகர் மாவட்டத்தில் நடக்கவில்லை. கிருஷ்ணகிரியிலும், அரியலூரிலும் நடந்திருக்கிறது. அங்கேயெல்லாம், இதில் அனுபவமுள்ள ஆட்கள் இல்லை. இப்போது, அரியலூரில் இறந்தவர்களின் கணக்கைப் பார்த்தால், விருதுநகர் மாவட்டத்திலிருந்து 6, 7 பேர் வந்து அங்கே வேலை செய்திருக்கிறார்கள். இவர்களை அழைத்துப்போய் அங்கே training கொடுத்து, அந்த வேலையைச் செய்கிறார்கள். பட்டாசு என்பது தீப்பெட்டியைப்போல அடுக்கி வைத்துவிட்டு போவது அல்ல. கொஞ்ச நேரம் அந்த பட்டாசின் chemical காய்ந்துபோய் உரசினால்கூட உடனடியாக வெடி விபத்து வரும். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், இந்த 2 இடங்களிலும் நடந்தது ஒரு தவறுதலான, அங்கேயிருக்கிற பணியாளர்கள் அதை சரியான முறையில் கையாளததன் காரணமாகத்தான் அந்த சம்பவம் நடந்திருக்கிறது. பொதுவாக பார்த்தோம் என்றால்இதில்7 இலட்சம் தொழிலாளர்கள் இதை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஒரே நாளில் இதை raid செய்து, முழுவதையும் மூடிவிட முடியும்.

இரண்டு விதமான உணர்வுகள் அரசாங்கத்திற்கு இருக்கிறது. வேலை செய்கிறவர்கள் அனைவரும் கூலித் தொழிலாளர்கள் என்று பார்த்தோமென்று சொன்னால்-கிருஷ்ணகிரியும் சரி, அரியலூரும் சரி, விருதுநகர் மாவட்டமும் சரி; அங்கே பூரா வறட்சியான பகுதி. வேறு வேலை இல்லாத காரணத்தால்தான் இந்த உயிரைப் பணயம் வைத்து இந்த வேலைக்கு வருகிறார்கள். ஆகவே முடிந்த அளவிற்கு அரசாங்க அதிகாரிகள் அது போன அரசாங்கமாக இருந்தாலும் சரி, இந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி; நாங்கள் முடிந்த அளவிற்கு அதற்கு வேண்டிய பாதுகாப்பு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். தலைமைச் செயலாளர் தலைமையிலே அதற்கு ஒரு குழு அமைத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்து மாதத்திற்கு 4 நாட்கள் இந்தத் தொழிற்சாலைகளை பார்வையிட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். ஆகவே, இந்த தடுப்புப் பணிகளை எல்லாம் இந்த அரசாங்கம் செய்து கொண்டுதான் இருக்கிறது. தொடர்ந்து செய்யும். பொதுமக்களுடைய உயிரைப் பணயம் வைக்கிற இந்தத் தொழிலை பாதுகாத்தாக வேண்டி இருக்கிறது. பொதுமக்களுடைய உயிரையும் பாதுகாக்க வேண்டிய கடமையிருக்கிறது. பொதுவாக எல்லா அரசாங்கத்திலும் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது. சென்ற அரசாங்கத்திலும் நடந்து கொண்டுதான் இருந்தது. இந்த அரசாங்கத்திலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

எண்ணிக்கையிலே ஒரு வருடம் கூட, ஒரு வருடம் குறைய இருக்கும். இப்போது தீபாவளி சீசன் எல்லா இடங்களிலும் பார்த்தோம் என்று சொன்னால் பட்டாசு வேகமாக செய்ய வேண்டுமென்று சொல்லி, அதிகப்படியான ஆட்களை வைத்து வேலை வாங்குகிறார்கள். இந்தப் பட்டாசு வெடி விபத்துகளுக்குக் காரணமே, குறிப்பிட்ட நபர்கள் மட்டும் வேலை செய்தால் வராது. இந்தத் தீபாவளி நேரத்தில் மார்க்கெட்டில் வேகமாக சேல்ஸ் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இவர்கள் எல்லாம் அதிகப்படியான ஆட்களை, டிரையினிங் இல்லாத ஆட்களை வைத்து வேலை செய்வதால்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க, முதலமைச்சர் அவர்கள் எனக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். நானும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே சம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரிகளை அழைத்து வைத்துப் பேசி அந்தப் பணிகளை நிச்சயமாக எதிர்காலத்தில் இவ்வளவு பெரிய விபத்துகள் நடக்காத அளவுக்கு நிச்சயமாக செய்வோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிகப்படியான நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். போன ஆட்சிக் காலத்திலே 1 இலட்சம் ரூபாய்தான் நீங்கள் கொடுத்துக்கொண்டு இருந்தீர்கள். இப்போது தான் நம் தாராள மனசுக்கு சொந்தக்காரர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 3 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இறந்தவர்களுக்கு 3 இலட்சம் ரூபாய், பெரிய காயம் அடைந்தவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய், குறைவாக காயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி உடனடியாக வழங்க உத்தரவிட்டது மட்டுமல்லாமல் சம்பந்தப்பட்ட அமைச்சர்களை அங்கே அனுப்பி பார்வையிடச் சொல்லி அவர்களுக்கு வேண்டிய ஆறுதலும் சொல்லி, அந்தக் குடும்பத்தாருக்கு வேண்டிய அந்த நிதியுதவி செய்து உடனடியாக அவர்களுக்கு வேண்டிய பிரேதப் பரிசோதனை முதற்கொண்டு உடனடியாக உட்கார்ந்து செய்து கொடுக்கக்கூடிய முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் எங்களுக்கு எல்லாம் அறிவுறுத்திச் சொல்லும்போது, தொடர்ந்து இது போன்ற விபத்துகள் வராத வண்ணம் பார்க்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் இல்லாத ஒரு சூழலை தமிழ்நாட்டில் நம்முடைய ஆட்சியிலே நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சியிலே நிச்சயமாகக் கொண்டு வருவோம்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலளித்தார்.

### மாநில விவசாய அணி துணைச் செயலாளர்

# டி.எம்.அரியப்பன் - திருமதி சாந்தி அரியப்பன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி!

### அமைச்சர் சு.முத்துசாமி - ஏ.கே.எஸ். விஜயன் - நிர்வாகிகள் வாழ்த்து!

கிருஷ்ணகிரி,அக்.11-

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஒன்றியம் ராயக்கோட்டை ஊராட்சி போடப்பட்டி கிராமம் கழக மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டி.எம் அரியப்பன் - திருமதி சாந்தி அரியப்பன் ஆகியோரின் புதல்வர் அ.அன்பானந்தம் கிருஷ்ணகிரி மாவட்டம் பூவத்தி ஊராட்சி கருதட்டனூர் கிராமம் ஜி.வெங்கடசாமி திருமதி ஜானகி ஆகியோரின் புதல்வி வே. சொர்ணப்பிரியா ஆகியோரின் மணவிழாவை 20-9-2023 அன்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இல்லத்தில் நடத்தி வைத்தார்.

8.10.23 அன்று கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ தேவராஜ் மஹாலில் மணமக்கள் அ.அன்பானந்தம் வே .சொர்ண பிரியா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துசாமி, டெல்லி சிறப்பு பிரதிநிதி கழக மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், பர்கூர் சட்டப்பேரவை உறுப்பினர் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்கே மதியழகன், ஒசூர் மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கழக மாநில விவசாய அணி இணை செயலாளரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும் எல்பி தர்மலிங்கம் ,கள்ளிப்பட்டி மணி, கழக விவசாய அணி துணைச் செயலாளர்கள் ஆதிகேசவன், புருஷோத்தமன், சுப்பிரமணி, சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினரும் பணமரத்துப் பட்டி ராஜேந்திரன், தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் சுப்பிரமணி, தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் பி. பழனியப்பன், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ஈ.ஜி.சுகவனம், கழகத் தீர்மான குழு உறுப்பினர் எம்.பி., வெற்றி செல்வன், மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை செயலாளர் பி. எஸ்.சீனிவாசன், பாட்டாளி மக்கள் கட்சி கௌரவ தலைவரும் பென்னாகரம் சட்டப்பேரவை உறுப்பினருமான ஜி.கே. மணி, மேகநாதன், தளி சட்டப்பேரவை உறுப்பினர் சிபிஐ மாவட்ட கழக செயலாளர் டி.ராமச்சந்திரன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பி.முருகன், வி.சி.கோவிந்தசாமி, ஆர். கே.நரசிம்மன், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜய், கிருஷ்ணகிரி நகர செயலாளர் எஸ்.கே.நவாப், கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் பரிதா நவாப், பரிதா நவாப் மாவட்ட கழக துணை செயலாளரும் நகர மன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லோரா மணி, கிரீஸ் செந்தில், கிருபாகரன், மாவட்ட கழக துணை செயலாளர் புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், தனலட்சுமி, அப்துல், முனிராஜ்,

பேரூர் கழக செயலாளர்கள் டி.ஆர்.எஸ்.சீனிவாசன், தஸ்தகீர், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி சந்திரன் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஷேக் ரஷீத், பூசன் குமார், தொழிலதிபர்கள் கே.வி.எஸ்.சீனிவாசன், பி.டி.அன்பரசன், ஒன்றிய கழக செயலாளர்கள் ரகுநாத், பாக்யராஜ், கருணாகரன், தனி சேர்மன் சீனிவாசன், தனசேகர், கோவிந்தன், அறிஞர் சாந்தமூர்த்தி, மகேந்திரன், தேங்காய் சுப்ரமணி, குண வசந்தரசு, சேர்மன் குமரேசன், ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், வி.ஜி.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.நாகராஜன், சித்ரா சந்திரசேகரன், அஸ்லாம், மாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர்கள் சுமன், தினேஷ், பேரூர் கழக செயலாளர்கள் வெங்கடப்பன், பாபு சிவகுமார், தொழிலதிபர்கள் டி.உதயகுமார் ஆர். எம்.எம்.முனிரத்தினம், பேரூராட்சி தலைவர்கள் பர்கூர் சந்தோஷ், அம்சவேணி செந்தில் குமார்,

ஒசூர் மாநகர அவைக் தலைவர் செந்தில், பொறியாளர் அணி ஞானசேகரன் மற்றும் தோழமைக் கட்சியை சேர்ந்த தோழர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக கிளைக் கழக நிர்வாகிகள், நண்பர்கள், உறவினர்கள், கழக நிர்வாகிகள் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியின் இறுதியில் அறிவானந்தம், அன்புமதி அறிவானந்தம் ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.





நட்சத்திரங்களின் சந்திரன்!
தமிழ் திரைவானின் சூரியன்!!
கலைஞர் 100 – 44
நாள் : 11.10.2023 புதன்கிழமை மாலை 6.00 மணி
இடம் : வீராசாமி தெரு, எழும்பூர், சென்னை
தலைமை கே.எஸ்.எம்.நாதன்
தலைமை செயற்குழு உறுப்பினர்
முன்னிலை
திரு.பி.கே.சேகர்பாபு
மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
திரு.தயாநிதிமாறன் எம்.பி
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
V.சுதாகர் சொ.வேலு எம்.சி
கோ.ஏகப்பன் பா.ஸ்ரீராமலு எம்.சி ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி
அ.நிர்மலாதேவி எல்.சுந்தர்ராஜன் எம்.சி
பரிதிஇளம்சுருதி எம்.சி பாஃத்திமா முசாஃபர் எம்.சி
போற்றுவோர்
நடிகர் ராஜ்கிரண்
நடிகர் பாண்டியராஜன்
நடிகை ரோகிணி
மேயர் பிரியாராஜன்
இ.பரந்தாமன் எம்.எல்.ஏ ஓ.ஏ.நாகலிங்கம்
நன்றியுரை எஸ்.டால்பின் ஹரி
61வது வட்ட கழக செயலாளர்
கலைஞர் 100 1924 – 2023
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க
Star Digital 044 - 43 55 48 47


தலைமை
டி.ஜெ.கோவிந்தராஜன் MLA
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் – கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்
ஆவடி.சா.மு.நாசர் MLA மாதவரம்.எஸ்.சுதர்சனம் M.A.,B.L.,MLA
திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர்
ஆ.கிருஷ்ணசாமி B.A.,B.L.,MLA திருத்தணி.எஸ்.சந்திரன் MLA
மாநி.ஆதி.தி.ந.கு.செயலாளர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர்
முன்னிலை
மாண்புமிகு இராணிப்பேட்டை. ஆர்.காந்தி
கைத்தறி(ம)துணிநூல் துறை அமைச்சர்
நலத்திட்ட உதவிகள் வழங்கி வாழ்த்துரை வழங்குபவர்கள்
மாண்புமிகு கே.என்.நேரு
கழக முதன்மை செயலாளர் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர்
மாண்புமிகு MRK.பன்னீர்செல்வம்
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
வி.ஜி.ராஜேந்திரன் MLA கே.பி.சங்கர் MLA
திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் மாநி.மீன.அ.து.தலைவர்
காரம்பாக்கம் K.கணபதி MLA ஜோசப்சாமுவேல் MLA
மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்
டாக்டர் கே.ஜெயக்குமார் M.A.,B.Ed.,MP
திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர்
துரை சந்திரசேகர் M.A.,B.L.,MLA
பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர்
மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பொதுக்குழு உறுப்பினர்கள்,
கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி
பிரதிநிதிகள் அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறோம்.
கலைஞர் 100 1924–2023
ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டம்
மீஞ்சூர் பேரூர் தி.மு.கழகம்
சார்பில்
முப்பெரும் விழாவில் பேரறிஞர்
அண்ணா விருது பெற்ற
முன்னாள் அமைச்சர்
மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர்
மீஞ்சூர்.க.சுந்தரம்
அவர்களுக்கு
பாராட்டு விழாவும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
நன்றி தெரிவிக்கும் விழாவும்
முத்தமிழறிஞர் டாக்டர்
கலைஞர்
அவர்களின்
நூற்றாண்டு விழாவை
முன்னிட்டு
நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழா
நாள்: 11.10.2023 புதன்கிழமை மாலை 5.00 மணி
இடம்: எழில் திருமண மண்டபம் மீஞ்சூர்
கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர் நூற்றாண்டு விழா
அன்புடன்...
க.சு.தமிழ்உதயன் B.E.,
மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர்
மீஞ்சூர் பேரூர் தி.மு.க
திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

2025ஆம் ஆண்டில் ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டில் மின்சார வாகன தொழிற்சாலைகள்!

# தமிழ்நாட்டில் வாகன தொழிற் புரட்சி உருவாகி வருகிறது என்றால் அது மிகையல்ல!

## தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!




சென்னை, அக். 11 -

வரும் 2025 ஆம் ஆண்டில் ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டில் மின்சார வாகன தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப் பட உள்ளன. இதன் மூலம் தமிழ்நாட்டில் ஒரு வாகன தொழிற் புரட்சி உருவாகி வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல என "தினத்தந்தி" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

சுற்றுச்சூழலுக்கு ஏற்றது என்பதால் உலகம் முழுவதுமே இப்போது மின்சார வாகனங்களின் பயன்பாடு ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் வாகன இயக்கத்துக்கு 85 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆண்டுக்கு ஆண்டு பெட்ரோல்டீசல் தேவை அதிகரித்துக்கொண்டு இருப்பதால் இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் அளவும் கூடிக்கொண்டே செல்கிறது. விலையும் அதிகரித்து வருகிறது. கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் அந்நிய செலாவணியும் அதிகமாக செலவாகி பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே இதற்கு மாற்றாக மின்சார வாகனங்களின் பயன்பாடு மட்டுமல்லாமல் உற்பத்தியும் ஊக்குவிக்கப்படுகிறது. இதன்மூலம் பெட்ரோல்டீசல் தேவை குறைவதோடு வாகன உரிமை யாளர்களுக்கு செலவும் மிச்சமாகிறது. எனவேதான் மத்திய அரசாங்கமும் தமிழக அரசும் மின்சார வாகனங்களின் உற்பத்திக்கும் அதை வாங்குபவர்களுக்கும் பல சலுகைகளை அளித்துவருகின்றன. தமிழக அரசு மின்சார வாகனங்களுக்காக தனியாக ஒரு கொள்கையை வகுத்துள்ளது. மின்சார வாகனங்களின் 'நம்பர் பிளேட்' மற்ற வாகனங்களின் 'நம்பர் பிளேட்' போல இல்லாமல் பச்சை நிறத்தில் இருக்கும். அதைப்பார்த்த உடனேயே இது மின்சார வாகனம் என்று கண்டுபிடித்துவிட முடியும்.

மின்சார வாகனங்களின் விலை மற்ற வாகனங்களின்விலையைவிட அதிகமாக இருப்பதன் காரணம் இதில் பயன்படுத்தப் படும் லித்தியம் பேட்டரிதான். இந்த பேட்டரியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியது இருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கம் ஜம்முகாஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்ட லித்தியம் படிவங்களை வெட்டி எடுப்பதற்கு ஏலம்விடும் முயற்சியிலும் அர்ஜெண்டினா நாட்டில் லித்தியம் சுரங்கங்களை குத்தகைக்கு எடுக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. இந்த முயற்சிகள் எல்லாம் வெற்றி பெற்றால் லித்தியம் பேட்டரி விலை குறையும் வாய்ப்பு இருக்கிறது.

இந்த நிலையில் தமிழக அரசு மின்சார வாகன தொழிற்சாலைகளை அதிக அளவில் தமிழ்நாட்டில் தொடங்கவும் பொது மக்களிடம் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் எடுத்த முயற்சி நல்ல பலனை கொடுத்துள்ளது. இந்த ஆண்டு இருசக்கர மற்றும் 4 சக்கர மின்சார வாகனங்கள் கார்கள் விற்பனையை எடுத்துக்கொண்டால் கடந்த செப்டம்பர் மாதம் 20 ந்தேதி வரையில் 10 லட்சத்து 44 ஆயிரத்து 600 வாகனங்கள் விற்பனையாகி பெரிய சாதனை படைத்துள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு என்ன பெருமையென்றால் இதில் 40 சதவீதத்துக்கும் மேலான அதாவது 4 லட்சத்து 10 ஆயிரம் மின்சார வாகனங்கள் இங்கு தயாரிக்கப்பட்டவை. கிருஷ்ணகிரி ராணிப்பேட்டை காஞ்சிபுரம் கோயம்பத்தூர் செங்கல்பட்டு திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் இந்த மின்சார வாகனங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சென்னை கோயம்புத்தூர் திருச்சி மதுரை சேலம் திருநெல்வேலி ஆகிய 6 நகரங்களை மின்சார வாகனங்களின் கேந்திரமாக உருவாக்க அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகிலேயே மின்சார வாகன தலைநகரமாக உருவாக்கிவிட வேண்டும் என்ற இலக்கில் தமிழக அரசு அதை அடைவதற்கான உற்பத்தி சூழ்நிலைகளை உருவாக்கிவருகிறது. ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டில் 2025ம் ஆண்டில் மிகப்பெரிய மின்சார வாகன தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட இருக்கின்றன. இதன் மூலம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மின்சார வாகன தொழிலில் தமிழ்நாட்டில் ஒரு புரட்சி உருவாகி வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

இவ்வாறு அத்தலையங்கத் தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.- அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# பெருங்களத்தூர் தெற்கு பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## தலைமை: எஸ்.சேகர்!எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.- இ.கருணாநிதி எம்.எல்.ஏ.- மேயர் வசந்தகுமாரி பங்கேற்பு!

சென்னை, அக்.11-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும்விழா இன்று (11.10.2023-புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் காமராஜர் நெடுஞ்சாலைகலைஞர்திடலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி மன்ற தி.மு.க. குழுத் தலைவருமான எஸ். சேகர்தலைமைவகிக்கிறார். பி.புகழேந்தி எம்.சி., வ.க.ரவிச்சந்திரன், கே. சாமுண்டீஸ்வரி,எஸ்.கமலா சேகர் எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., எஸ்.ராஜேஸ் வரிசங்கர்எம்.சி.,எஸ்.விக்கி, சு.ராஜேஷ், டி.ஜெபதுரை, ஜெ.குப்புசாமி,எஸ்.சிவக்குமார்,வி.யோபு, கே.சுந்தர் ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு எஸ். ஐசக், க.குருநாதன், கே. வெங்கடேசன்,ஆர்.சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன்,பி.சுரேஷ், ஆர்.ரத்தினகுமார், எம்.துளசிராமன், டி.கே.கோட்டி, வி.நடராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றகழகக்குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழகப் பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவி கள்வழங்கிசிறப்புரையாற்று கின்றனர்.

மேலும் தாம்பரம் மாநகரச் செயலாளரும் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், டி.காமராஜ் எம்.சி., மு.ஆதி மாறன், லயன் எஸ்.சங்கர், பொன்.சதாசிவம் ஆகியோர்கலந்துகொண்டுபேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழகநிர்வாகிகள்,இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள்,இலக்கிய அணியினர், வர்த்தக அணியினர், ஆட்டோ ஓட்டுனர்சங்கநிர்வாகிகள்,சிறுபான்மையினர் அணி நிர்வாகிகள் உள்ளிட்டபலர்கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக பகுதி பொருளாளர் ஜெ.மணிவண்ணன் நன்றி கூறுகிறார்.

---

ஒன்றிய அரசை கண்டித்து இன்று டெல்டா விவசாயிகள் முழு கடையடைப்பு!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் - எஸ்.ரகுபதி.- கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை அக் 11-

காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடக அரசை வலியுறுத்தியும், தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது என போராட்டம் நடத்தும் பா.ஜ.க.வை கண்டித்தும் இன்று (அக்.11-புதன்கிழமை) காவேரி டெல்டா மாவட்டங்களில் நடைபெறும் மாபெரும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள் மற்றும் அனைத்துக் கட்சி தோழர்களும் கலந்து கொண்டு போராட்டத்தை முழு வெற்றி அடைய செய்ய வேண்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ். ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழகத்தில் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை டெல்டா மாவட்டங்களில் 5 ஏக்கர் நிலப்பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. காவிரியில் இருந்து தமிழகத்துக்கு போதிய தண்ணீர் திறந்து விடாததால் குறுவை சாகுபடி செய்துள்ள கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்லாமல் சாகுபடி செய்த பயிர்கள் கருகியுள்ளன. இதனால் டெல்டா விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து பெரும் வேதனையில் மூழ்கியுள்ளனர். மேலும் பயிர் வாடுவதை கண்ட விவசாயிகள் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில் டெல்டா மாவட்ட விவசாயிகளை காக்கும் விதத்தில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் காவிரி நடுவர் மன்றத்தில் முறையிட்டு, நடுவர் மன்றம் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்டது.

மேலும் உச்சநீதிமன்றமும் தண்ணீர் திறக்க தீர்ப்பளித்தது. ஆனால் பா.ஜ.க.வினர் மற்றும் கன்னட அமைப்பினர் தமிழகத்திற்கு தண்ணீர் வழங்கக் கூடாது என போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எனவே உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறக்க வலியுறுத்தியும் பாரா முகமாக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து காவிரி டெல்டா மாவட்டங்களில் மாபெரும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டம் நடத்துவது என தமிழ்நாடு அனைத்து கட்சிகள் சார்பில் தீர்மானிக்கப்பட்டு இன்று அக்டோபர் 11 புதன் கிழமை அன்று காவிரி டெல்டா மாவட்டங்களில் மாபெரும் கடையடைப்பு போராட்டம் நடைபெற உள்ளது. இன்று

(11.10.2023-புதன் கிழமை) காலை 10 மணிக்கு புதுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்பு மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற உள்ளது.

அது சமயம் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், விவசாயிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

---

இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமை! இல.பத்மநாபன் வரவேற்புரை!

# திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - கயல்விழி செல்வராஜ் சிறப்புரை!

திருப்பூர், அக்.11-

திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயம்" "தளபதி அரங்கில்" மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் கருத்துக்களை வழங்கினார். இதில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட காங்கயம் ஒன்றியம், படியூரில் தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறைக்கூட்டம் நடத்த தலைமைக் கழகத்தால் ஒப்புதல் கொடுத்து, பாசறைக்கூட்டம் கடந்த 24 .09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நடந்தது. இதற்காக அயராது உழைத்த நல்லுள்ளங்களுக்கும் திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக பாராட்டுகளையும், தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறைக் கூட்டம் மாபெரும் வெற்றியடைந்தமைக்கு இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறது.

### வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பு!

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/ நீக்க/ திருத்தம் / முகவரி மாற்றம் போன்ற பணிகளுக்கு சிறப்பு முகாம் வருகின்ற 04.11.2023 சனிக்கிழமை, 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை, 18.11.2023 சனிக்கிழமை, 19. 11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் இறுதி சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக செயலாளர், நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA - 2) மற்றும் கழக தோழர்கள் இந்த சிறப்பு முகாம்களை தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கொள்ள வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/ இடம்மாறுதல் செய்ய போன்ற பணிகளை ஒவ்வொரு வாக்குச்சாவடியாக மாவட்டக் கழக வழங்கும் குறிப்பேட்டில் ஒவ்வொரு வாக்காளர் பெயருடன் பூர்த்தி செய்து அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர் ஒப்புதலோடு மாவட்டக்கழக அலுவலகத்தில் ஒப்படைப்பதென ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படு கிறது.

### துண்டுப் பிரசுரங்கள் – திண்ணைப் பிரச்சாரங்கள்!

இந்தியாவே வியக்கும் வண்ணம் திராவிட மாடல் ஆட்சியில் மகளிர் முன்னேற்றத்திற்காக மகளிரின் வாழ்வாதாரம் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை ரூ.1000 மாதம் தோறும் கடந்த செப்டம்பர் 15ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் அவரவர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு விடுபட்ட பயனாளிகளுக்கும் கொடுக்கும் முனைப்போடு அரசு செயல்பட்டு கொண்டு இருக்கிறது. இம்மாபெரும் திட்டத்தை வழங்கிய கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், தமிழக மக்களின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வா கிகள் ஒவ்வொருவரும் இத்திட்டத்தை பொதுமக்களின் இல்லம் தோரும் எடுத்து கூறும் வகையில்துண்டு பிரசுரங்களையும், திண்ணை பிரச்சாரங்கள் செய்தும் கழக ஆட்சியின் சாதனைகளை இம்மாபெரும் திட்டத்தை மேலும் வெற்றியடைய செய்ய சிறப்பாக செயல்படுவதென திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மா னிக்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, மடத்துக்குளம் வட்டம், கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள அமராவதி கூட்டுறவு சக்கரை ஆலை கடந்த அறுபது ஆண்டுகளாக மடத்துக்குளம், உடுமலைப் பேட்டை, பழநி, ஒட்டன்சத்திரம், தாராபுரம், பல்லடம், சூலூர் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படும் கரும்புகளை விவசாயிகளி டம் இருந்து பெற்று தமிழகத்தில் உள்ள சக்கரை ஆலைகளில் சிறப்பு பட்ட அரவை காலங்களான ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை அரவை செய்யப்பட்டு அதிக பிழித்திறனோடு உற்பத்தி செய்து வந்தது. இந்நிலையில் கடந்த 2015ம் ஆண்டு சக்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைதுள்ளதால் நவீன படுத்த தமிழக சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் புதுபிப்பதாக அறிவிக்கப்பட்டு இன்று வரை நடைமுறை படுத்த வில்லை. ஆகையால் நடப்பு நிதி ஆண்டில் கரும்பு பதிவு இருந்தும் ஆலையில் அரவை செய்ய எந்த முகாந்திரம் இல்லை என்பதால் இந்நிதியாண்டில் ஆலை இயக்குவதற்கு தேவையான நிதியுதவியினை வழங்கி ஆலையை புனரமைப்பு செய்து இப்பகுதி கரும்பு விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட வேண்டுமென கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதென இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.



திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் ஆலோசனைகளை வழங்கினார். இதில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

---

க.மோகன் தலைமை மு.ரஞ்சன் சிறப்புரை!

# பம்மல் வடக்கு பகுதியில் பாக முகவர் கூட்டம்!

## த.ஜெயக்குமார் எஸ்.கே.நெப்போலியன் பங்கேற்பு!

காஞ்சிபுரம் அக் 11

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பகுதி அனகாபுத்தூர் 3 வது வட்டம் 32வது வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டம் வட்டக் கழகச் செயலாளர் க.மோகன் தலைமையில் பாகமுகவர் பி.ஆர்.ரவி முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாவட்ட கழக பிரதிநிதி எஸ்.கே. நெப்போலியன், வட்ட கழக நிர்வாகிகள் பி.ஆர்.சுப்பிரமணி, ஆர்.எம்.முருகன், ஆர்.கே.நரசிம்மன், தாம்பரம் மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் எம்.டி.விஜயகுமார், துணை அமைப்பளார்கள் க.சோமு, கே.எஸ்.பாபு, பி.சண்முகம், ஞானபிரகாசம், தாம்பரம் மாநகர ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் மோ. சுதாகர்,ஜெயக்குமார், சரவணன், டில்லிபாபு மற்றும் கழகத் தோழர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் 32 வது பாகத்திற்கு ஊட்பட்ட அணைத்து இல்லங்களுக்கு சென்று வாக்காளர்கள் பட்டியலை சரிபார்த்து சேர்த்தல் நீக்கல் பணிகளை மேற்கொண்டு என தீர்மானிக்கப்பட்டது.

---

மயிலை கிழக்குப் பகுதி

# வட்ட வாரியாக பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிவிப்பு!

சென்னை, அக். 11 -

மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ். முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மயிலை கிழக்கு பகுதி சார்பாக தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. அறிவித்தலின்படி பி.எல்.ஏ. 2 நேர்காணலைத் தொடர்ந்து பி.எல்.ஏ.சி. உறுப்பினர்களை நேரில் அழைத்து அவர்களுக்கு எனது (மயிலை கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ். முரளி) தலைமையில் ஆலோசனை வழங்க ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நாள் ஒதுக்கப் பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து முதல் முதல் நாள் புதன்கிழமை அன்று 124 வது வட்டம், வியாழக்கிழமை 124 வது அ வட்டம், 125 வது வட்டம் வெள்ளிக்கிழமை, 125 வது அ வட்டம் சனிக்கிழமை இதனைத் தொடர்ந்து மற்ற வட்டங்களிலும் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் பங்கேற்பார்கள். இடம்: மயிலை கிழக்குப் பகுதி அலுவலகம், நேரம் மாலை 7 மணி முதல்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா, நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் என்று பேசும் ஒன்றிய பா.ஜ.க. அரசு

# ஒரே நதிநீர் இணைப்புச் சட்டம் கொண்டு வரலாமே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, அக்.11

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் கருநாடகத்தைப் பார்த்தாவது, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஒரே குரலில் பேசவேண்டும். எதற்கெடுத்தாலும் 'ஒரே ஒரே' என்று பேசும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு ஒரே நதிநீர் இணைப்புச் சட்டத்தைக் கொண்டு வரலாமே! அதை விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசை வரும் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

காவிரி டெல்டாவில் தஞ்சை, நாகை, திருவாரூர் போன்ற மாவட்ட விவசாயிகளின் கண்ணீர் வற்றாத கண்ணீராகப் பெருக்கெடுத்தோடுகிறது. காரணம், பயிர்களுக்குப் போதிய காவிரி தண்ணீர் வரத்து இல்லாததே!

**உச்சநீதிமன்றத் தீர்ப்பையே மதிக்காத கர்நாடக மாநில அரசு!**

கர்நாடக மாநிலம், அங்கே அவர்களுக்குப் போதிய தண்ணீர் இருந்தும், தமிழ்நாட்டிற்கு உச்சநீதிமன்றமும், காவிரி நதிநீர் ஒழுங்காற்று ஆணையமும் ஆணையிட்டபடி, 5 ஆயிரம் கன அடித் தண்ணீரையோ, 3 ஆயிரம் கன அடி தண்ணீரையோ கொடுக்க திட்டவட்டமாக மறுத்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பையே உதாசீனம் செய்து, இரக்கமற்ற அரசியல் செய்து அடாவடித்தனத்தைத் தொடர்கிறது!

மிகவும் சிக்கலான இப்பிரச்சினையில், அண்டை மாநிலத்துடன் எப்போதும் நல்லுறவு பேணுவதே மக்கள் நலப் பாதுகாப்புக்குரியதாக அரசியல் அமையும் என்ற அடிப்படையில், மிக எச்சரிக்கையுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறார்!

முதலாவதாக, அடிப்படையான ஓர் உண்மையைச் சுட்டிக்காட்டி, அதன் பிறகே மற்ற உண்மைகளுக்குச் செல்லவேண்டும்.

**கர்நாடகத்தைப் பார்த்தாவது தமிழ்நாடு திருந்த வேண்டாமா?**

கருநாடகத்தில் உள்ள எந்த அரசியல் கட்சியானாலும் அமைப்புகள் ஆனாலும் ஒரே குரலில் தொடக்கத்திலிருந்தே தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தரக்கூடாது என்பதில் ஒரே அணியில் நியாயத்தைப் புறந்தள்ளிக்கூட, ஒன்றுபட்டு நிற்கிறார்கள்!

தமிழ்நாட்டில் இதற்கு நேர்மாறாக அவிழ்த்துக் கொட்டிய 'நெல்லிக்காய் மூட்டை அரசியல்' என்ற அவல நிலையே!

மேகதாது அணையைக் கட்ட விடவில்லையே சட்ட நடவடிக்கைகள்மூலம் தமிழ்நாடு தனது உரிமைகளை உச்சநீதிமன்றம் வரை சென்று நிலை நிறுத்துகிறதே என்ற ஆத்திரம் கருநாடக மாநிலத்தின் கட்சி பேதமற்ற அரசியல் விளைபடை!

அண்டை மாநிலச் சகோதரத்துவத்தைக்கூட அவர்கள் மறந்துவிட்டு, அரசமைப்புச் சட்டத்தையும், உச்சநீதிமன்றத்தையும்கூட அவமதிக்கிறார்கள்.

**பா.ஜ.க.வின் இரட்டை வேடம்!**

நேற்றைய (9.10.2023) தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானத்தை ஆதரிக்காமல், அதிதீவிர வேஷம் கட்டி சாக்குப் போக்காகி வெளிநடப்புமூலம் தமிழ்நாடு பா.ஜ.க. வழக்கமான தனது இரட்டை வேடத்தைப் போட்டு, தன்னை தமிழ்நாட்டு மக்களுக்குத் தன்னை சரியாக அடையாளம் காட்டிக் கொண்டுள்ளது!

பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருப்பது வரவேற்கத்தக்கது. என்றாலும், அதில் கூறப்பட்ட சில கருத்துகளைத் தவிர்த்திருந்தால் அவர்களுக்குப் பாராட்டு கிடைத்திருக்கும்; சிறு சறுக்கலைக்கூட இந்த வேளையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தவிர்த்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

பேச்சுவார்த்தைகள் என்ற நாடகம் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதைவிட, தமிழ்நாட்டு விவசாயிகளை மேலும் அதிருப்திக் கடலில் தள்ளவே பயன்படும் என்பது அப்பட்டமான உண்மை! முதலமைச்சராக இருந்தவருக்குப் புரியாதா?

**பேச்சுவார்த்தை பலனளிக்குமா?**

காவிரி நதிநீர்ப் பங்கீட்டு வழக்கு உச்சநீதிமன்றத்தில் வரும்போது எதிர்க்கட்சியாகிய அ.தி.மு.க. வழக்கில் நாங்களும் இணைகிறோம் என்று அல்லவா கூறி உரிந்திருக்கவேண்டும்? அப்படி வாதாடுவதற்குப் பதில், பேச்சுவார்த்தை நடத்த யோசனை கூறுவது எவ்வகையில் ஏற்கத்தக்கது?

ஜெயலலிதா அம்மையார் ஆட்சியிலிருந்தபோது காவிரி நதிநீர் ஆணையப் பிரச்சினையில் ஏன் உச்சநீதிமன்றத்தை நாடி, வழக்கு நடத்தி கடுமையாக வாதாடினார் என்பதை 'வசதியாக' மறந்துவிடலாமா? பேச்சுவார்த்தையை ஏன் தவிர்த்தார்? அது 'அம்மா வழியும் அல்லவே!'

இனி வருங்காலத்தில் தமிழ்நாட்டு நலன் காப்பதில் சறுக்கல்களைத் தவிர்க்கவேண்டும்!

பா.ஜ.க. தன்னை இதன் மூலம் அடையாளம் காட்டிக்கொண்டு விட்டது!

**நோட்டாவுடன் போட்டியிட வேண்டிய நிலை பி.ஜே.பி.க்கு வரும்!**

காவிக் கட்சி தமிழ்நாட்டுத் தேர்தல்களில் இனி "நோட்டாவுடன்" தான் போட்டி போட முடியுமே தவிர, மற்ற கட்சிகளுடன் போட்டி போட முடியாது என்பது இதன்மூலம் உறுதியாகத் தெரிகிறது!

பா.ஜ.க.வின் உட்கட்சி குழப்பம் ஒருபுறமிருந்தாலும், வெளியேயும் சட்டமன்றத்தில் காட்டும் "வித்தைகள்" ஒருபோதும் தமிழ்நாட்டு விவசாயிகளிடம் விலை போகாது!

Upper riparian State என்ற தண்ணீர் பாயும் மேற்பகுதி மாநிலம் என்பதால், தனக்கே காவிரி நீர் முழுமையும் என்ற 'மாயை'யிலிருந்து கருநாடகா வெளியே வரவேண்டும்.

நியாயங்கள் இறுதியில் வெல்லும்! உறுதியான பல் உள்ள காவிரி நதிநீர் ஆணையம் தேவை! தேவை!!

நாட்டின் நதிகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டிய வாஜ்பேயி காலத்திலிருந்து கூறியதில், ஏன் இந்த 9 ஆண்டுகால மோடி அரசு எந்த முயற்சியும் எடுக்கவே இல்லை?

**'ஒரே நதி நீர்' இணைப்புச் சட்டம் கொண்டு வரலாமே!**

புதிய நாடாளுமன்ற கட்டடம், புதிய தனி விமானங்கள் கட்டுதல் போன்றவற்றிற்காக பல்லாயிரம் கோடி ரூபாய்ச் செலவு செய்வதை, இதற்குப் பயன்படுத்தியிருக்கலாமே! அனைத்து மக்கள் நலமும் பாதுகாக்கப்பட்டிருக்குமே!

ஒரு பக்கம் வெள்ளம், மறுபக்கம் கடும் வறட்சி என்ற நிலை மாறி, அனைவரும் பயன்பெற்று, சுமூகமாக நதிநீர் சண்டையின்றி வாழ நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டாமா? அதைச் செய்யத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, அதுபற்றி இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?

ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே ரேஷன் கார்டு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்பதைவிட, ஒரே நதிநீர் இணைப்பு ஏற்பட்டிருந்தால், வெள்ளம், வறட்சி இரண்டு கொடுமைகளிலிருந்தும் நம் நாட்டு மக்கள் அனைத்து மாநிலத்தவரும் காப்பாற்றப்பட்டு, மகிழ்ச்சி வாழ்வு வாழ்வார்களே!

**ஒன்றிய அரசை மாற்ற முடிவு செய்வீர்!**

இதைச் செய்யத் தவறிய ஆட்சியை மாற்றி, புதியதோர் வரலாறு படைக்க, நாட்டு மக்கள் ஆயத்தமாகிட அரிய தருணம் நெருங்குகிறது.

மக்களே, விழிப்புடன் நடந்துகொள்வீர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவ – மாணவிகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரைப்பட வசனங்கள், கவிதைகள் ஒப்பிக்கும் போட்டியை மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ்.பிரகாஷ் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்தார். மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் செல்லப்பொன்னி, மாவட்டக் கழகப் பொருளாளர் ப.க.பழனிசாமி, தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இளையகோபால் உள்ளிட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் மின் கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்படுவது!

# ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படும் வரை தற்காலிகமாக ஒத்தி வைப்பு : நெட்ஓர்க் கட்டணம் 50 சதவீதம் குறைப்பு!

## சட்டமன்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் விளக்கம்!



சென்னை, அக்.11-

குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் மின் கட்டண உயர்வு நடைமுறை படுத்தப்படுவது ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படும் வரை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், மின் உற்பத்தி நெட்ஓர்க் கட்டணம் 50 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது என்றும் சட்டமன்றத்தில் நேற்று கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் விளக்கம் அளித்துள்ளார்.

சட்டப் பேரவையில் நேற்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மின் கட்டண மாற்றம் குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்குப் பதிலளித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆற்றிய உரை வருமாறு:

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில் மின் வாரியத்தில் ஏற்படும் செலவிற்கேற்ப, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் அதனை உயர்த்துவது வழக்கமாக உள்ளது. உதாரணமாக 20-11-2016 ஆ.தி.மு.க ஆட்சி காலத்தில் மின் கட்டணம் 2012ஆம் ஆண்டில் 37 சதவீதமும் 2014ஆம் ஆண்டில், 16.33 சதவீதமும் உயர்த்தப்பட்டது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் மட்டும் 53 சதவீதம் மின் கட்டணம் கூடுதலாக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சியின் மோசமான நிர்வாகத்தால், மின் வாரியம் பெரும் நஷ்மடைந்து, பெரும் கடன் சுமைக்கு உள்ளானது. இது மட்டுமின்றி, குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் தொடர்ந்து மின் கட்டணத்தை உயர்த்தாவிட்டால் தமிழ்நாட்டிற்கு நிதியுதவியோ, மத்திய நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியோ தரப்படாது என ஒன்றிய அரசு கடும் விதிமுறைகளை விதித்தது. இந்த சூழ்நிலையில், வேறு வழியில்லாத காரணத்தால் 2022-23 முதல் 2026-27 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு Multi Year டாரிப் மின் கட்டண மனுவை, கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNERC) முன்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO), சமர்ப்பித்தது.

இதனால் ஏற்பட்ட மின் கட்டண மாற்றம் குறித்து, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் கட்டணத்தை மாற்றி அமைத்திட முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றிக்கு ரூ.2,000 கோடி வருவாய் குறைந்தாலும், தொழில்முனைவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு நிர்ணயிக்கப்பட இருந்த நிலைக்கட்டணம் (Fixed Charges) மாதம் ஒன்றுக்கு 50 கிலோவாட் வரை ரூ.100 லிருந்து ரூ.75 எனவும், 50 கிலோவாட்டுக்கு மேல் 100 கிலோவாட் வரை ரூ.325 லிருந்து ரூ.150 எனவும், 100 கிலோவாட் முதல் 112 கிலோவாட் வரை ரூ.600 லிருந்து ரூ.150 எனவும், 112 கிலோவாட்டுக்கு மேல் ரூ.600 லிருந்து ரூ.550 எனவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் (TNERC) ஒப்புதல் பெற்று மாற்றியமைக்கப்பட்டது. இதன் பின்னர், தொழில் மேம்பாட்டிற்கான மேலும் ஒரு நடவடிக்கையாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவு நுகர்வோர்களின் கோரிக்கைகளை ஏற்று, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான (LT IIIB) உச்சநேர (Peak Hour) நுகர்விற்கான மின்கட்டணத்தை 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைத்து ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த குறைக்கப்பட்ட கட்டணங்களுக்காக ஆண்டிற்கு ரூ.145 கோடியை தமிழ்நாடு அரசு TANGEDCO விற்கு கூடுதல் மானியமாக வழங்குகிறது. இதன் மூலம் சுமார் 3 லட்சத்து 37 ஆயிரம் MSME நிறுவனங்கள் பயன் பெற்று வருகின்றன. தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் Multi Year டாரிப் ஆணையின்படி, 2023 ஜூலை மாதத்தைப் பொறுத்த வரையில், 2022 ஏப்ரல் மற்றும் 2023 ஏப்ரல் ஆகியவற்றின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களின் படி கணக்கிட்டால், 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும் போது பொது மக்களும், தொழில்துறையினரும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இதனை கருத்தில் கொண்டு, கட்டண உயர்வு விகிதம் மறு ஆய்வு செய்யப்பட்டு, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில், 2022 ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணிற்கு பதிலாக 2022 ஆகஸ்ட் மாதத்தின் விலை குறியீட்டு எண் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கட்டண உயர்வு 4.7 சதவிகிதத்திலிருந்து 2.18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே பெறப்பட்ட இக்கோரிக்கைகள் தொடர்பாக 18.04.2023, 21.07.2023 மற்றும் 26.09.2023 ஆகிய நாட்களில் அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் தொழில் நிறுவன சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு அக் கருத்துக்கள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கீழ்க்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. பருவ கால தேவைக்கு ஏற்ப, மாறும் தன்மையுள்ள மின் பளுவை கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகள் தங்களது நிலைக் கட்டணத்தை (Fixed Charges) குறைத்துக் கொள்ளும் வகையில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவினை குறைத்துக் கொள்ளவும், தேவைப்படும் போது உயர்த்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகையை ஆண்டு ஒன்றுக்கு நான்கு முறை பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காக எவ்வித கூடுதல் கட்டணமும் செலுத்த தேவையில்லை. 12 கிலோ வாட்டுக்கு குறைவாக உள்ள குறு நிறுவனங்களுக்கான மின் கட்டணம் IIIB வீதப்படியில் இருந்து IIIA1 வீதப்படிக்கு மாற்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், குறு மற்றும் சிறு தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணத்தை பிற தென்னிந்திய மாநிலங்களோடு ஒப்பிடும் போது ஒரு யூனிட் மின் கட்டணம் ஆந்திரா மாநிலத்தில் 8 ரூபாய் 47 பைசா வாகவும், கர்நாடகா மாநிலத்தில் 7 ரூபாய் 81 பைசா வாகவும், உள்ள நிலையில் தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் 7 ரூபாய் 50 பைசா வாக உள்ளது. அதே போன்று நிலைக் கட்டணத்தை ஒப்பிடும் போது ஒரு கிலோவாட்டிற்கு ஆந்திரா மாநிலத்தில் ரூ.292 ஆகவும், கர்நாடகா மாநிலத்தில் ரூ.275 ஆகவும், கேரள மாநிலத்தில் ரூ.220 ஆகவும் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் ரூ.150 ஆக உள்ளது. பிற மாநிலங்களில் மின் வரி (E.Tax) 10 முதல் 15 சதவீதம் வரை வசூலிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் 5 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மேலும், கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் எரிபொருள் விலையை ஈடு செய்யும் முறையில் ஒவ்வொரு கால் ஆண்டிற்கும் மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது. எனவே பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் நமது மாநிலத்தில் மின்கட்டணம் மற்றும் நிலைக்கட்டணம் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்ட நிலையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கங்கள் இதர கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தியதைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் அந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, மேலும் கூடுதல் சலுகைகளாக தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான LT IIIB உச்ச நேர நுகர்விற்கான மின்கட்டணத்தை ஸ்மார்ட் மீட்டர் (Smart Meter) பொருத்தப்படும் வரை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக ஒத்தி வைத்தும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சோலார் மேற்கூரை மின் உற்பத்தி நெட்வொர்க் கட்டணத்தினை 50% குறைத்தும் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் ஆண்டுக்கு ரூ.50 கோடி அரசுக்கு செலவாகும். இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து MSME நிறுவனங்களின் நலனிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், முதல்வர் அவர்கள் தனி கவனம் செலுத்தி, பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை 2021-22 ஆம் நிதி ஆண்டில் ரூ.741.96 கோடியாகவும், 202223ஆம் நிதி ஆண்டில் ரூ.1025.10 கோடியாகவும், 202324ஆம் நிதி ஆண்டில் ரூ.1502.11 கோடியாகவும், ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி வழங்கி வருகிறார். MSME நிறுவனங்களின் நலனைப் பாதுகாப்பதில் இந்த அரசு முனைப்புடன் செயல்படுகிறது. எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் யாருடைய தூண்டுதலுக்கும் இடம் கொடுக்காமல், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, தொழிலாளர்களின் நலனை எண்ணி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் விளக்கமளித்தார்.

# நந்தன் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும்?

## பேரவையில் கு.பிச்சாண்டி கேள்வி!



சென்னை, அக்.11-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் (9.10.2023) பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நந்தன் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும் என்று கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:-

**கு.பிச்சாண்டி:** (பேரவைத் துணைத் தலைவர்): கீழ்ப் பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்படுத்தப்படும் நந்தன் கால்வாய்த்திட்டத்தை தென்பெண்ணைசெய்யாறு ஆகியவற்றை இணைத்து, நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டத்திற்கான கருத்துரு, தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு, 15 ஆண்டு காலமாகியிருக்கிறது. அத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் நந்தன் கால்வாயோடு இணைக்கின்ற திட்டம், எப்போது நிறைவேற்றப்படும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல, சாத்தனூர் அணை போன்ற பல்வேறு அணைகளிலுள்ள பூங்காக்களை தனியார் பங்களிப்போடு, எம்.ஜி.எம். மற்றும் வி.ஜி.பி. போன்ற பொழுதுபோக்குப் பூங்காக்களைப் போல, அந்த அணைகளிலும் பூங்காக் களை ஏற்படுத்தி, அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் துரைமுருகன்:** பிச்சாண்டி குறிப்பிட்டுள்ள இத்திட்டம் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது அறிவித்த திட்டமாகும். ஆனால், 63 திட்டங்களில் 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. ஆனால், இத்திட்டம் மட்டும் தவறுதலாக 10 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் விட்டுப்போய்விட்டது.

இத்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில் துறை மூலமாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். Dam இருக்கின்ற இடங்களில் பூங்காக்களை அமைப்பது, பராமரிப்பு செய்வது குறித்து, அப்பணிகளை அரசே எடுத்து செய்வதா அல்லது அவற்றை செய்யும் கம்பெனிகளுக்கு விடுவதா என்பது குறித்து அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, ஒன்று அரசே அப்பணிகளை மேற்கொள்ளும் அல்லது அப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய கம்பெனிகளுக்கு அந்தப் பணிகள் ஒப்படைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான சோமு.மதியழகன் (63), உடல்நலக் குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் மறைவெய்தினார். பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.


**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 6**

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.6.ந.க.எண்.இ1/3980/5/2023

**மின்னணு குறுகிய கால திறந்த வெளி (Online Short Open e-Tender) ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

மண்டல அலுவலர் – 6 அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு குறுகிய கால திறந்தவெளி (Short Open e-Tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**Supplying and Fixing of 2 Nos of 50 HP Submergible motor and 4 Nos of 25 HP Submergible Motor at Pumping Station in Stephenson Road in Dn-73, Unit-17A, Zone-6.**

மொத்தப்பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.72.00 இலட்சம் (முன்வைப்பு தொகை ரூ.72,000/-)

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் 18.10.2023 மற்றும் நேரம் அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் 19.10.2023 மற்றும் நேரம் அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு (http://tntenders.gov.in) மற்றும் www.chennaicorporation.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5537 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மண்டல அலுவலர் / ம -6**



**பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (Mech) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.**

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 2167 / N / 2023

வடக்கு வட்டார பயன்பாட்டிற்கென (மண்டலம் 1 முதல் 5 வரை) 50 எண்ணிக்கையில் டிராக்டர்களில் பொருத்தப்பட்ட நீரிரைக்கும் பம்புகள் (4"X4" Size) அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 375 மணி நேரத்திற்கு (ஒவ்வொரு பம்பிற்கும்) வாடகை முறையில் பணியமர்த்தும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம், 18.10.2023 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 19.10.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5534 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**

# மதச்சார்பற்ற இந்தியாவில் ஓர் இந்துத்துவா பிரதமர்?....

**“…கோ**விலில் குழப்பம் விளைவித்தேன்; கோவில் கூடாது என்பதற்காக அல்ல; கோவில் கொடியவர்களின் கூடாரம் ஆகி விடக் கூடாது என்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன்; அவன் பக்தன் என்பதற்காக அல்ல; பக்தி பகல் வேஷமாய் ஆகிவிட்டதைக் கண்டிப்பதற்காக……” இப்படி சமூகத்தின் அவலத்தை உரையாடலாக எழுதியிருப்பார் “பராசக்தி’ எனும் திரைப்படத்தில் தலைவர் கலைஞர் அவர்கள்.

நாடு முழுவதும் மத மோதல்களை உருவாக்குவதற்கு வெறுப்புணர்வுப் பேச்சுகளாலும், கொலைவெறிச் செயல்பாடுகளாலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளாலும் பா.ஜ.க. தலைவர்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். மோடி தலைமையில் சட்டத்திற்கு எதிராக மக்களைப் பிளவுப்படுத்தும் நோக்கில் செயல்பட்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கடமையை நிறைவேற்றி வருகிறார்கள்.

“தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களை தி.மு.க அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோயில் சொத்துக்கள் மற்றும் அதன் வருமானங்களை முறைகேடாக அரசு பயன்படுத்தி வருகிறது” என்று தெலுங்கானா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் பகிரங்கமாகப் பிரதமர் மோடி குற்றம் சுமத்திப் பேசியுள்ளார். இதற்குச் சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற வள்ளலார் 200 ஓராண்டு தொடர் நிகழ்வின் நிறைவு விழாவில், தமிழ்நாடு முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தகுந்த பதில் அளித்துள்ளார். அறநிலையத்துறையில் என்னென்ன சாதனைகள் செய்து வருகிறது என்பதனைப் பட்டியலிட்டும், ஆக்கிரமிப்புச் சொத்துக்களை மீட்டு என்னென்ன அறப்பணிகள் அரசு செய்து வருகிறது என்பது குறித்தும் அப்பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

இந்துக் கோயில்களுக்கு அறநிலையத்துறை இருப்பது போல, இஸ்லாமிய பள்ளிவாசல் மற்றும் தர்க்காக்களுக்கு நிர்வாகம் செய்ய வக்பு வாரியம் என்ற அரசுத்துறை இருப்பது பிரதமர் மோடிக்குத் தெரியாதா? அவருடைய தலைமையில் ஒன்றிய அமைச்சரவையில் வக்பு வாரிய தலைவராக ஸ்மிருதி இரானி அமைச்சராக இருப்பது நினைவுக்கு வரவில்லையா?

அத்துடன் “தமிழக அரசின் பிடியில் கோயில்கள் சுரண்டப்படுகின்றன; அரசின் பிடியிலிருந்து அக் கோயில்களை மீட்போம்” என்று நடை பயணம் எனும் பெயரால் பஸ் பயணம் செய்து வரும் பா.ஜ.க அண்ணாமலைகள் எக்ஸ் தளத்தில் பதிவு செய்திருக்கிறார்கள்.

அயோத்தி இராமர் கோயில் கட்டும் இடத்தில், 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு இடத்தை அறக்கட்டளைக்கு ரூ. 18.5 கோடி கொடுத்து வாங்கியவர்கள். ஆனால், அந்தச் சொத்து அதற்கு முன்னர் ரூ. 2 கோடிக்கு வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தைக் கோயில் எனும் பேரில் வாங்கிய சங்பரிவார அமைப்பினர் ரூ. 18.5 கோடிக்கு வாங்கிக் கொள்ளையடித்திருக்கிறார்கள் என்றால், அந்த மோசடித் தனத்தை என்ன என்று மோடியும் அவர் கூட்டமும் சொல்லத் தயாரா’?



**கவிஞர் தமிழ்தாசன்,**
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

இந்துத்துவாக் கொள்கை வெறியில் ஆடுகின்ற மோடி, ஆர்.எஸ்,எஸ். னுடைய ஊது குழல் கருவியாக இருந்து அடிக்கடிப் பேசி வருகிறார். சிதம்பரம் கோவில்களில் தீட்சிதர்கள் செய்யும் வசூல் மோசடியைப் பேச மறந்துவிட்டார்? கோவையில் பல அரசு ஏக்கர் நிலத்தைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து ஆதியோகி சிலை நிறுவிய ஜக்கி வாசுதேவன் அழைப்பில் அதன் திறப்பு விழாவிற்கு மோடியே வந்து கலந்து சென்றதை மறந்து விட்டாரா? யமுனை நதித் தீரத்தில் சிவசங்கர் பாபாவுக்கு விழா நடத்த அனுமதி கொடுத்த மோடி,, விழா என்ற பெயரால் ஆட்டம்பாட்டம் நடத்திப் பல ஏக்கர் அரசு நிலத்தைப் பாழ்படுத்திச் சுற்றுச்சூழல் மாசை ஏற்படுத்தியதோடு, பழமையான மரபு சார்ந்த உயிரிகள் அழியவும்,அரசுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தியும், நதியைக் கெடுத்த நபருக்குப் பசுமைத் தீர்ப்பாயம் மற்றும் நீதிமன்றம் பல நூறு கோடி ரூபாய் அபராதம் விதித்ததை மறந்து விட்டாரா? இப்படிச் சிதம்பரம் நடராஜர் கோயில், கோவை ஆதியோகி கோயில், மேல்மருவத்தூர்ஆதி பராசக்தி கோயில் என்பன போன்றவை அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா?

அரசியலமைப்பு சட்டத்தின்படி உறுதிமொழி எடுத்துக் கொண்ட பிரதமர் மோடி இந்துத்துவாக் கொள்கையைத் தூக்கிப் பிடித்து வருகிறார். பாபர் மசூதியை இடிக்கக் காரணமான மதவாதிகளான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி போன்றோரின் பா.ஜ.க. வாரிசே மோடி. இந்திய நாட்டின் பிரதமராக இருப்பவர் சமயச் சார்பின்மையைக் கடைப்பிடிப்பவராகச் செயல்பட வேண்டும். ஆனால், அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்குச் சென்று அடிக்கல் நாட்டுத் திருவிழாவில் கலந்து கொண்டவர்தான் மோடி. அதே நேரத்தில் மசூதி கட்டுவதற்கோ, கிறிஸ்துவ ஆலயம், சீக்கியக் கோயில் கட்டுவதற்குச் செங்கல் ஒன்றாவது எடுத்து வைக்க முன் வந்தது இல்லை.

நீதிக்கட்சிக் காலத்தில், பனகல் அரசரின் மந்திரி சபைக்குப் பேரும், புகழையும் அள்ளித் தந்த சட்டந்தான் இந்து அறநிலைய பாதுகாப்புத் துறை உருவாக்கும் சட்டம் என்பதாகும். இதற்கு முன்னர், கடந்த பல்வேறு மன்னர்கள் காலத்தில், கோயிலுக்குத் தானமாகவும் மானியங்களாகவும் ஒதுக்கப்பட்ட பல லட்சக்கணக்கான மதிப்புள்ள ஏக்கர் நிலங்கள், பல்வேறு தனிநபர்களின் ஊழல், கொள்ளை ஆக்ரமிப்புக்கு ஆளாகியதோடு,, உரிய வருமானமின்றி அவதிப்படக்கூடிய துயர நிலை ஏற்பட்டது. அத்துடன், கோவில்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?அவை யாரிடம் உள்ளன? என்று கணக்குகள் கூடப் பார்த்துப் பராமரிக்க முடியவில்லை. கோயில்கள் அனைத்தும் பூஜை செய்யக்கூடிய பிராமணர்கள் கட்டுப்பாட்டில் இருந்ததாலும், தர்மகர்த்தாக்கள் பேரளவுக்குத்தான் இருந்தனர் என்பதாலும், ஊழல் முறைகேடுகள் கட்டுப்படுத்த முடியவில்லை.

தனது சாதியின் குல உயர்வைக் காட்டிக் கடவுளின் கருவறையில் சென்று பூஜை செய்யும் உரிமை பெற்றிருந்த பிராமணர்கள்; கோயில் முழு நிர்வாகத்தையும் தங்களது மனுதர்மக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்பதால், கோயில் தர்மகர்த்தாக்களுக்குத் தெரியாமலேயே பிராமணர்கள் கோவிலின் வருவாயை முறைகேடாகப் பயன்படுத்தி வந்தனர். பல இடங்களில் தர்ம கர்த்தாக்களின் துணையோடு, வருவாயைத் தவறாகவே பயன்படுத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வந்தன , மேலும், மடங்கள், அறக்கட்டளைகள் போன்றவைகளை உருவாக்கப்பட்ட காலத்திலும் கூட, நல்ல நோக்கத்தோடு ஏராளமான சொத்துக்களோடு உருவாக்கப்பட்டும், அவை காலப்போக்கில் கபடம், சூது நிறைந்த நிர்வாக மதியினரால் முறைகேடுகள் பெரிதும் மலியத் தொடங்கிச் செயல்பட்டு வந்தன.

இப்படியான காரணங்களால் எந்த நோக்கங்களுக்காக மடங்களும், அறக்கட்டளைகளும் உருவாக்கப்பட்டனவோ, அந்த நல்ல நோக்கங்கள் சரியாக நிறைவேறாமல் தடைப்பட்டன. அவற்றின் சொத்துக்களும் சீரழிந்து, சுரண்டப்பட வாய்ப்புகள் உண்டாயின. இப்படிப்பட்ட தவறுகளை, ஊழல்களை பிராமணர்கள் மட்டுமின்றி, அவர்களோடு பிராமணர்கள் அல்லாதவர்களும் கூட ஈடுபட்டுச் செய்து வந்தார்கள்.

இது போன்ற கோயில்களில் நடக்கும் தவறுகளைச் சரி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஆங்கில அரசுக்கு இருந்த போதும், 1857இல் சிப்பாய் கலகம் ஏற்பட்ட அனுபவம் காரணமாக, ஆங்கிலேயர் அனுபவித்த துன்பங்கள் இதில் ஈடுபட விடாமல் தடுத்து வந்தன. ஒரு வேளை சரி செய்ய சட்டம் ஆங்கிலேயர் இயற்றியிருந்தால், மதத்தில் “தலையீடு” எனும் குரலை இந்து மதவாதச் சக்திகள் கிளப்பி, இந்திய மக்களிடத்தில் மத உணர்வுகளை பயன்படுத்தி தவறான அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளை ஏற்படுத்த வாய்ப்பு அளித்திருக்க கூடும். இதனால் ஆங்கிலேயர்கள் தயங்கினர் .ஆனால், நீதிக்கட்சிக் காலத்தில், பனகல் அரசர் இராமராய நிங்கார் இப்படி ஒரு சட்டம் 1922 ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி அறிமுகப் படுத்தப்பட்ட இந்து அறநிலைய மசோதா (Hindu Religious Endowment bill) பல்வேறு எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டத்தின் மூலம் சென்னை இராஜஸ்தானியில் இருந்த இந்து கோயில்கள், அரசின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த போது, ஆங்கில அரசு அதனை வெகுவாகப் பாராட்டியது. இருந்த போதும் “ வழிபாட்டுக்குரிய கோவில்களை அரசின் துறையாகக் கூடாது”… “ஆண்டவனைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை..” “மத விஷயங்களில் அரசு தலையிடக்கூடாது…” என்ற எதிர் முழக்கங்கள் எழவும் தொடங்கின. அத்துடன் பனகல் அரசருக்கு நெருக்கமான பல நண்பர்களும், உறவுகளும் இந்த முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர்.

மேலும் வசதிக்காரர்கள், செல்வாக்கு மிக்க ஆரியப் பிராமணர்கள், அவர்களின் அலுவலர்கள் வழக்கறிஞர்கள் எனத் தூண்டி விடப்பட்டு ஆங்கிலேய உயர் அதிகாரிகளைச் சரி கட்டுவதற்கும் ,இந்தச் சட்டம் எந்த விதத்திலும் வைஸ்ராயின் ஒப்புதலைப் பெற்று விடாமல் செய்வதற்கும் முயற்சிகள் செய்து வந்தனர் .சொர்க்கமாக அனுபவித்து ,சொகுசாக உண்டு கொழுத்து, உறங்கி வந்த மடப் பொறுப்பிலிருந்த பிராமணர்கள் அல்லாதவர்கள் கூட, இந்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வந்தனர் .தமிழ்நாடு முழுவதும் ஆரியப் பார்ப்பனர்களும் மடச் சொத்துக்களைக் கபளி கர ஆக்கிரமிப்புச் செய்து வந்தவர்களும் எதிர்ப்பு தெரிவித்துப் போர்ப்பரணி பாடி நின்றனர். பிராமணர்கள் தங்களுக்கு வேண்டிய பத்திரிகைகள் மூலம் மிகப் பெரிய அநீதி நடைபெற்றதாகக் கூறி எழுத வைத்தனர். பிராமண அல்லாதவருக்கு எதிராகச் செயல்பட்ட அனைத்துச் சக்திகளும் ஒன்றாக இணைந்து வைசிராய் ஒப்புதல் இந்தச் சட்டத்திற்கு வழங்கக் கூடாது என்று கடும் நெருக்கடி கொடுத்து வந்தன.

எனினும், பனகல் அரசர் தனது உறுதியைக் கை விடவில்லை. இந்தச் சட்டத்தின் மீது தனிக் கவனத்தைச் செலுத்தி அக்கறை காட்டி வந்தார். ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பிறகு, வைஸ்ராயின் ஒப்புதல் பெறச் சட்டத்தை எடுத்துக்கொண்டு தாமே டெல்லிக்குச் சென்றார். வைஸ்ராய் இர்வின் பிரபு, சட்டம் உறுப்பினர் எஸ். ஆர்.தாஸ் ஆகிய இருவரையும் நேரில் சந்தித்து இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரண நோக்கத்தை விளக்கி ஒப்புதல் பெற்றுத் திரும்பினார் என்பது வரலாறு. தென்னாடு முழுமைக்கும் ஏன் இந்தியாவுக்கே வழிகாட்டியாக முன்னோடியாக இந்தச் சட்டம் அமைந்து சமூக சமய சீரமைப்புக்கு உதவியது என்றால், அது நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் என்ற மாபெரும் சமூக சீர்திருத்தவாதியைச் சேரும் எனலாம்.

எனவே, திடீரென்று பொத்தாம் பொதுவாகத் திடீரென்று எந்த விதத்திலும் சட்டம் கொண்டுவந்து விடவில்லை. கொள்ளைகளை, கபளிகரங்களை, ஆக்கிர மிப்புகளை தடுக்க அறநிலையத்துறை சார்ந்த கோயில்கள், சொத்துக்கள் ஒழுங்குப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த நீண்ட நெடிய வரலாறு உண்டு.

கோவில்களையும், கோவில் சொத்து, அதன் நிலங்களையும் நிர்வாகம் செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் ஒரு பெரிய வரலாறு உள்ளது.1817 ஆம் ஆண்டு மதராசு நிலக் கொடைகள் மற்றும் வாரிசில்லா தவர் அரசு பொருட்கள் ஒழுங் குறுத்தும் சட்டம், உருவாக்கித் திருக்கோயில் நிதி அரசுக் கொடைகள், மக்கள் நலன்கள் ஆய்வு செய்யப்பட் டன.1849 ஆம் ஆண்டு (Board of Revenue) வருவாய் வாரி யத்திடம் கண்காணிக்க ஒப்படைக்கப்பட்டது. 21ஜில்லாக்களில் 8,828 கோயில்கள் அரசு நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம் ஊழல் செய்த தர்மகர்த்தாக்கள் பணி நீக்கப்பட்டன. மூடப்பட்ட கோவில்கள் எல்லாம் திறக்கப்பட்டன.1858 ஆம் ஆண்டு இந்திய நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனி இருந்து பிரிட்டிஷ் மகாராணி யாரிடம் நேரடியாக வந்தது. வெளியில் இருந்தே கோயில் நிர்வாகம் கண்காணிக்கப்பட்டது.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தம். 1916 இல் பிராமணரல்லாத அமைப்பு, தென்னிந்திய நல உரிமைச் சங்கம், 1920 இல் நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி பனகல் அரசரால் 1922 டிசம்பர் 18 சென்னை மாகாணத்திலிருந்த அனைத்துக் திருக்கோயில்களும் அரசின் பரிபாலனம் செய்யச் சட்டம், 1927 இல் இந்து சமய அறநிலைய வாரியம் ஏற்படுத்தப் பட்டது. 1947 - 1949 இல் ஓமந்தூரார் இராமசாமி முதல்வராக இருந்தபோது, எண்ணற்ற முறைகேடுகள் களைய நடவடிக்கை, 1950 இல் சட்ட ஆணையம் மூலம் கோவில்களைப் பராமரிக்கத் தனிச்சட்டம், 1951இல் மெட்ராஸ் இந்து சமய மற்றும் அறக்கொடைகள் சட்டம்,1954 இல் காமராஜர் முதல்வராக இருந்த போது, அவரது அமைச்சரவையில் ரெட்டைமலை சீனிவாசனின் பேரன் பரமேஸ்வரன் அமைச்சராக இடம் பெற்று, இந்து அறநிலையத் துறை ஒழுங்குப்படுத்தும் சட்டம் குறைகள் களைய நடவடிக்கை எடுக்கப்பட இயற்றப்பட்டது. 22/1959 தமிழ்நாடு அறநிலையத்துறைச் சட்டம், சர்.சி.வி. இராமசாமி ஐயர் ஆணையம் குழு பரிந்துரைகள் இந்துச் சமய அறநிலையத் துறை நிர்வகிக்கத் தனிச் சட்டம் உருவாக்க பரிந்துரை.

முதல்வராயிருந்த கலைஞர் காலத்தில் உருவாக்கப்பட்ட அறநிலையத்துறை சீர்திருத்தச் சட்டங்கள், 1970 ஆம் ஆண்டு ஆலயங்களில் அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம், தொடர்ந்து தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காலத்தில் 2021ஆம் ஆண்டு சட்டம் , இப்படி அறநிலையத்துறையில் சீர்திருத்த சட்டங்கள் தொடர்கின்றன. ஆனால், பிரதமர் மோடியும், ஆர்.எஸ்.எஸ். சங்க் பரிவார் அமைப்புகளும், தென்னகத்தில் கோயில்களை தி.மு.க . அரசு கைப்பற்றிக் கொண்டது என்று தவறான, சட்ட விரோதமான வீண் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அவதூறு பேச்சுக்கள் கண்டிக்கத்தக்கதாகும்.

ஆனால், பிரதமர் மோடி, ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற சங்பரிவார அமைப்புகள், இந்துக் கோயில்களையும், அதன் நிர்வாகத்தையும் இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கொள்ளையர் முகமூடி போட்டுக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றனர். தமிழர்களுக்கே உரிய கோயில்களை அதன் சொத்துக்களைச் சுரண்டவும், கொள்ளை அடிக்கவும், பக்தியின் பெயரால் ஒப்படைக்க வேண்டும் என்பது அவர்களது நீண்ட காலக் கோரிக்கை. சமூக நீதிக்காக தொடங்கப்பட்ட திராவிடர் இயக்கம், அரசியல் இயக்கமான தி.மு.க. ஆட்சியில் பேரறிஞர் அண்ணா, கலைஞர் வழி நின்று, தளபதி அவர்கள் மிகச் சிறந்த நிர்வாகத்தை நடத்தி வருகிறார். அவரது அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சர் சேகர் பாபு, அறநிலையத்துறையில் ஆக்கிரமிப்பு செய்த பல்வேறு நிலங்களை மீட்பதோடு பல்வேறு சாதனைகளை மக்களுக்குச் செய்து வருகிறார்.

அண்மையில் ‘தீக்கதிர்’ ஏட்டில் கா. கனகராஜ் சி.பி..ஐ (எம்) என்பவர் எழுதி வெளியிட்ட செய்தியில் கூட சங்பரிவார் அமைப்புகள் சேர்ந்த ஆக்கிரமிப்பாளர் பட்டியல் வந்திருந்தது. திருவண்ணாமலை நகர் அம்மன் அம்மாள் மடம் ரூ.30 கோடி மதிப்புச் சொத்து பி.எல்.சங்கர் (பா.ஜ.க), காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் திருக்கோயில் இடத்தைச் சூரிய நாராயணன் (பா.ஜ.க), காஞ்சிபுரம் அதே கோயிலைச் சேர்ந்த ரூ. 1.5 கோடி சொத்தை ஸ்ரீகண்டன் (இந்து மகாசபை) கன்னியாகுமரி கோதேஸ்வரம் பத்திரகாளி அம்மன் திருக்கோயில் இடம் ரூ.5 லட்சம் மதிப்பு இடம் (சேவா பாரதி,), கன்னியாகுமரி வெள்ளிமலை பாலசுப்பிரமணியசாமி கோயில் இடம் ரூ 10 கோடி மதிப்பு) ஆலயம் முன்னேற்ற சங்கம்); கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயில் இடம் வேதாந்தம் (விஷ்வ இந்து பரிசத்),சென்னை முத்துக்குமாரசாமி கோவில் இடம் ரூ.10 கோடி மதிப்பு, ஆறுமுகம் (பா.ஜ.க.,) தஞ்சாவூர் பந்தநல்லூர் பகபதீஸ்வரர் சுவாமி கோயில் இடம் ரூ. 21.63 இலட்சம் மதிப்பு இராதா (பா.ஜ.க,), கடலூர் பண்ருட்டி நகர் குரு இலட்சுமி அம்மாள் அறக்கட்டளை சொந்தமான இடம் ரூ. 100 கோடி இராமச்சந்திரன் (பா.ஜ.க,,) ஆகியோர் ஆக்கரமித்துக் கொள்ளையடித்துள்ளனர். இப்படியான பட்டியலைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? இப்படி ஆக்கிரமிப்பு செய்த கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டு வருகின்றன என்பதைப் பிரதமர் மோடியும், சங்பரிவார் அமைப்புகளும் அறிந்து கொள்ளட்டும்.

ஆனால், மோடியும் ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவார் அமைப்புகளும், தென்னகத்தில் கோயில்களை தி.மு.க. அரசு கைப்பற்றிக் கொண்டது என்று தவறான சட்ட விரோதமான வீண் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அவதூறு பேச்சுகள் கண்டிக்கத்தக்கதாகும்.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தமிழ்நாடு சிறப்பு காவல் படை 2ம் அணி மைதானத்தில் 11 குறுவட்ட தடகள போட்டி நடைபெற்றது இதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் பரிசுகளை வழங்கினார். உடன் மாவட்ட விளையாட்டு செயலாளர் முனைவர் பூபால முருகன், மாவட்ட உயர் கல்வி ஆய்வாளர் டி.நரசிம்மராவ், வடக்கு பகுதி செயலாளர் ஜி.நாராயணபிரசாத், உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பலர் உள்ளனர்.

## தடகளப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*திருவள்ளூர் அக். 11;*

*திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 2ம் அணி மைதானத்தில் திருவள்ளூர் வருவாய் மாவட்ட அளவில் தடகளப் போட்டி குறுவட்டங்களாக கடந்த சில தினங்களுக்கு முன் நடந்தது.அரசுப்பள்ளி மற்றும் தனியார் பள்ளி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான போட்டி நடைபெற்றது.*

*அந்திமான், ஜெரிப் பேட்டை, திருத்தணி திருவள்ளூர் கடம்பத்தூர், எலாபுரம் கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, சோழவரம், வில்லிவாக்கம் ஆவடி பூந்தமல்லி என 11 குறுவட்டங்களாக பிரித்து 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர், 1500 மீட்டர், 3000 மீட்டர், நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், உயரம் தாண்டுதல், கோலூன்றி தாண்டுதல், குண்டு எறிதல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல் ஆகிய விளையாட்டு போட்டிகளில் கலந்துகொண்டு குறுவட்ட போட்டிகளில் 680, மாணவிகள், 692 மாணவர்கள் வெற்றி பெற்றனர்.*

*முதல் பரிசாக 116 மாணவர்களுக்கு தங்கப்பதக்கம், இரண்டாம் பரிசாக 116 மாணவர்களுக்கு வெள்ளி பதக்கம், மூன்றாம் பரிசாக 116 வெண்கல பதக்கம் பரிசுகள் சான்றிதழ்கள் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்.*

*இப்புட்டியில் முதல் பரிசு மற்றும் இரண்டாம் பரிசு பெறும் மாணவ மாணவிகள் மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு கலந்து கொள்ளலாம்*

*நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு செயலாளர் முனைவர் பூபால முருகன், வடக்கு பகுதி செயலாளர் நாராயண பிரசாத், தலைமை ஆசிரியை விஜய லட்சுமி, பிரேமா, தலைமை ஆசிரியர் ராமமூர்த்தி, திருவள்ளூர் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ரமேஷ், வீரபாண்டி மற்றும் அரசு அதிகாரிகள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

### சட்டமன்ற கழக முன்னாள் உறுப்பினர்

## போளூர் அ.இராசேந்திரன் மறைவு!

### சட்டப் பேரவையில் இரங்கல்!

சென்னை, அக். 11 -

போளூர் சட்டமன்ற கழக முன்னாள் உறுப்பினர் அ.இராசேந்திரன் அவர்கள் மறைவுக்கு சட்டப் பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பேரவையில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு இது குறித்து படித்த குறிப்பு வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் அ.இராசேந்திரன் அவர்கள் 09.10.2023 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. இராசேந்திரன் 1989 -1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் போளூர் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அதனை அடுத்து உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)


எங்கள் முகவரிக்கு

5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
24.05.1975

மறைவு
11.10.2018

சி.சி.கதிரவன்
DHMCT., MTM

என்றும் நினைவில்...
அம்மா சி.சின்னம்மாள் சின்னச்சாமி Ex.MC
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்

மனைவி, மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்
மைத்துனர்கள், நண்பர்கள், உற்றார் - உறவினர்கள்
மற்றும்
நியூ கதிரவன் பேக்கரி - நியூ கதிரவன் ரிலாக்ஸ் கார்னர்
நியூ கதிரவன் பஸ் சர்வீஸ் - நியூ கதிரவன் விவசாய பண்ணை
ஊழியர்கள் - ஆரப்பாளையம், மதுரை

M.R.கிராபிக்ஸ் 99655 67373

‘இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48’ திட்டத்தால் - சாலை விபத்து உயிரிழப்புகள் பெரிய அளவில் குறைந்துள்ளன!

# அரசு மருத்துவமனை காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!

## சட்டப்பேரவையில் - மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

சென்னை, அக். 11

தமிழ்நாட்டில் வெறும் 220 மெட்ரிக் டன் அளவிற்கு இருந்த ஆக்சிஜன் சேமிக்கும் திறன் தற்போது 2068.12 மெட்ரிக் டன் அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது என்றும், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்படி சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்பு விகிதம் மிக பெரிய அளவில் குறைந்துள்ளது என்றும், சட்டப்பேரவையில், நேற்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.



சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன், இது குறித்து குறிப்பிட்டதாவது : -

தேனி மாவட்டம், கம்பம் தொகுதிக்குட்பட்ட கம்பம் அரசு மருத்துவமனை 174 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் 17 DType Cylindersம், 35 BType Cylindersம், 10 AType Cylindersம் மற்றும் 9 CType Cylindersம் இருப்பில் உள்ளன. சின்னமனூர் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் வட்டம் சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் 10 DType Cylindersம், 9 BType Cylindersம் மற்றும் 11 AType Cylindersம் பயன்பாட்டில் உள்ளன. அதே போன்று, உத்தமபாளையம் அரசு பொது மருத்துவமனை 74 படுக்கை வசதிகள் கொண்ட வட்டார மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் 20 DType Cylindersம், 13 BType Cylindersம், 15 AType Cylindersம் மற்றும் Oxygen Cylindersம் இருப்பில் உள்ளன. இதைப் பயன்படுத்தி தங்குதடையின்றி உடனடியாக ஆக்சிஜன் தேவைப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் PSA Oxygen Plant (1,000 LPM) வசதியும் இருக்கிறது. எனவே கம்பம் தொகுதிக்குட்பட்ட கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம் மற்றும் பெரியகுளம் ஆகிய அரசு மருத்துவமனைகளில் O2 Generator நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும் இந்த அரசு அமைவதற்கு முன்பு தமிழ்நாட்டில் வெறும் 220 மெட்ரிக் டன் அளவிற்கு ஆக்சிஜனை சேமிக்கும் திறன் கொண்ட வசதி இருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய தீவிரமான முயற்சியின் காரணமாகவும், அவர் மேற்கொண்ட மிகச் சிறந்த பல்வேறு பணிகளின் விளைவாகவும், தற்போது 2068.12 மெட்ரிக் டன் அளவிற்கு ஆக்சிஜனை சேமிக்கும் திறன் கொண்ட வசதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறது. மேலும் Oxygen Cylinders, Oxygen Concentrators, Generators உள்ளிட்ட எல்லா விதமான வசதிகளும் அனைத்து மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. மேலும் உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதைப் போல, O2 வசதி அவசியம் இருப்பின் எதிர்காலத்தில் அதை நிறுவுவதற்குரிய பணிகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும்.

அனைத்து வட்ட மருத்துவமனைகளுக்கும், வட்டம் சாரா அரசு மருத்துவமனைகளுக்கும், இந்த PSA Oxygen Plant தேவையில்லை என்பதை அவரே நன்றாக அறிவார். Concentrators, Generators போன்ற இந்த வசதிகளே போதுமானது. என்றாலும்கூட, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மணப்பாறையில் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் ஒரு பெரிய அளவிலான 142.5 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜன் சேமிப்பு கிடங்கு திறந்து வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற பெரிய அளவிலான மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகள், கல்லூரி மருத்துவமனைகளுக்குத்தான் இந்த வசதி வேண்டுமே தவிர, அனைத்து வட்டார மருத்துவமனைகளுக்கும் இந்த வசதி தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம்மைக்காக்கும் 48 திட்டம்!

இறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்கின்ற ஒரு தவறான தகவலை அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். உண்மையில் அவ்வாறு இல்லை. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம்தேதி, இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு நம்மைக் காக்கும் 48 என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தை தமிழ்நாட்டில் கொண்டு வந்து, சாலை விபத்துகளில் சிக்கியவர்களை உடனடியாக காப்பாற்றுவதற்கான ஓர் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் தற்போது சற்றேறக்குறைய 2 இலட்சம் விபத்துகளில் சிக்கியவர்களினுடைய உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிலையில் சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பு என்பது, மிக பெரிய அளவில் குறைந்து வருகின்றது. வத்தலகுண்டு அரசு மருத்துவமனைக்குத் தேவையான வசதிகள் என்னென்ன வேண்டுமென்பதை ஆராய்ந்து, எதிர்காலத்தில் செய்து தருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் Cath Lab வசதி உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் Cath Lab என்று சொல்லக்கூடிய இருதய அறுவை சிகிச்சைக்கான அந்த அமைப்பினை தோற்றுவிப்பதற்கு உத்தரவிட்டு, அந்த வகையில் கடந்த ஆண்டும் கூட நெல்லையிலும், திருவாரூரிலும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. படிப்படியாக ஒவ்வொராண்டும் நிதியாதாரத்திற்கேற்ப ஒவ்வொரு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், இருதய அறுவை சிகிச்சைக்கான அந்த அமைப்பு தோற்றுவிக்கப்படவிருக்கிறது. ஓர் அமைப்பு உருவாக்குவதற்கு நான்கிலிருந்து நான்கரை கோடி ரூபாய் என்கிற அளவில் செலவாகின்ற காரணத்தினால், ஒவ்வொராண்டிற்கும் Priority அடிப்படையில் அதனை அமைக்கின்ற பணியினை தொடர்கிறோம்.

### மருத்துவமனை பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

கறம்பக்குடி மருத்துவமனையை தரம் உயர்த்தி 8 ஆண்டுகள் ஆகின்றது. அதற்கேற்றாற்போல் அங்கே மருத்துவர்கள், செவிலியர்கள் பணிநியமனத்திற்கான அரசாணை வெளியிடப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே 8 ஆண்டுகளுக்கு முன்னால், ஓர் அரசு மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டதற்கு பிறகு, தரமுயர்த்தப்படுகிற போதே கட்டமைப்பை மேம்படுத்துவதும் அங்கே எந்தளவுக்கு பணியாளர்கள் வேண்டும் என்பதை ஒரு அரசாணை வெளியிட்டு செய்வதும் என்பது தான் ஒரு சிறப்பான பணியாக இருக்கும். ஆனால், கடந்த காலத்தில் 130 மருத்துவமனைகள் தமிழ்நாடு முழுவதும் இதுபோல் தரமுயர்த்துவதற்கான அரசாணைகள் வெளியிட்டார்கள். பெயர் பலகைகளை மாற்றினார்களே தவிர, கட்டமைப்புகளை மேம்படுத்துவதோ அல்லது பணிநியமனங்களை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதோ என்பது செய்யவில்லை. அந்தவகையில் தான், கறம்பக்குடி மருத்துவமனையும் அதிலே ஒன்று. கறம்பக்குடியைச் சேர்ந்த பொதுமக்களை வரவழைத்து, நாமும் அவர்களிடேத்திலே பேசியிருக்கிறோம். 8 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்று அந்த தவறு. அதை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவார்ந்த ஆலோசனைகளைப் பெற்று அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஓர் மருத்துவமனையை தரம் உயர்த்துதல் என்பது கட்டிடங்களை கட்டுவது என்பதையும் கடந்து, கட்டடங்கள் கட்ட வேண்டும். மருத்துவர்கள் புதியதாக நியமிக்க வேண்டும். ஒரு அரசு சுகாதார நிலையமாக இருக்கிறபொழுது, ஒரு மருத்துவர், இரண்டு மருத்துவர் இருப்பார். வட்டார மருத்துவமனையாக தரம் உயர்த்தும்போது 7,8 மருத்துவர்கள் தேவைக்கேற்ப நியமிக்கப்படுவார்கள். அந்த மருத்துவ பணியிடங்களை உருவாக்க வேண்டும். இந்த மாதிரி, எந்த மருத்துவப் பணியிடங்களையும் உருவாக்காமல் 130 மருத்துவமனைகள் தரமுயர்த்தப்பட்டது என்பது 7,8 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்று இருக்கிறது. இந்த 130 மருத்துவமனைகளில் கறம்பக்குடியும் ஒன்று. 130 மருத்துவமனைகளுக்கான பட்டியலை தங்களிடத்தில் தருகிறேன். உறுப்பினரிடத்தில் தந்து. இதையெல்லாம் அவரே ஆராய்ந்து, இத்தனை மருத்துவமனைகளை தரமுயர்த்தியிருக்கிறோமே இவைகளுக்கு மருத்துவர் களை நியமித்திருக்கிறோமோ, செவிலியர்களை நியமித்திருக்கிறோமா, மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களை நியமித்திருக்கிறோமா என்பதை அடுத்தக் கூட்டத்திலோ அல்லது நாளைய தினம் கூட அவர் தாராளமாக பதில் சொல்லலாம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.




தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொழில்துறை சார்பில் சென்னை லீலா பேலஸில் நேற்று (10.10.2023) நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் (INDUSTRY ENGAGEMENT MEET) நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த TCS, HCL TECHNOLOGIES PEGATRON TECHNOLOGY, WIPRO மற்றும் Southerland ஆகிய நிறுவனங்களை பாராட்டி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினர்.

அண்ணா விருது பெற்ற க.சுந்தரத்துக்குப் பாராட்டு விழா! டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை!

# மீஞ்சூரில் கலைஞர் நூற்றாண்டு விழா - நல உதவிகள் வழங்கல்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் - ஆர்.காந்தி சிறப்புரை !

திருவள்ளூர், அக்.11-

ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டம்,மீஞ்சூர் பேரூர் கழகம் சார்பில் முப்பெரும் விழாவில் பேரறிஞர் அண்ணா விருது பெற்ற முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் அவர்களுக்கு பாராட்டு விழாவும் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் இன்று (11.10.2023 புதன்கிழமை) மாலை 5 மணிக்கு எழில் திருமண மண்டபம் மீஞ்சூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.ஜெ.கோவிந்தராசன், எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆதி திராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.,மாவட்டச் செயலாளர் திருத்தணி என்.சந்திரன் எம்.எல்.ஏ.ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர் ஆர் காந்தி,மு. பகலவன்,பி.ஜெ.மூர்த்தி,மு. கதிரவன்,கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ். ரமேஷ், கே. சுப்பிரமணி, டாக்டர் கே.பரிமளம் விசுவநாதன், பி.வெங்கடாஜலபதி, பா.செ. குணசேகரன், ஏ.வி. ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு,எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ.,கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ஜோசம் சாமுவேல் எம். எல்.ஏ., கே.ஜெயக்குமார் எம்.பி.,துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ., கும்முடிப்பூண்டி கி.வேணு, இ.ஏ.பி.சிவாஜி, சி.எச். சேகர்.,வெ.அன்புவாணன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம்,

எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்,பா.சுகுமாறன்,கா.சு. ஜெகதீசன், அத்திப்பட்டு நா.செல்வசேகரன்,மு.மணிபாலன்,டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, கி. வே.ஆனந்தகுமார், பொன்னுசாமி என்கிறஜான், ந.பரிமளம், ஜி.ரவிக்குமார், பி.முத்து, இரா.அறிவழகன், அபிராமி குமாரவேல்,சகிலா அறிவழகன், கே.சசிகுமார், ருக்மணி மோகன்ராஜ்,மு. ராஜாத்தி, செல்வசேகரன், அப்துல் ரஷீத், ப.அலெக்சாண்டர், தமிழ்ச்செல்வி பூமிநாதன், ராஜேஸ்வரி எம்.கேசவன், ஏ.ஆர்.குமாரவேல், கே.வி.லோகேஷ், ஆ.வெற்றி என்கிற ராஜேஷ், ஜி.பி.வெங்கடேசன், கே.கிருஷ்ணமூர்த்தி, ஏ.கே. சம்பத்குமார், என்.வில்சன், நிலவழகன், பழவை அ.முகமது அலவி, மு.தினகரன், மு.பாஸ்கரன், டி.மணி,ஜி. ரமேஷ், என்.கோபி, வி.பி. ரவிக்குமார், பா.தனசேகரன்,கே.ஆறுமுகம், தேசராணிதேசப்பன்,ஜெயலலிதா சசிதரன், எம்.ஆர்.ஸ்ரீதர், கே. ராஜேஷ், கோல்டுமணி, சி.சுமன்,டி.லட்சுமி நாராயணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

டி.எஸ்.கதிரவன், க.சு. செந்தில்குமார், க.சு.தமிழ்பிரியன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மீஞ்சூர் பேரூர் கழகச் செயலாளர் க.சு.தமிழ் உதயன் செய்துள்ளார்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமை ! மீ.வே.கர்ணாகரன் வரவேற்புரையில்

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் !

## பேராசிரியர் சுப. வீரபாண்டியன்,கே.பி.சங்கர், டாக்டர் நா.சந்திரபாபு சிறப்புரை!

சென்னை அக்:11

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (11.10.2023 புதன்கிழமை ) மாலை 6 மணி அளவில் மொண்டியம்மன் நகர் மார்க்கெட் அருகில் நடைபெறுகிறது.

இம் மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமை ஏற்கிறார்.

சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய துணை பெரும் தலைவருமான மீ.வே. கர்ணாகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

வழுதிகை நா.செல்வசேகரன்,ஏ.காசிம் முகமது,கே.எம். துரைவேல்,ப. சீனிவாசன், கீ. வீரம்மாள்,செ.அரசு,இரா. விஜயன்,பா. சேகர்,பொன். கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்,கே. பி.சங்கர் எம்.எல்.ஏ,கழக இலக்கிய அணி பொருளாளரும் மாதவரம் தொகுதி பார்வையாளருமான டாக்டர் நா.சந்திரபாபு ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் மாவட்ட நிர்வாகிகள் வி. இராமநாதன்,குறிஞ்சி கணேசன்,மூ. ராஜேந்திரன்,டி. ராமகிருஷ்ணன்,பி. அறிவழகி,எம். ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் என். பரந்தாமன், ஜெ. ஜெய்மதன், டி.ஏ.ராஜூ, இரா. முருகேசன், பி.சாந்தி, எஸ். நந்தகோபால் மற்றும் புழல் எம்.நாராயணன்,ஜீ. துக்காராம்,ஜி. தயாளன்,பெ.சரவணன்,ஜி.ராஜேந்திரன்,அரசு வழக்கறிஞர்கள் ஐ. ஜான்,என்.முகிலன் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஒன்றிய ஊராட்சி கிளை செயலாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

என்.முகமது அலி,ஜி.ஆர். பத்மநாபன், எம். ஜெகன்,ஆர்.குமரன்,என். விஜய்,ஏ.கே.கௌதம்,கே. கவியரசு,கே. ஜெயக்குமார்,டி. சம்பத்குமார்,எஸ். பார்த்திபன்,சன் முகமது ரபிக்,ஜே. டைசன்ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை சோழவரம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மீ.வே. கர்ணாகரன் செய்துள்ளார்.

இரா.கிரிராஜன் எம்.பி.யின் பரிந்துரையை ஏற்று

# கொடுங்கையூரைச் சேர்ந்தவரின் சிகிச்சைக்கு பிரதமர் ரூ.2.50 லட்சம் நிவாரண நிதி!

புதுடெல்லி, அக்.11-

சென்னை கொடுங்கையூரை சேர்ந்தவரின் புற்றுநோய் சிகிச்சைக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 2.50 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற மேலவை உறுப்பினரும், தி.மு.க சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளருமான இரா. கிரிராஜன் விடுத்த கோரிக்கையை ஏற்று பிரதமர் அலுவலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சென்னை கொடுங்கையூரை சேர்ந்த திருமதி. மாபுபீ பாஷா. இவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற நிதி உதவி இல்லாமல் இருந்தார். இது தொடர்பாக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து, உதவிடுமாறு பிரதமர் மோடிக்கு இரா. கிரிராஜன் கடிதம் எழுதியிருந்தார்.

இந்த பரிந்துரையையும் வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்ட பிரதமர் மோடி, திருமதி. மாபுபீ பாஷா புற்றுநோய் சிகிச்சைக்கு ரூ. 2.50 லட்சம் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதங்களை மருத்துவமனைக்கும் இரா. கிரிராஜன் மற்றும் நோயாளிக்கும் பிரதமர் அலுவலகம் அனுப்பியுள்ளது.

சிகிச்சைக்கான தொகை ரூ. 2.50 லட்சத்தை நோயாளி சிகிச்சை பெறும் சென்னை அடையாறு, புற்றுநோய் மையத்துக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை, பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி பொறுப்புகளுக்கு மாவட்ட செயலாளர் தா. இளையஅருணா.எம்.சி.தலைமையில் மாணவர் அணி இணை செயலாளர் எஸ்.மோகன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் ஆகியோர் முன்னிலையில் மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை.த.சோழராஜன்,பூர்ண சங்கீதா சின்னமுத்து ஆகியோர் நேர்காணல் நடத்தினர். நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, அவைத்தலைவர் இரா.வெற்றிவீரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள்,மு.கோபி,நாகம்மை கருப்பையா,பகுதி செயலாளர்கள், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்,இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ்,அ.முருகன்,மோ.ரவிக்குமார், எஸ்.சத்தீஸ்வரி, நி.எழிலரசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இஸ்ரேல் போரில் சிக்கியுள்ள

# தமிழர்களுக்கு உதவி எண்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை,அக்.11-

இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கு இடையே போர் நடைபெற்று வரும் நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நாட்டின் மீது பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் படையினர் அக். 7ல் திடீர் தாக்குதல் நடத்தினர். இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டுள்ளது. இரு தரப்பிலும் சுமார் 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஹமாஸ் படை வசம் இருந்த காஸா பகுதியை தங்கள் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

போர்ச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், இஸ்ரேல், பாலஸ்தீனத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே தற்போது போர் நடைபெற்று வரும் நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்தோருக்கு பின்வரும் நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அயலகத் தமிழர் நலத்துறையால் உடனடியாக உதவி எண்கள் வெளியிடப்பட்டு, அங்கு பாதிக்கப்பட்டுள்ளோர் அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர் தமிழ்நாடு அரசை உதவி எண்கள் 8760248625, 9940256444, 9600023645 மூலமாகவும், மின்னஞ்சல் nrtchennai@tn.gov.in, nrtchennai@gmail.com மூலமாகவும் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன் மூலம், அங்குள்ள தமிழர்களிடம் தற்போது தொடர்பு கொண்டு, சுமார் எண்பத்து நான்கு (84) நபர்களின் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் அங்கு மேற்படிப்புக்காகவும், திட்டப் பணிகளுக்காகவும் சென்றவர்கள். இதில் சில சுற்றுலா பயணிகளும் அடங்குவர். இவர்கள் பெர்சிபா (Beersheba), எருகாம் (Yeruham), பென் குரியான் (Ben Gurion), கிழக்கு ஜெருசேலம் (East Jerusalem), ஜெருசேலம் பல்கலைக்கழகம் (University of Jerusalem) மற்றும் டெல் அவிவ் பல்கலைக்கழகம் (Tel Aviv University) போன்ற இடங்களில் தங்கி உள்ளனர்.

இத்தகவல்கள் உடனடியாக மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு, அவர்களை உடனடியாக மீட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அங்குள்ள தமிழர்கள் தாங்கள் தற்போது நலமாக இருப்பதாகவும், தங்குமிடம் மற்றும் உணவுத் தேவைகளுக்கான சிரமங்கள் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளதோடு, தங்களுடன் தொடர்பில் இருக்கும் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்து காணொளி மூலமாக தகவல் அனுப்பியுள்ளனர்.

மேலும், அயலகத் தமிழர் நலத் துறை மூலம் இஸ்ரேலில் உள்ள தமிழர்களின் இங்குள்ள குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு, நிலைமை குறித்து தொடர் தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு அங்குள்ள தமிழர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதுடன், அங்குள்ள சூழ்நிலை மற்றும் ஒன்றிய அரசின் ஆலோசனையின் அடிப்படையில் அவர்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் கோரிக்கை ஏற்று - ஒன்றிய அரசு - கொப்பரைத் தேங்காய்

# கொள்முதலுக்கான காலத்தை நீட்டித்து - கொள்முதல் அளவையும் உயர்த்தியுள்ளது!

## இந்நல்வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள -

## வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

**சென்னை, அக்.11– தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒன்றிய அரசு கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கான காலத்தை நீட்டித்து கொள்முதல் அளவை உயர்த்தியுள்ளது.**

**விவசாயிகள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் 4.58 இலட்சம் எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு சுமார் 3.34 இலட்சம் மெட்ரிக் டன் கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது.

கொப்பரையின் சந்தை விலை குறைந்த பட்ச ஆதரவு விலையை விடக் குறையும்போது தென்னை விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் விலை ஆதரவுத்திட்டம் (Price Support Scheme) செயல்படுத்தப்படுகிறது. இதன்படி அரவைக் கொப்பரை கிலோ ரூ.108.60 என்ற வீதத்திலும், பந்துக் கொப்பரை கிலோ ரூ.117.50 என்ற வீதத்திலும் தேசிய வேளாண்மை கூட்டுறவு இணையத்திற்காக (NAFED) குறைந்தபட்ச ஆதரவு விலையில் (Minimum Support Price) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் (Regulated Markets) மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் 01.04.2023 முதல் 30.09.2023 வரையிலான காலகட்டத்தில் 37,638 விவசாயிகளிடமிருந்து ரூ.597.225 கோடி மதிப்பிலான 54,993 மெ. டன் அரவைக் கொப்பரை கொள்முதல்செய்யப்பட்டுள்ளது.

வெளிச்சந்தையில் கொப்பரை விலை தொடர்ந்து சரிந்து வருவதால், விவசாயிகளிடமிருந்து கொப்பரை கொள்முதலுக்கான கால அளவினை நீட்டிக்க வேண்டி தொடர் கோரிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, கொப்பரை கொள்முதலுக்கான இலக்கு 56,000 மெட்ரிக் டன்னிலிருந்து 90,000 மெட்ரிக் டன்னாக (அதாவது கூடுதலாக 34,000 மெ.டன்) உயர்த்தப்பட்டதுடன் கொள்முதல் செய்யும் கால அளவும் 26.11.2023 வரை ஒன்றிய அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது குறித்த அரசாணையும் 06.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆகையால் தமிழ்நாட்டில் உள்ள தென்னை அதிகம் சாகுபடி செய்யப்படும் 24 மாவட்டங்களில் உள்ள 75 ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் தங்களது கொப்பரைத் தேங்காயை விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (10.10.2023), போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத்துறை சிறப்புச் செயலாளர் தி.ந.வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு (P.T.C.S) மேலாண் இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவன இயக்குநர், போக்குவரத்துத் துறை தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எஸ்.புதூர் ஒன்றியத்தில்

# 511 மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, அக். 11 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி எஸ்.புதூர் பாரிவள்ளல் ஒன்றியத்திற்குட்பட்ட உலகம் பட்டி, வி.புதூர், கட்டுகுடி பட்டி, கரிசல்பட்டி, முசுண்டபட்டி, கட்டுகுடி பட்டி அரசு மாதிரி பள்ளி ஆகிய ஏழு பள்ளிகளில் உள்ள 511 மாணவ - மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசுந்தரம் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெரிய கருப்பன் பேசுகையில் பத்தாம் வகுப்பு, பிளஸ் டூ தேர்வில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு தலா ரூபாய் பத்தாயிரம் வீதம் முப்பதாயிரமும், இரண்டாவது இடம் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு தலா ரூபாய் 5000 வீதம் ரூபாய் 15000ம் மூன்றாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு ரூபாய் 3000 வீதம் ரூபாய் 9000 ஆக மொத்தம் ரூபாய் 54,000 ஊக்கத்தொகை மற்றும் புரவலர் நிதியாக ரூபாய் 10, ஆயிரம் ஆக மொத்தம் ரூபாய் 64ஆயிரத்தினை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பொன்மணி பாஸ்கரன், முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து, வட்டாட்சியர் சாந்தி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஒன்றிய செயலாளர் செல்வராஜ், உட்பட அரசு அதிகாரிகள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் கலந்து கொண்டார்கள் .

**கால்நடை மருந்தகம் திறப்பு விழா**

சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றியம் மித்ரா வயலில் தரம் உயர்த்தப்பட்ட புதிய கால்நடை மருந்தகத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், கோட்டாட்சியர் பால்துரை, ஒன்றிய குழு தலைவர் திருமதி சரண்யா, கால்நடை மருத்துவதுறை இணை இயக்குனர் பொறுப்பு கார்த்திகேயன், உதவி இயக்குனர் எஸ். எம். பாலசுப்பிரமணியன் , மாவட்டக் கழக துணை செயலாளர். த.சேங்கை மாறன், ஊராட்சி மன்ற தலைவர் ஐஸ்வர்யா, வட்டாட்சியர் தங்கமணி, ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னதுரை கே.ஆர். ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் உட்பட அரசு அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

புவனகிரி - வேதபுரீஸ்வரர் கோயிலுக்கு குடமுழுக்கு! கழக அரசு ஏற்பட்ட 28 மாதங்களில்

# திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு - 600 கோடி ரூபாய்க்கு மேல் உபயதாரர்கள் நன்கொடை!

## சட்டப்பேரவையில் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

**சென்னை, அக்.11– சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது பதிலளித்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, ''63 ஆண்டுகளுக்குப் பிறகு கழக அரசின் புவனகிரி வேதபுரீஸ்வரர் கோயில் குடமுழுக்கு திருப்பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது'' என்றும் ''கழக அரசு அமைந்த கடந்த 28 மாதங்களில், கழக அரசு மீது கொண்ட நம்பிக்கையினால் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு 600 கோடி ரூபாய்க்கு மேலாக உபயதாரர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்'' என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**ஆ.அருண்மொழித் தேவன்:** புவனகிரியில் உள்ள அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** புவனகிரியில் அமைந்திருக்கின்ற வேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வல்லுநர் குழுவின் பரிந்துரை பெற்றிருக்கின்றது. கூடிய விரைவில் அந்தத் திருக்கோயிலுக்கு திருப்பணி ஆரம்பிக்கப்படும்.

**ஆ.அருண்மொழித் தேவன்:** புவனகிரி வட்டம், கீழ்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள வான் கோடீஸ்வரர் கோயிலும் மிகவும் பழமையான, தொன்மையான திருக்கோயிலாகும். எனவே, புகழ்பெற்ற வான் கோடீஸ்வரர் திருக்கோயிலையும் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** உறுப்பினர் அவர்கள் முதலில் கோரிய வேதபுரீஸ்வரர் கோயில் என்பது, 1960 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற கோயிலாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய குடமுழுக்குகள் அனைத்தையும் நடத்த வேண்டுமென்ற உத்தரவிற்கிணங்க, கிட்டத்தட்ட 63 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திருக்கோயில் இப்போது தான் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் கோரிய மற்றொரு திருக்கோயிலான வளையமாதேவி திருக்கோயிலும் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. 31 இலட்சம் ரூபாய் செலவில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் பொது நல நிதியிலிருந்து அந்தத் திருப்பணிக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வெகு விரைவில், அந்தத் திருப்பணி மேற்கொள்ளப்படும்.

**ஆ.அருண்மொழித்தேவன்:** எனது புவனகிரி தொகுதியிலுள்ள வடதலைக்குளம் என்ற கிராமத்தில் அருள் பாலித்து வருகின்ற அய்யனார் திருக்கோயில் முற்றிலும் சிதிலமடைந்து சேதமாகியுள்ள நிலையில், அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், வடதலைக்குளம் கிராம மக்களே ஒன்று சேர்ந்து அதைப் புதுப்பிக்க, தங்களுடைய சொந்த செலவிலே திருப்பணியைச் செய்துகொள்ள தயாராக உள்ளனர். எனவே, அந்த அய்யனார் திருக்கோயிலைப் புனரமைக்க, உரிய அனுமதியை அரசு உடனடியாக வழங்குமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** உறுப்பினர் அவர்கள் மூன்று திருக்கோயில்களைப் பற்றி இங்கே கூறினார்கள். அதில் ஒன்று, வேதபுரீஸ்வரர் திருக்கோயில், இன்னொன்று அய்யனார் திருக்கோயில், மற்றொன்று வளையமாதேவி திருக்கோயில் ஆகும். இந்த 3 திருக்கோயில்களும் இந்த ஆண்டு இறுதி டிசம்பர் மாதத்திற்குள் திருப் பணிக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்ற நற்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், நன்கொடையாளர்கள், உபயதாரர்கள் அதிகளவில் திருக்கோயில் திருப்பணி செய்ய வருகை தருகிறார்கள். இதுவரையில், இந்த ஆட்சி ஏற்பட்ட 28 மாதங்களில், 600 கோடி ரூபாய்க்கு மேலாக திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள உபயதாரர்கள் வருகிறார்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) உபயதாரர்கள் தருகின்ற நிதி முறையாக திருக்கோயிலுக்கு செலவிடப்படுகிறது என்ற நம்பிக்கையால்தான் இவ்வளவு பெரிய தொகை உபயதாரர்களிடமிருந்து நிதியாகப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்கள் புனரமைக்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர் கோரிய 3 திருக்கோயில்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மேம்பாட்டிற்காக

# 33 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## மேயர் ஆர். பிரியா முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது!

சென்னை,அக்.11- பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் செயல்படும் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் திறனோடு, பன்முகத் திறன்களை வெளிக்கொணர்வதற்காக 33 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா முன்னிலையில் நேற்று (10.10.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 420 தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் திறனோடு, பன்முகத் திறன்களை வெளிக்கொணர்வதற்காக பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தாமாக முன்வந்துள்ளன. இவற்றை கிரமமாக நடைமுறைப்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி 33 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்துள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், சென்னை பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும், கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தவும், பருவ வயது குறித்த விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதல், வாழ்க்கைத்திறன் கல்வி குறித்து பயிற்சி வகுப்புகள், மூன்று கட்டங்களாக கணிதம், ஆங்கிலம், Stem மற்றும் Financial Literacy வகுப்புகள், நவீன வகுப்பறைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், வாழ்க்கைத் திறன் பயிற்சிகள், Career guidance மற்றும் கணித வகுப்புகள், மாணவ, மாணவியரை உறுதியான, பாதுகாப்பான சமுதாயமாக உருவாக்குவதற்கான பயிற்சி, மழலையர் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி, மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்துதல், தொழில் வழிகாட்டுதல் பயிற்சி, மாணவர்களின் பரஸ்பர நன்மை குறித்த பயிற்சி, உடற்பயிற்சி மற்றும் பல்வேறு திறன் மேம்படுத்தும் பயிற்சி, மாணவர்களின் மனநிலையை மேம்படுத்திட பயிற்சி, சிக்கல் தீர்க்கும் திறன் விழிப்புணர்வு வகுப்புகள் மற்றும் நிஜ வாழ்க்கை சவால்களை எதிர்கொள்வதற்கான பயிற்சி உள்ளிட்ட பன்முகத் திறன்களை வெளிக்கொணர்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார் , கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம் , துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மற்றும் அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முதல்வரின் அறிவுரையேற்று

# அனைத்துப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு விரைவான நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

**சென்னை, அக்.11– சட்டப் பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது வினாக்களுக்குப் பதிலளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, 'முதல்வர் அவர்களின் அறிவுரையேற்று, தமிழ் நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் வகுப்பறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்புகளையும் மேம்படுத்த, உடனே அவற்றை நிறைவேற்றித் தர, கழக அரசு விரிவான விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது' என புள்ளி விவரங்களுடன் குறிப்பிட்டார்.**



சட்டப் பேரவையில், நேற்று கேள்வி நேரத்தின் போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**டாக்டர் தி.சதன் திருமலைக்குமார்:** வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், புளியங்குடியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வக அறைகள் கட்ட அரசு முன்வருமா? ஆம் எனில் எப்போது?

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** வாசுதேவநல்லூர் தொகுதி, நடையநல்லூர் வட்டம் புளியங்குடியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 452 மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 21 ஆசிரியர்கள் பணி புரிந்து வருகின்றனர். இப்பள்ளியில் 15 வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம் உள்ளது. இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வகுப்பறைகள் மற்றும் ஆய்வக வசதி உள்ளது.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** அந்தப் பள்ளியின் சிதிலமடைந்த அந்தக் கட்டடத்தை சரி செய்து, Flooring, மேற்கூரை, windows, doors எல்லாம் போட்டுத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அது மிகவும் பழமை வாய்ந்த ஒரு பள்ளிக்கூடம்தான். ஏற்கெனவே NABARD திட்டத்தின் மூலமாக 2010 ஆம் ஆண்டு அதற்கென்று 10 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வகங்கள் என்று வருகின்றபோது இயற்பியல், வேதியியலுக்கு என்று ஓர் ஆய்வகம். உயிரியலுக்கு ஓர் ஆய்வகம். அதே போன்று உயர்நிலை பிரிவிற்கென்று தனியாக ஓர் அறிவியல் ஆய்வகம் என்று ஏற்கெனவே அது செயல்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றது.

அடுத்து, உட்கட்டமைப்பு என்று வருகின்றபோது கழிவறைகளாக இருந்தாலும் சரி, அது மாணவர்களுக்கு தேவையான எண்ணிக்கையில் அதுவும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. இருந்தாலும், இன்றைக்கு நீங்கள் சொல்லியிருக்கின்ற படியால், அங்கேயிருக்கின்ற எங்களுடைய CEO's மூலமாக அதற்கான கருத்துகள் பெறப்பட்டு, உள்ளபடியே அதுபோன்று இருந்தது என்று சொன்னால், அதற்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு, அதனை உடனடியாகக் கட்டித் தருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நம்முடைய அரசாங்கம் செய்துதரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** பதிலுக்கு மிக்க நன்றி. அங்கே தனியார் பள்ளிகள் புற்றீசல்போல் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. அரசு பள்ளிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு அந்த infrastructure இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு, அதை செய்து தர வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து, குறிப்பாக கல்வியும், மருத்துவமும் தனது இரு கண்கள் என்று இன்றைக்கு உழைத்துக் கொண்டிருப்பவர் நம் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்கு அவருடைய வழிகாட்டுதலின்படி, அரசு பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம் என்பதை எல்லாவிதத்திலும் அதை நிறைவேற்ற வேண்டுமென்கின்ற வகையிலேதான் இன்றைக்கு நாங்களும் உழைத்துக் கொண்டிருக்கின்றோம். Infrastructure என்று வரும்போது ஏற்கெனவே 418 பள்ளிகளுக்கு தேவையான 2,394 கூடுதல் வகுப்பறைகள், 51 ஆய்வகங்கள், 10 மாணவ, மாணவிகள் தங்குகின்ற hostel வசதி இவைகளுக்கெல்லாம் இன்றைக்கு தனியாக 813 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான நிதிகளெல்லாம் இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. . . . .

அதை நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் பேசியிருக்கிறோம். மிக விரைவில் அதை நாங்கள் தொடங்கி வைப்போம்.

உங்களுக்கே தெரியும். கடந்த மாதம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் RD Department மூலமாக Elementary schoolsக்கு என்று தனியாக ஒரு 1000 வகுப்பறைகள் கட்டி அதைத் திறந்து வைத்துவிட்டோம். இப்போது இந்த மாதத்தில் அடுத்த 1000 கட்டிடங்கள் தயாரான நிலையில் இருக்கின்றது. அதையும் நாங்கள் திறந்து வைக்க இருக்கின்றோம். இந்த Elementary மட்டுமல்ல உயர்நிலை, மேல்நிலைபள்ளி என்று வரும்போது, NABARDஐ சார்ந்து இருக்கின்ற அந்த நிதிகள் வரும்போது நமக்கான அந்த 85, 15 சதவிகிதம் அந்த மாநில ஒன்றிய அரசுக்கான பங்கீட்டில் அதற்கான பணிகளும் மிக விரைவில் தொடங்கவிருக்கும். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று வரும்போது, மிகவிரைவாக அதற்கான கட்டடங்களும் கட்டி முடிக்கப்படும் அதற்கு உங்களுடைய பள்ளியும் அதற்கான வகுப்பறை தேவை ஏற்படும் போது கட்டித்தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ. ராஜேஷ் குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் முஞ்சிறை அரசு மேல்நிலைப் பள்ளியும், கொல்லம்கோடு நகராட்சியில் கொல்லம்கோடு அரசு மேல்நிலைப் பள்ளியும் இந்த இரண்டு பள்ளிகளில் அதிகமாக மாணவ, மாணவியர்கள் படித்து தேர்ச்சி பெற்று வருகின்றனர். ஆனால், அந்த இரண்டு பள்ளிகளிலும் கட்டடங்கள் மிகவும் சிதலம் அடைந்திருக்கிறது. அந்தக் கட்டடங்களைப் போர்கால அடிப்படையில் அதை செய்துதர வேண்டும்.

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** நான் ஏற்கெனவே சொன்ன மாதிரிதான். 418 பள்ளிக்கூடம் இல்லாமல் மேலும் 173 பள்ளிக்கூடங்களுக்கு கிட்டத்தட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றைக்கு 215 கோடி ரூபாய்க்கு உட்கட்டமைப்பு வசதிக்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது இல்லாமல், கூடுதலாக இன்றும் ஒரு 252 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கணக்கீடுகள் செய்யப்பட்டு, அதற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது இல்லை. அந்ததந்த பகுதியைச் சார்ந்து இருக்கின்ற CEOs மூலமாக localஇல் இருக்கின்ற அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற அந்த detailsஐயும் நாங்கள் பெற்றுக்கொண்டு, இதுஇல்லாமல் பத்திரிக்கைச் செய்தி மூலமாக வருகின்றதற்கும் நாங்கள் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டுமென்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அதற்கும் இன்றைக்குத் தனியாக நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மிக விரைவாக இந்த fund எல்லாம் வரவர அதற்கான வேலைகள் உடனடியாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, ஏனென்றால் two weeks முன்னால் அவர்கள் department சார்ந்து ஒரு கூட்டமே போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு target fix செய்திருக்கிறார்கள். இத்தனை மாதத்திற்குள் இத்தனை கட்டடங்கள், இத்தனை வகுப்பறைகள் கட்டி முடிக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும், அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு இன்னும் விரைவாக அந்தப் பணிகளை முடிக்கின்ற பணியில் நாங்களும் எங்களை ஈடுபடுத்திக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ. ஸ்டாலின் குமார்:** என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளியானது பழமையான கட்டிடத்தில் 1600 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு 25 புதிய வகுப்பறைகளும், ஆய்வக கட்டிடமும் பெண்களுக்கு கல்வி வழங்கிட திட்டமும், பெண்களுக்கு சொத்துரிமை வழங்க சட்டமும் தந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இப்பள்ளியானது ஏற்கெனவே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இயங்கிவந்த பள்ளியானது, தற்போது அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டு விழா வைக் கொண்டாடும் இந்த தருவாயில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இப்பள்ளியை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி என்று பெயர் மாற்றம் செய்தும், புதிய கட்டிடமும் வழங்க அமைச்சர் முன்வருவாரா?

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** ஏற்கெனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இது சார்ந்து என்னிடம் பலமுறை அதற்கான கோரிக்கையை வைத்திருக்கிறார். நாங்களும் துறையூர் பகுதிக்கு செல்லும்போதெல்லாம் அதனை பார்வையிட்டிருக்கின்றோம். கண்டிப்பாக இன்றைக்கு இருக்கின்ற அந்த சட்டதிட்ட விதிகளின்படி, ஏனென்றால், அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயர் இருந்தபொழுது, அவர் உயிருடன் இருந்தபோது வைத்த பெயர். இப்போது அதற்கான சட்டதிட்டங்களும் மாற்றப்பட்டிருக்கிறது என்பதால் அதை எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், துறை சார்ந்து அதற்கான சாத்தியக்கூறு என்ன என்பது அறிந்து கொள்ளவேண்டும். அதே போன்று, கட்டிடங்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்ன பதில்தான் எல்லாவற்றுக்கும் அது பொருந்தும். ஆக அதற்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது, ஏற்கெனவே சட்டமன்றத்தில் இருக்கின்ற பல்வேறு இயக்கத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் இந்த இந்த கட்டடங்களை புதுப்பித்துத்தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம். அதுமட்டுமல்லாமல் ஒரு 166 கோடி M&R (Maintenance and Repair)க்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு CEOsக்கும் இதை நாங்கள் அனுப்பி இருக்கிறோம். எதெல்லாம் உடனடியாக செய்யவேண்டுமோ அதற்கான பணிகள் நம்முடைய CEOs மூலமாக அந்த நிதிகள் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். வருங்காலத்தில் நீங்கள் கேட்கின்ற ஒவ்வொரு அந்த பள்ளிக்கூடங்கள் கட்டிடங்களாக இருந்தாலும், புதிய வகுப்பறைகள், ஆய்வகமாக இருந்தாலும், கழிவறைகளாக இருந்தாலும் உடனடியாக கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளை நாங்கள் செய்வோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொழில்துறை சார்பில் சென்னை லீலா பேலஸில் நேற்று (10.10.2023) நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் (INDUSTRY ENGAGEMENT MEET) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் 2023 அக்டோபர் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய பாரா விளையாட்டு போட்டியில் பங்கேற்க செல்லும் மாற்றுத்திறனாளி வாள்வீச்சு வீராங்கனை செல்வி.ஷெராந்தி தாமஸ் அவர்களுக்கு ரூபாய் 8இலட்சம் நிதியுதவியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா , அரசு உயர் அலுவலர்கள் உடனியிருந்தனர்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு. கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 1 கோடியே 6 லட்சம் மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகை வழங்கி

# கிராம மக்களிடையே பணப் புழக்கத்தை ஏற்படுத்தி வாழ்வாதாரத்தை உயர்த்திய முதல்வருக்கு நன்றி!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்

காஞ்சிபுரம், அக். 11 -

தமிழ்நாட்டில் உள்ள 1 கோடியே 6 லட்சம் மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகை வழங்கி கிராம மக்களிடையே பணப் புழக்கத்தை ஏற்படுத்தி ஏழை எளிய நடுத்தர குடும்ப மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய மக்கள் போற்றும் வகையில் மகத்தான ஆட்சியை நடத்திடும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்து பாராட்டி மகிழ்வதாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயற்குழு உறுபினர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் தா. மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வண்டலூர் அடுத்த கொளப்பாக்கம் பாலாஜி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

செங்கல்பட்டு நாடாளு மன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், டாக்டர் ஆர்.டி.அரசு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமாறன், ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செ ல்வன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர், து.காமராஜ், எஸ்.இந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தே மாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு. தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர். சதீஷ்குமார், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, செ. அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி. கே.கமல கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகி ராமன், எல்.பிரபு, என்.கனகராஜ், பா.ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், எஸ். ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா. செந்தில் தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், ஆர்.கே. சையத்யூசுப், பொன்.ரமேஷ் கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், உதயா கருணாகரன், சசிகலா, கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு, தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா. மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

சென்னையில் அக்டோபர் 14 மகளிர் உரிமை மாநாடு கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கழக மகளிர் அணி சார்பில் அக்டோபர் 14 ஆம் தேதி அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் அன்னை சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே, பீகார் மாநில உணவுத் துறை அமைச்சர் ஐக்கிய ஜனதா தள தேசிய நிர்வாக குழு உறுப்பினர் லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சுபாஷினி அலி, இந்திய கம்யூனிஸ் கட்சி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் ஆனி ராஜா, திரிணாமுல் காங்கிரஸ் தேசிய செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் பெண் தலைவர்கள் கலந்துக் கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மகளிருக்கு தினம் தினம் சிறப்பான நல்ல பல திட்டங்களை தந்து பெண்களுக்காக நடைபெறும் ஆட்சி என அனைவரும் வியக்கும் வண்ணம் திரவிட மாடல் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கும் நம்முடைய ஒப்பா ரும் மிக்காருமில்லா மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் போற்றும் மகத்தான ஆட்சிக்கு வலிமை சேர்க்கும் வகையில், நடைபெற உள்ள பெண்ணுரிமை போற்றும் வரலாற்று சிறப்பு மிக்க இம்மாபெரும் மகளிர் உரிமை மாநாட்டில்,

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தாம்பரம் மாநகராட்சி மேயர், மாவட்ட ஊராட்சி தலைவர், மாவட்ட ஊராட்சி ஒன்றிய நகராட்சி பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் இடம் பெற்றுள்ள பெண் பிரதிநிதிகள் 10,000க்கும் மேற்பட்ட மகளிர் அனைவரும் இம்மாநாட்டில் கலந்துக் கொண்டு மாநாட்டை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தை தந்து கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட்ட

#### முதல்வருக்கு நன்றி

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் அன்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கிடும் அற்புத திட்டமான கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து தமிழகத்தில் உள்ள 1 கோடியே 6 லட்சம் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கி ஏழை, எளிய நடுத்தர குடும்பங்களின் வாழ்வாதரத்தை உயர்த்தியதோடு, கிராம மக்களிடம் பணப்புழக்கத்தை ஏற்படுத்தி, கிராமங்களின் பொருளாதாரத்தை உயர்த்திட்ட, மக்கள் போற்றும் வகையில் மகத்தான ஆட்சியை நடத்திடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் பாராட்டி மகிழ்கிறது.

#### புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் ஈடுபடுவீர்

இந்திய தேர்தல் ஆணையம் 1.1.2024ஆம் தேதியை தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக வரைவு வாக்காளர் பட்டியல் வருகிற அக்டோபர் 27ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது. அக்டோபர் 27ஆம் தேதி முதல் டிசம்பர் 12ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் இடம் மாறிய வாக்காளர்கள் பெயர்களை சேர்த்தல், இறந்த இடம் மாறிய வாக்காளர்கள் பெயரை நீக்கம் செய்தல், பெயர் முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 6, 6பி, 7, 8 ஆகிய படிவத்தில் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் தந்திடவும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின் படி, வருகின்ற 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி அன்று, 18 வயது நிறைந்த வர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ளபட வேண்டும் என்றும்,

தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் நவம்பர் 4, 5, சனி, ஞாயிறு மற்றும் நவம்பர் 18, 19, சனி, ஞாயிறு ஆகிய 4 நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்டம் முழுவதும், அந்தந்த வாக்குச்சாவடி மை யங்களில் நடைபெற உள்ளது என்றும்,

மாவட்டம் முழுவதும், சாதாரண நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் 4 நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்றும், நாடாளுன்ற தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமா னது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்றும், வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் இச்சிறப்பு பணியில் மாநகரபகுதிஒன்றியநகரபேரூர் கழக செயலாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நேரில் சென்று, கழகத்தினர், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் இணைந்து இப்பணியை சிறப்பாக செய்கி றார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக முடிவெடுக்கி றது.

#### கூட்டுறவு சங்கத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறவேண்டும்

விரைவில் நடைபெறவுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில், தகுதி உடைய கழகத்தினர் அனைவரையும் உறுப்பினர்களாக சேர்த்து, அவர்கள் பல்வேறு பொறுப்புகளுக்கு போட்டியிட்டு, கிராமப்புற உள்ளாட்சி தேர்தல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றது போல, நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு அமைப்புகளிலும் நடைபெறும் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் கழகத்தினர் போட்டியிட்டு மாபெரும் வெற்றியை பெறுவதற்கு கழகத்தினர் அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும் என்று காஞ்சி வடக்கு மாவட்ட கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

சேலத்தில், டிசம்பர் 17 அன்று நடைபெறும் இளைஞரணி 2வது மாநில மாநாட்டிற்கு சுவர் விளம்பரம், வருகிற டிசம்பர் மாதம், 17ஆம் தேதி, சேலத்தில் கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக இளைஞரணி 2வது மாநில மாநாட்டை, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் சுவர் விளம்பரங்களை எழுதி, பட்டி தொட்டியெங்கும் இம்மாநாட்டை பற்றி விளம்பரப்படுத்த வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா. மோ.அன்பரசன் கூறினார்.

### பொருள்கள் பெற அனைத்து குடும்ப அட்டைதாரர்களும்

# நியாய விலைக் கடைகளில் இனி கைவிரல் ரேகை பதியத் தேவையில்லை!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

சென்னை,அக்.11-

பொருள்கள் பெற அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று கைவிரல் ரேகை பதியத் தேவையில்லை என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு வழங்கும் அரிசியைப் பெறும் குடும்ப அட்டைதாரர்களின் விவரங்களைப் புதுப்பிக்க ekyc (இணைய வழியில் உங்கள் நுகர்வோரை அறிந்து கொள்ளுங்கள்) என்ற முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி குடும்ப அட்டையிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் பொது விநியோகத் திட்ட அங்காடிகளிலுள்ள கருவி மூலம் கைரேகைப் பதிவு அல்லது கருவிழி வழிப் பதிவு வழியாகத்



தங்கள் விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இது நடைமுறைப்படுத்தப்பட்டு 45% குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறின்றி இப்பணியினைச் செய்திட அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஓய்வாக இருக்கும் போதோ அல்லது பொருள்கள் வாங்க கடைக்கு வரும்போதோ கைவிரல் ரேகைப் பதிவு மூலம் புதுப்பிக்கக் கூறப்பட்டிருந்தது. சில இடங்களில் அனைத்து உறுப்பினர்களும் வந்தால்தான் பொருள்கள் பெற முடியும் என்று தவறுதலாகக் கூறப்பட்டதாகக் கேள்விப்பட்டவுடனே அவ்வாறு செய்யக் கூடாது என கடுமையாக எச்சரிக்கப்பட்டது. குடும்ப அட்டைதாரர்கள் அவரவர்கள் வசதிக்கேற்ப விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

அவ்வாறு இயலவில்லையெனில், இதற்கென தனி முகாம்கள் நடத்தவும், தேவைப்படின் வீட்டிற்கே சென்று புதுப்பித்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக பொதுமக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை எனவும் குடும்ப அட்டைகள் இதனால் இரத்து செய்யப்படமாட்டாது எனவும் குடும்ப அட்டைதாரர்கள் வழக்கம்போல் கடைக்கு வந்து தங்களது பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் நேற்று (10.10.2023) சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் தெரிவித்தார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறள்



சென்னை, அக். 11 -

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று (10.10.2023) படித்த திருக்குறளும் - அதற்கான ‘கலைஞர் உரை’யும் வருமாறு:-

**“ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்**

**கருதி இடத்தாற் செயின்”**

**கலைஞர் உரை :** உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமே கூடக் கைக்குள் வந்துவிடும்.



சென்னை, கலைவாணர் அரங்கில், நேற்று (10.10.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் காட்சி ஊடகங்களில் பணிபுரியும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் ஆகியோர் தமிழ் மொழியினை சிறப்பாக உச்சரிக்கும் வகையில் சிறப்பு பயிற்சி வகுப்பை தொடங்கி வைத்து, பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

நான்காம் ஆண்டு நினைவாஞ்சலி!



திருமதி. சாரதாமணி கந்தப்பன்

13.07.1945 - 11.10.2019

W/o. Late. செ.கந்தப்பன் Ex. M.P., Ex. M.L.A.,

என்றும் உங்கள் நினைவில்

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்

# திராவிடப் போராளிகள்

38

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## திராவிட இயக்கப் பெண் சிங்கம்!



ஓவியம் : ரவி பேலட்

அன்னை சத்யவாணிமுத்து அம்மையாரின் வாழ்க்கை, போராட்டங்களும் சாதனைகளும் நிறைந்தது. சத்தியவாணி-முத்து தம்பதிக்கு அறச்செல்வன், சித்திரைமுகி, மரகதமணி, செழியன் என நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டத்தில் பங்கேற்று சத்தியவாணிமுத்து அவர்கள் சிறை சென்றார். அப்போதும் அவர் நிறைமாத கர்ப்பிணி. சிறையிலேயே அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற நெடுஞ்செழியன் என்ற தி.மு.க. தொண்டர் சிறையிலேயே இறந்துவிட்டார். எனவே, அவரது நினைவாக சிறையில் பிறந்த தன் மகனுக்கு செழியன் என்று பெயர் சூட்டினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, அவரது அமைச்சரவையில் செய்தித்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலன் (அப்போது அரிசன நலன் என்று பெயர்) அமைச்சராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார். ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டினார். ஆதிதிராவிடர் சமூகத்தில் பிறந்தவரைக் கலப்பு மணம் செய்துகொண்டால், தங்கப்பதக்கம் வழங்கும் திட்டத்தை முதல்வர் அண்ணாவின் ஒப்புதலுடன் உருவாக்கினார்.

### தமிழ் சினிமாக்களுக்கு விருது!

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் சிறந்த திரைப்படங்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பாக பரிசுகள் வழங்கும் திட்டத்தை அவர்தான் நடைமுறைப்படுத்தினார். ஆதி திராவிடர் சமூகத்தினர் தொழில் தொடங்க கடன் உதவி வழங்கவும், கூட்டுறவுத் துறை மூலம் விவசாயிகள் பயன்பெறவும் சிறந்த திட்டங்களை அறிமுகப்படுத்தினார். தமிழ்ப் பண்பாட்டுத்துறையின் தூதராக மொரீஷியஸுக்குச் சென்று பல நிகழ்வுகளில் உரையாற்றினார்.

மேலும் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்து பல புதிய திட்டங்களை இங்கு அறிமுகப் படுத்தினார். குறிப்பாக, பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் திறக்கப்படவும், ஆதரவற்ற பெண்கள், குழந்தைகளுக்கான இல்லங்களை நடத்தவும் முன்னோடித் திட்டங்களை வகுத்தார். அவரது சமூகப் பணிகளுக்காக அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

### பெண்ணால் பெண்களுக்கான ஏடு

‘கல்வியே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கருவி’ என்ற அண்ணல் அம்பேத்கரின் சிந்தனையை உணர்ந்திருந்த அம்மையார், சென்னை மாவட்டத்தின் ஆதிதிராவிடச் சமுதாய மக்கள் நிறைந்திருந்த வியாசர்பாடி பகுதியில் அண்ணல் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியை நிறுவ, பெருமுயற்சி எடுத்து, முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலுடன் அதனை நிறைவேற்றினார். இந்தக் கல்லூரி ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பெறுவதற்கு உதவியது. இன்றும் உதவி வருகிறது.

அரசியலைப் போலவே இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்த சத்தியவாணிமுத்து, பெண்களிடம் திராவிட இயக்கக் கருத்துரை பரவுவதற்கு ஏற்ற வகையில் **‘அன்னை’** என்ற மாத இதழை 1958-ஆம் ஆண்டு தொடங்கினார். **‘அன்னை’** இதழ் அறிமுக விழாவில் சி.பி.சிற்றரசு அவர்கள் தலைமையேற்க, பேரறிஞர் அண்ணா, இனமானப் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சிறந்த கவிதைகள், அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், மருத்துவக் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி, அந்த இதழ் சிறப்பாக வெளிவந்தது. திராவிட இயக்கத்தில் பெண்களுக்காக ஒரு பெண்ணே நடத்திய முதல் ஏடு என்ற பெருமையை ‘அன்னை’ பெற்றது. அதன் அடையாளமாக ‘அன்னை’ சத்தியவாணிமுத்து என்றே அம்மையார் அழைக்கப் பெற்றார்.

### தி.மு.க.விலிருந்து விலகல்

அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது சத்தியவாணிமுத்து அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறையின் அமைச்சராகப் பணியாற்றினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராகவும் செயல்பட்டார்.

இவ்வாறு செயலாற்றி வந்த அம்மையார் 1974-ஆம் ஆண்டு சில கருத்து முரண்பாடுகள் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி ‘தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்’ என்ற ஓர் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த இயக்கத்தை எம்.ஜி.ஆர் தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைத்துவிட்டு, தானும் அந்தக் கட்சியில் இணைந்துவிட்டார். 1978-ஆம் ஆண்டு அ.தி.மு.க சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினரானார்.

### மீண்டும் தி.மு.க.வில்...

1979-ஆம் ஆண்டு ஜனதா கட்சியின் ஆட்சியில் பிரதமர் சரண் சிங்கின் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகப் பணியாற்றினார். அப்போது தமிழ்நாட்டில் இயங்கும் அரசு வானொலிகளில் ‘ஆகாஷவாணி’ என்று அறிவிப்பதை மாற்றி, ‘அகில இந்திய வானொலி நிலையம்’ என்று ஒலிக்கச் செய்தார். 1984-ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க சார்பாக, மாநிலங்களவை உறுப்பினராகச் செயலாற்றினார்.

> **தமிழ்நாட்டில் இயங்கும் அரசு வானொலிகளில் ‘ஆகாஷவாணி’ என்று அறிவிப்பதை மாற்றி, ‘அகில இந்திய வானொலி நிலையம்’ என்று ஒலிக்கச் செய்தார்.**

விமர்சனங்களுக்குரிய அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண்ட காலத்தில், தி.மு.க தலைவர் கலைஞர் அவர்கள் மீது கடுமையான கருத்துக்களைத் தெரிவித்த சத்தியவாணிமுத்து அம்மையார், 1989-ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் அவர்கள் தலைமையை ஏற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். இடையில் ஏற்பட்ட பல்வேறு கசப்பான நினைவுகளைப் புறந்தள்ளி திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் தொடக்கக் கால தலைவர்களில் ஒருவரான சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களை மீண்டும் மகிழ்வுடன் வரவேற்றது.

அதுமட்டுமின்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு மிக்க விழாவாகச் செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படும் முப்பெரும் விழாவில் வழங்கப்படும் பெருமைக்குரிய விருதான ‘பெரியார் விருதினை’ 1991- ஆம் ஆண்டு சத்தியவாணிமுத்து அம்மையாருக்குக் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

### நூற்றாண்டு காணும் தலைவர்

அதன்பின் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே தொடர்ந்து செயல்பட்ட சத்தியவாணிமுத்து அம்மையார் 1999-ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று மறைந்தார். அம்மையாரின் மூத்த மகள் சித்ரமுகி இன்றும் திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் ஆலோசனைக் குழு உறுப்பினராகச் செயல்பட்டுவருகிறார்.

சத்தியவாணிமுத்து அவர்களின் பெருமையைப் பறைசாற்றும் வண்ணம் கலைஞர் அவர்களால் சென்னையின் மையப் பகுதியான சேப்பாக்கத்திலும் மந்தைவெளியிலும் எண்ணூரிலும் ஆதிதிராவிட மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளுக்கு ‘அன்னை சத்யவாணிமுத்து நகர்’ என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த ஆண்டு சத்தியவாணிமுத்து அம்மையாரின் நூற்றாண்டாகும். ‘அவரது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து மாறுபாடு இருந்தாலும் சுயமரியாதைக் கொள்கையில் இறுதிவரை அவர் காட்டிய உறுதி மறக்க முடியாதது’ என்று தன் அறிக்கையில் குறிப்பிட்டார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

### தி.மு.க.வின் பெண் சிங்கம்

அம்மையாரின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பான ஒரு விழாவாகக் கொண்டாடிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், பெண்களுக்குத் தையல் இயந்திரத்துடன் சுயதொழில் தொடங்கும் திட்டத்தை அம்மையாரின் பெயரால் தொடங்கி வைத்தார்.

மேலும் முதல்வரின் உரையில்,

**“பெண்களையெல்லாம் பேதையர் என்று**
**மண்ணினும் கீழாய் மதித்த நாளில்**
**புடவைச் சிறுத்தையாய் புறப்பட்டு வந்த**
**சத்தியவாணித் தாய் நீ;**
**சிற்றூர் பேரூர் நகரம் அனைத்தும்**
**சுற்றிய புரட்சிச் சூறாவளி நீ என்பதால்**
**ஆயிரம் சரித்திரம் அடங்கிய திராவிட இயக்கத்திலே**
**உனக்கு ஒரு சரித்திரமுண்டு;**
**அரைநூற்றாண்டு**
**பொதுத் தொண்டு செய்த பெரியாரின் மகளே,**
**நீ ஒரு நூற்றாண்டு வாழ்க”**

என்ற புலவர் புலமைப்பித்தன் அவர்களின் கவிதையை நினைவுப்படுத்தி, ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் சிங்கமாக வாழ்ந்து காட்டியவர் சத்யவாணிமுத்து அம்மையார்’ என்று அவரது பெருமையைப் பதிவு செய்தார்.

இந்த வரலாற்றுப் பதிவுகள் திராவிடப் போராளியாக வாழ்ந்து சாதனைகள் புரிந்த ‘அன்னை’ சத்தியவாணிமுத்து அவர்களின் பெருமையைப் பேசிக்கொண்டே இருக்கும்.

(வருவார்கள்...)

---

## இந்தியைக் காப்பாற்றிய தமிழ்!

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஹரியானாவின் இரண்டாம் ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருந்தது. இதைப் பலரும் தற்போது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர். ஆனால், அதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இந்தியைக் காப்பாற்றவே ஹரியானாவில் தமிழ் கொண்டுவரப்பட்டது.

1969-ஆம் ஆண்டு, பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஹரியானா உருவானது. அப்போது பஞ்சாபின் ஆட்சி மொழியான பஞ்சாபியே ஹரியானாவிலும் தொடர்ந்தது. ஆனால், ஹரியானா மக்கள் இந்தி பேசுபவர்கள் என்பதால், இந்தி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. இரண்டாவது மொழியாக பஞ்சாபியை அறிவித்தால், இந்திக்குப் பாதிப்பு ஆகும் என அப்போதைய முதலமைச்சர் பன்சி லால் தமிழை இரண்டாம் ஆட்சி மொழியாக அறிவித்தார். 2010-ஆம் ஆண்டில் தான் தமிழை நீக்கிவிட்டு, பஞ்சாபியை இரண்டாம் ஆட்சி மொழியாக்கினர்.

தமிழை வடமாநிலங்களில் கற்றுக் கொடுப்போம் என கிளம்பும் சிலருக்கு இந்த வரலாற்றினை உணர்த்த வேண்டும். இந்தி மொழி மாநிலங்கள் எந்த நிலையிலும் இரண்டாவது மொழியை உயர்த்திப் பிடிப்பதில்லை என்பதற்கு ஹரியானா உதாரணம். ஆனால், அங்கும் இந்தியைக் காப்பாற்றியது தமிழ் என்பதுதான் வரலாறு.

## :ப்ளாஷ்பேக்



### ‘அயோத்தியா’வில் கலைஞர்!



ஜெயக்குமார்

1980-களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர், சேலம் வரும்போதெல்லாம் அவரைப் பார்க்க, எங்கள் ஊர் இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு சைக்கிளில் போஸ் மைதானம் வரை செல்வோம். அப்போதிருந்தே அவரை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உருவானது. 1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சேலம் அயோத்தியாபட்டினம் ராமர் கோயில் அருகில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர் வருகை தந்தார். அப்போது ஒன்றியப் பிரதிநிதியாக இருந்த எனக்கு, அவரை நேரில் சந்தித்து சால்வை அணிவிக்கும் வாய்ப்பு அமைந்தது. சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் அவர்களும் மேடையில் இடம்பெற்றிருந்தார். என் வாழ்நாளில் மறக்கமுடியாத புகைப்படம் இது.

**-கே.ஜெயக்குமார், ஒன்றிய தி.மு.க முன்னாள் பிரதிநிதி, அயோத்தியாபட்டினம், சேலம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சில லட்சங்கள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திப்பதற்குத் தீவிரமாகத் திட்டமிட்டார் பேரறிஞர் அண்ணா. தேர்தல் நிதியை எப்படித் திரட்ட வேண்டும், பிரச்சாரம் எத்தகையதாக இருக்க வேண்டும், கழகத்தின் சின்னம் எப்படி அமைய வேண்டும் என யோசிக்கத் தொடங்கினார். அதன் வெளிப்பாடாக 1956-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற மாணவர் நிதி அளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர், ‘‘தேர்தலுக்காக நாம் சேகரிக்க நினைப்பதெல்லாம் சில லட்சம் ரூபாய்கள்தான்’’ எனத் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 266




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131